ஜகன் மோகினி

16

ஜனவரி
1951.

JAGAN MOHINI

ESTD. 1923

அணா
நான்கு

16
2-51.

OFFICE OF THE REGISTRAR OF ...
2 APR 1951
MADRAS

JL
m21:1A225m.
N51·28·1

க்ஷேமலாபங்கள்.

ஸ்ரீ கீதாசாரியனின் க்ருபாகடாக்ஷத்தினுல் இப்புத்தாண்டு நம்மெல்லோருக்கும் ஸர்வ மங்களத்தையும் அளித்து மகிழ்விக்குமாக! பால் பொங்கி, பொங்கும் மங்களம் எங்கும் தங்குக! பொங்கலோ பொங்கல்!

பொங்கலுக்கு முன்னதாகவே வெளியாகுமென்று எதிர்பார்த்த நூருவது நாவல் பாதாஞ்ஜலி பலவித அஸௌகர்யங்கள் காரணமாக சிலதினங்கள் தாமதித்தே வெளிவருமென்பதைத் தெரிவித்துக்கொண்டு, அன்பர்கள் அவஸரப்பட்டு "ஏன் வரவில்லை?" என்று கடிதமனுப்பாதிருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்பர்களின் விருப்பப்படி இவ்விதழிலிருந்து தொடர் நாவல் பிரசுரமாகிறது. "அமைதியின் அஸ்திவாரம்" அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்குமென நம்புகிறோம்.

ஏற்கெனவே தெரிவித்தபடி இவ்விதழில் ஒரு சிறு முழு நவீனமும் வெளியாகியுள்ளது. "ரோஜாமலர்" இவ்விதழில் பெரும்பகுதியை அலங்கரித்திருப்பதால் வழக்கமாக வெளிவரும் சில அம்சங்கள் வெளியிட இயலாது போயிற்று.

அடுத்த இதழிலிருந்து தொடர் நாவலும் இதர அம்சங்களும் சரிசமமாக வெளிவரும். இந்த மாதம்முதல் மீண்டும் அமுலுக்கு வந்துள்ள நியூஸ்ப்ரிண்ட் கன்ட்ரோல் திட்டப்படி எவ்வளவு பக்கங்கள் வெளியிடலாமென்று ஏற்படுகிறதோ, அதுவும் தவிர, நியூஸ்ப்ரிண்ட் பஞ்சம், அகவிலை இரண்டும் காரணமாக நிலை எப்படி மாறுகிறதோ—எல்லாவற்றையும் அனுசரித்து எவ்வளவு அதிகரித்த விருந்தளிக்க முடியுமோ அவ்வளவும் அளிக்கத் தயாராயிருக்கிறோம்.

அன்பர்களுக்கு ஒரு விஷயம் இங்கு தெரிவிக்கவேண்டியது அவசியமாகிறது. தற்போதுள்ள நிலைமையில் மோகினியின் அடக்கவிலை மிகவும் அதிகமாகிறது. விளம்பர வருமானத்தை எதிர்பார்க்காது வாசகர்களுடைய ஆதரவு ஒன்றிலேயே நிலைபெற்றிருக்கும் மோகினிக்குத் தற்போது அவரவர்களின் நண்பர்களின் ஆதரவும் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். ஏஜண்டுகள் இல்லாத ஊர்களிலும், ஏஜண்டுகள் ஒழுங்காக தேதிப்படி ப்ரதிகளை வழங்காத ஊர்களிலும், அன்பர்கள் நாணயமும் தகுதியும் வாய்ந்த ஏஜண்டுகளை சிபார்சு செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்பர்கள் தமதன்பர்களைச் சந்தாதாரராக்குவதிலும், தகுந்த ஏஜண்டுகளை சிபார்சு செய்வதிலும் சிறிது ச்ரத்தை காட்டிப் பேருதவி செய்தால் கலைத்தொண்டுக்குப் பெரிதும் உத்ஸாகமளித்ததாகுமென்பது சொல்லாமலேவிளங்கும்.

"பாதாஞ்ஜலி"க்கு இன்னும் பணம் அனுப்பாதவர்கள் ரூ. 2. அனுப்பிப் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். உயரிய கிளேஸ் பதிப்பு—பல படங்களுடன். விரைவில் வெளிவரும்.

—வை. மு. ஸ்ரீ

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு
– திருவள்ளுவர்.

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி !
மனத்தைச் சார்ந்து.
– வீரராகவ கவி

Vol.28. விக்ருதி ஹு January.
·No·1. மார்கழி மீ 1951.

ஸகல கலா வாணியின் பொற்பாதங்களில் "மோகினி" தனது 100–வது காணிக்கையைச் சமர்ப்பிப்பதை மேலட்டை சித்திரிக்கிறது. ஷை நவீனத்தில் ஒரு துடிதுடிக்கும் கட்டத்தை இம்மேயுள்ள ஓவியம் காட்டுகிறது. உங்கள் பிரதிக்குப் பதிவு செய்தாயிற்றா?

183168

1950-ல்....!

பி. ஸ்ரீ.

'ஏனப்பா ஒரு மாதிரி முழிக்கிறாய்? உடம்புக்கு என்ன?'

'உடம்பு சரியாகத்தானே இருக்கிறது, ஸ்வாமி! ஆனால், ஆனால்...'

'ஆனால் உள்ளுக்குள்ளே எல்லாம் சரியாக இல்லையோ!'

'எப்படிச் சரியாக இருக்கும் ஸ்வாமி? எத்தனை கவலைகள் உள்ளத்தை வாட்டுகின்றன! அவசர அவசரமாக என் ஆபீஸ் வேலைக்குப் போகவேண்டியிருக்கிறது. எப்படி வேலைசெய்தாலும் முதலாளிக்கு என்மேல் நம்பிக்கை ஏற்படுவதாகத் தெரியவில்லை! நண்பர்களுக்கும் விசேஷ நம்பிக்கை இல்லை......'

இப்படி இருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். 'ஸ்வாமி' என்று அழைக்கப்பெற்றாரே அவர் தாடியும் மீசையுமாக இருந்தார். அவரை 'ஸ்வாமி' என்று அழைத்துப் பேசிக்கொண்டிருந்தவரோ ஒரு யந்திரத்தொழிற்சாலையில் உத்தியோகம் பார்த்துக் கைநிறையச் சம்பளம் வாங்கி, வயிறுநிறையச் சாப்பிட்டு, நெஞ்சு நிறையக் கவலைகளையும் நஞ்சுபோன்ற எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் சுமந்துகொண்டிருந்தவர்.

இந்தக் கம்பெனி உத்தியோகஸ்தருக்கு, வெளிப்படையாக நோக்கினால், உடல்நோய் ஒன்றுமில்லைதான். ஆனால் ஆத்மாவுடன் தொடர்பை இழந்திருக்கும் உள்ளம் எப்படி ஆரோக்கியமாக இருக்கமுடியும்? இந்த ஆத்மாவுக்குத்தான் ஆத்மா ஒன்று உண்டு என்பதிலேயே நம்பிக்கை கிடையாதே! ஏன், பரமாத்மா என்ற கடவுளிடத்திலும் நம்பிக்கை கிடையாது. வயிற்றுப் பெருமானே கண்கண்ட பெருமாள். உணவே பேரின்பம்.

இந்த நாஸ்திகரை நோக்கித் தாடிச்சாமியார் சொன்னார், 'நீரும் மும்மூர்த்திகளை உபாஸிக்கிறீர்!' என்பதாக.

'நானா? எம்மூர்த்திகளை? பிரம்மா விஷ்ணு சிவன் என்ற மும்மூர்த்திகளையும் சிருஷ்டித்தவன் மனிதன்தான் என்பது என் அபிப்பிராயம். மனிதனுடைய மூடபக்திதான் மும்மூர்த்திகளையும் படைத்துக் காத்துவருகிறது. எல்லா மூர்த்திகளையும் ஒருங்கே பீரங்கி போட்டுப் பிளக்கவேண்டிய பொறுப்பும் சக்தியும் வாய்ந்த அழித்தற்கடவுள் நம் பகுத்தறிவுதான்!' என்றார் நாஸ்திகர்.

சாமியார் சிரித்துக்கொண்டே, 'நீர் வணங்கும் மும்மூர்த்திகள் யார் யார் என்று சொல்லட்டுமா? கவலை அவசரம் அவநம்பிக்கை—உண்டா, இல்லையா?' உத்தியோகஸ்தர் திகைத்து நின்றார் சிறிதுநேரம். 'நம்முடைய நோயை எவ்வளவு தெளிவாகக் கண்டு பிடித்துவிட்டார் இந்தப்பொல்லாதசாமியார்! என்று எண்ணினார்.

பிறகு சாமியாரின் முகம் பார்த்து உத்தியோகஸ்தர், 'ஸ்வாமி, நோயைச்சரியாகச்சொல்லிவிட்டீர்கள். இந்த நோய்க்கு வைத்தியம் இல்லையோ?' என்று மெள்ளக்கேட்டார்.

'ஏன் இல்லை? உம்முடைய ஆத்மஸம்பத்தை நீர் உணர்ந்து கொள்ளவில்லை. உணர்ந்திருந்தால் வைத்தியரும் கிடைத்திருக்கக் கூடுமே!

இப்போது உத்தியோகஸ்தருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. 'உம்முடைய ஆத்மாவையும் பரமாத்மாவையும்தான் பகுத்தறிவும் சுயமரியாதையும் சுட்டுக்கொளுத்தி வருகின்றனவே! அஞ்ஞானத்தை மெய்ஞ்ஞானம் அழித்து வருகிறதே!' என்றார்,



இதற்குச் சாமியார்: பதில் .சொல்லாமலே, போய்விட்டார். போகும்போதே சாமியார்,

நாலு வயித்தியரும்—இனிமேல்
நம்புதற் கில்லை யென்றார்—

என்று:பாடியது உத்தியோகஸ்தர் காதில் விழுந்தது.

சாமியார் தலைமறைந்தபின், 'என்ன அமைதியான முகம்!' என்று அதிசயித்த வண்ணம் உத்தியோகஸ்தர் ஒரு சாய்வு நாற்காலியில் போய்ச் சாய்ந்துகொண்டார். பிறகு பலபல ஆலோசனைகள் சித்தக்கடலில் அலையலையாக எழுந்தன.

இன்றைய நாகரிகத்திற்கே எனக்குப் பிடித்திருக்கும் மூன்று நோய்களும் பிடித்திருப்பதுபோலத்தான் தோன்றுகிறது. யுத்தக் கவலை கொஞ்சமா இந்த நாகரிக உலகத்திற்கு? எவ்வளவு அவசரமாக இந்த நாகரிகம் பொருளையும் போர்க்கருவிகளையும் பெருக்கிக்கொள்கிறது! அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே தான் எவ்வளவு அவநம்பிக்கை! பரஸ்பர அவநம்பிக்கையும், போர்க்கவலை வறுமைக்கவலைகளும் வாழ்க்கையை நரகவாழ்க்கையாக்குகின்றனவே! வேகமாய், படுவேகமாய்ப் படுகுழிக்கு அருகே வந்துவிட்டது நாகரிகம்!' என்றெல்லாம் எண்ணமிட்டார்.

மறுபடியும் சிந்தனை - அலைகளுக்கிடையே மூங்கி மூழ்கினர். ஐரோப்பாவும் ஒரு காலத்தில் மதப்பித்தம் கொண்டிருந்தது. ஆனால் நாளடைவில் பித்தம்தெளிய விஞ்ஞான மருந்தைக் கண்டு கொண்டது. இந்தியராகிய நாமோ பழைய மதப்பைத்தியத்தி லிருந்து இன்னும் தெளிவு பெறவில்லை. மேலும் மேலும் அபின் சாப்பிடுவது பைத்தியத்தை அதிகப்படுத்தாதா? வேத ரிஷிகளின் பரம்பரையோ, ரமணரிஷி, அரவிந்தயோகி ஆகிய வர்கள் வரையிலும் நீண்டு இடையறாது தொடர்ந்துவந்திருக் கிறது. அரசியல் - போராட்டத்தில் விசேஷமாக ஈடுபட்ட காந்தியடிகளும் ஆத்மாவென்றும் கடவுளென்றும் பிரார்த்தனை யென்றும் அஹிம்ஸையென்றும் சத்தியமென்றும் சொல்லிக் கொண்டுதானிருந்தார். இத்தகைய மனப்பான்மையை இந்தி யாவின் சூட்சுமமேதை யென்றும் சொல்லுகிறார்களே—மேதையா பேதையா, போதையா ஒன்றும் விளங்கவில்லையே!

இப்படி யெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டிருந்தவருக்கு’ இன்றைய இந்தியாவைப்பற்றிய கவலைகள் அதிகமாக அலை பாய்ந்தன. அடிமை - இந்தியா சுதந்திர - இந்தியா ஆகிவிட்டது உண்மைதான். ஆனால் இந்தச் சுதந்திர இந்தியா பசிதீர உண்டு பிழைத்திருக்குமா? சுபிட்ச இந்தியாவாகிப் புதுவாழ்வு — பெரு வாழ்வு வாழப்போகிறதா? மேலைநாடுகளைப் பீடிக்கும் கவலை அவசரம் அவநம்பிக்கை என்ற நோய்கள் சுதந்திர இந்தியாவை யும் பிடிக்கத்தானே செய்கின்றன. இந்த நிலையில் மதநம்பிக்கை களும் ஏழை இந்தியாவைப் புதுமை நெறிவிட்டுப் பழைய காட்டுப் பாதைகளில் திருப்பி இழுத்துப்போகவேண்டுமா?

சுதந்திர இந்தியாவைத்தான் வெள்ளைக்காரர்கள் நல்ல நிலை யில் விட்டுப்போனார்களா? எத்தனை பொத்தல்களோடு கூடிய போர்வையுடன் அன்னையைக் குளிரில் நடுங்கவிட்டுப்போனார்கள்! கிழிசல்களைத் தைக்கவேண்டியது ஸர்தார் பட்டேலின் பெரும் பொறுப்பாகிவிட்டது! ஸர்தாரின் பிரிவு எத்தகைய மகத்தான நஷ்டம் தேசத்திற்கு! பர்தோலிவீரரின் ரணசிகித்ஸையல்லவா சுதந்திர இந்தியாவின் ஒருமையை ஒருவாறு காத்து ஆரோக்கிய நிலையில் விட்டுவைத்திருக்கிறது?

பட்டேலின் பிரிவை நினைத்ததும் நமது உத்தியோகஸ்தரின் கண்களிலும் நீர் துளித்தது. ஆனால் இத்தகைய பலவீனத்தை ஸர்தார் விரும்புவாரா? ‘ஸர்தாரைக் குறித்தும் கவலைப்பட வேண்டியதில்லை; ஸர்தாரைப் பிரிந்த நம் தாய்நாட்டைக் குறித் தும் அவநம்பிக்கை கொள்ளவேண்டியதில்லை’ என்று தீர்மானித் தார், ஸர்தாரின் வாழ்க்கை வரலாறுகளை நினைத்துப்பார்த்ததும்.

ஸர்தார் பட்டேலின் வீரவாக்கியங்களில் ஒன்று நினைவிற்கு வந்தது; ‘நமது தேசத்தில் போதுமான இயற்கைச் செல்வம் இருக்கிறது......நம்முடைய அறிவைப் பயன் படுத்தி அவற்றை அபிவிருத்தி செய்துகொள்ளவேண்டும். தேசத்தின் ஆத்மாவும் சரியாக இருக்கிறது.’

‘என்ன? எனக்கே ஆத்மா இல்லையே! தேசத்திற்கும் ஆத்மா இருக்கிறதா? என்ன பேத்தல்! ஆனால் பட்டேலுக்கும் பேத்த லுக்கும் தொடர்பு இருக்கமுடியாதே!’ என்று முரண்பட்ட

எண்ண அலைகள் முழங்கின பளிச்சென்று. பிறகு 'தேசத்தின் ஆத்மா என்பது தேசமக்களின் லட்சிய பொக்கிஷம். தேச விடுதலைப்போரில் தேசத்தின் ஆத்மா பிரதிபலிக்கவில்லையா?' என்று ஒருவாறு தெளிவும் பிறந்தது.

பட்டேலின் வேறொரு மகாவாக்கியமும் நினைவிற்கு வந்தது; 'தேச விடுதலைப்போரில் வெளிப்பட்ட மகத்தான தியாகம், தன்னலமற்ற முயற்சி, ஒப்பற்ற கட்டுப்பாடு, ஒற்றுமையுணர்ச்சி ஆகியவற்றையும், இன்றைய தார்மிகச் சிதைவையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!'

தேசத்தின் ஆத்மா என்றதும் ஆத்மஞானிகளான ஸ்ரீரமணரிஷியின் நினைவும் ஸ்ரீ அரவிந்த யோகியின் நினைவும் கடல் அலைகளுக்கிடையே சூரியோதயம்போல் உதித்தன. 'ஆனல் அந்த ஞான சூரியர்களுக்கும் அஸ்தமனம் வந்துவிட்டதே!' என்ற கவலையும் ஏற்பட்டது.

ஸ்ரீ பகவான் ரமணமகரிஷி *1896*–ம் ஆண்டில் தெய்வநாட்டத்துடன் திருவண்ணமலை சென்றதும், ஓடிப்போய்த் தாயின் மடியிலே விழும் குழந்தைபோல் அண்ணுமலையாரின் ஆலயத்திலே பாதாளலிங்கக் குகையில் சாதனை செய்ததும் நினைவுக்கு வந்தன. 'பாதாளலிங்கத்திற்கும் பகுத்தறிவுக்கும் என்ன தொடர்பு!' என்ற நாஸ்திகப் புன்னகையும் உதட்டிலே தவழ்ந்தது.

திருவண்ணமலையில் பலவேறு இடங்களிலும் தவம் புரிந்தபின் ரமணர் ரமணுசிரமம் கண்டதும், பல்லாண்டுகளாக இவரது ஆத்மஜோதியின் சுடர்ப்பொறிகளாய் ஞானம் துள்ளித் தெறித்ததும், மரணபயம் சிறிதும் இல்லாமலே வாழ்ந்ததும் மறைந்ததும் மனக்கண்முன் தோன்றின. 'இத்தகைய வாழ்க்கையிலும் உபதேசங்களிலும் இன்றைய உலக வாழ்க்கைப் பிரசினைகளுக்குத் திறவுகோல் இருக்கமுடியுமா?' என்ற ஒரு பெரிய வினக்குறியும் தோன்றியது வால்நட்சத்திரம்போலே சித்தாகாசத்தினிடையே.

மனிதன் உடம்பல்ல, புலன்கள் அல்ல, மனம் அல்ல, புத்தியும் அல்ல. ஸாராம்சத்தில் ஸத்சித் ஆனந்தமாகிய பரம்பொருளே இதை ஆராய்ந்து உள்நோக்கிய திருஷ்டியுடன் கண்டுகொள்ள வேண்டும். இது ஸ்ரீரமண மகரிஷியின் உபதேசரத்தினம். ஆனல் இந்த ரத்தினம் திருப்திசெய்யுமா இன்றைய உலகப் பேராசையை, போராசையை, பெரும்பசியை, பெரும் பிணியை?

'உயிர்க்குலம் ஒன்றே; ஒரே தெய்வ உயிர் எல்லாவற்றையும் ஒன்றுகக்கோத்து ஒரே உலகமாய்க்காட்டுகிறது. ஒன்றே உயிர், ஒன்றே குலம்—இந்தப்பழையவேதாந்தமே ரமணவேதாந்தத்தின் ஜீவநாதமும். ஆனல் இதைத் தினசரி வாழ்க்கையில் அனுஷ்டித்து நம்முடைய வாழ்க்கையை ஒழுங்கு செய்துகொள்ளமுடியுமா?

மகரிஷிக்கு ஜாதிமத பேதங்கள் இல்லை. 'பேரூருக்குப் பல வழிகள்' என்றிருந்தார். அகண்ட அன்பிலே வேற்றுமைகளும் பகைமையுணர்ச்சிகளும் கரைந்துபோகும் என்று பேசுவதுபோல்ஜொலித்தன ரமணரின் ஞானக்கண்கள். ஆனல் அவருடைய சீடர்கள் ஆடம்பரமாகப் பூஜைபுரிந்து விழா நடத்திப் பொன்னை நாடிப் புகழை நாடித் திரியவில்லையா? யுத்தபீதி என்ற ஜ்வரத்திற்கு இவர்களிடம் மருந்து கிடைக்குமா?

இப்படியெல்லாம் எண்ணமிட்ட உத்தியோகஸ்தருக்கு அரவிந்தயோகியின் பிரிவும் நினைவிற்கு வந்தது. ரமணஞானத்தைக்காட்டிலும் அரவிந்தஞானம் எழுத்திலே உருவாகிப் பதிவாகியிருக்கிறது. வாழ்க்கையின் ஸ்தூலமதிப்பையே வற்புறுத்திச் சூட்சுமமதிப்பை இழப்பது ஆபத்து என்றார் அரவிந்தர். ஆனால்சூட்சுமமதிப்புஇந்தஅணுக்குண்டுயுகத்திற்குப்பயன்படுமா?

ரமண ஞானம்போல் அரவிந்த ஞானமும் தமிழகத்திலிருந்தே உலகமெங்கும் ஒளிவீசி வந்தது. பழைய வேத விளக்கைத் தூண்டி இன்றைய வாழ்க்கையிலும் ஒளி காட்ட முயன்றார் அரவிந்தர். இந்த யோகியின் நோக்கம் மோட்சம் மட்டுமன்று; தெய்வ வேலையை இங்கே செய்து மனிதன் தன்னைத் தயாரித்துக் கொள்வதும் அரவிந்த யோக வழிதான். ஆனால் ஐன்ஸ்டீன் என்ற விஞ்ஞான மேதாவியின் 'ரிலெடிவிடி' (Relativity) கொள்கை போல் அரவிந்த ஞானமும் பலருக்கும் புரிவதில்லையே! புரியாதது பயன்படுமா? வேத விளக்காகுமா? அரவிந்த யோகம் போக உலகிற்கு ஒளிதருமா, வழி காட்டுமா?

பெர்னார்ட் ஷா என்ற உலகப் பெருங் கலைஞரின் பிரிவும் நினைவிற்கு வந்தது. ஒரு காலத்தில் பரம ஏழையான எழுத்தாளராக இருந்து,'உடலைப் பட்டினிபோட்டாலும் மனச்சாட்சியைப் பட்டினி போடமாட்டேன்!' என்ற விரதம் பூண்டு, பேருழைப்புஎன்ற தவம்புரிந்து இலக்கிய உலகிலே சிந்தனைப் பெருஞ் செல்வராய் நாடக சிருஷ்டிகள் செய்து காட்டிய மேதாவியல்லவா? எவ்வளவு நகைச்சுவையுடன் உலகப்பிரசினைகளை அலசிப் பார்த்தார்!—வெளுத்து வாங்கினார், மனம் வெளுக்கும் சாணையில்! ஆனால் இவர்தான் உலக நோய்களுக்குப் பிரமாதமாய் என்ன வைத்தியம் செய்துவிட்டார், நாடகங்களும் நீள நீளமான முன்னுரைகளும் எழுதி எழுதி!

பெர்னார்ட்ஷாவின் இலக்கிய வைத்தியமும் உலகத்திற்குப் பயன்படவில்லை! பட்டேலின் அரசியல் வைத்தியமும் இந்தியாவுக்குப் பயன்படவில்லை. ரமண-அரவிந்தர்களின் ஞானயோக வைத்தியமும்...' என்று நம்பிக்கையற்ற உத்தியோகஸ்தர் எண்ணிக்கொண்டிருக்கும்போதே மறுபடியும்,

நாலு வயித்தியரும் — இனிமேல்
நம்புதற் கில்லை!' என்றார்

என்ற பாரதிபாட்டின் பகுதி காதில் விழுந்தது.

மறுபடியும் சாமியார் வந்துவிட்டார். அவரை நோக்கி உத்தியோகஸ்தர், '1950-ல்நம்மைப் பிரிந்த நாலுவைத்தியரும் இனிமேல் நம்மை நம்புவதற்கில்லையென்றுதானா பிரிந்துபோய்விட்டார்கள்?' என்று கேட்டார்.

'நம்பிக்கை இல்லாதவர்களை நம்புவதற்கில்லை என்பதுதான் அவர்களுடைய மனநிலை. ஆனால் உலகப்பொதுமக்களிடம் அவர்களில் ஒருவருக்கும் நம்பிக்கை அற்றுப்போகவில்லை. அவர்களுடைய நம்பிக்கை ஆத்ம நம்பிக்கை. உலகத்தின் ஆத்மாவை, தேசத்தின் ஆத்மாவை நால்வரும் நம்பித்தான் பல வேறு பணிகளும் புரிந்தனர்' என்றார் சாமியார்.

கீதா தர்மம்

26-12'-50 உமாலே ஸ்ரீ கவியோகி சுத்தானந்த பாரதியார் "மோகினி" காரியாலயத்திற்கு விஜயம் செய்து ஆசிகூறி, பிறகு மஹாத்மாஜி ஸேவா சங்கத்தில் பல புத்திமுறைகள் கூறியருளினர். நாகரிக பௌடர் ஸ்னோ லிப்ஸ்டிக் முதலிய வற்றைவிட நம் ஸத்ரீகளுக்கு மஞ்சளும்குங்குமமுமே முக்ய மென்றும், காபியை விட்டுவிடவேணுமென்றும், கதரணிய வேணுமென்றும், கீதாதர்மத்தைப் பின்பற்ற வேணுமென் றும், மிக அழகாக எடுத்துக்கூறினர்.

அதில் ஒரு பகுதி பின்வருமாறு.

பாரத மணிகாள்!

எல்லாருக்கும் வணக்கம்; எல்லாரும் வாழ்க. ஜகன் மோகினி பெண்ணுலகிற்குச் செய்துவரும் சேவைகளைப்பற்றி நான் மெச்சாத நாளில்லை. ஸ்ரீமதி கோதைநாயகியம்மாள் தம் எழுத்தாலும் செயலாலும் பெண்ணுலகிற்குச் சிறந்த வழிகாட்டி யாக விளங்குகிறார்கள். நாஸ்திகம் பரவி நமது சுதர்மங்களைக் கொலை செய்துவரும் இந்த நாளில் இந்த அம்மாள் பகவத் பக்தியும் பதிபக்தியும் கீதாபக்தியும் கொண்டு உண்மையான வைஷ்ணவ ஜீவனத்தை வாழ்ந்துகாட்டுகிறார்கள். மனித வாழ்க் கையின் உத்தேசம் தெய்வானுக்ரகம் பெறுதலேயாகும். சாப் பாடு கூப்பாடு வயிற்றுப்பாடு—இவை எல்லாப்பிராணிகளுக்கும் இருக்கின்றன. மானிட வாழ்க்கையில் பாதிக்குமேல் தூக்கத்தில் போய்விடுகிறது. வம்புகளில் பலமணிநேரங்கள் வீணாகின்றன. நாம் அறிவறிந்து கல்விகற்று நம்மை அறிந்துணரும் காலம் மிகச் சிறிது. ஒரு நாளைக்கு மூன்றுமணிநேரங்கூட ஒரே கவனமாக நாம் அறிவை வளர்க்க முடிவதில்லை. அந்தஅறிவை உள்ளே திருப்பி 'நாம் யார்? ஏன் வந்தோம்?' என்று ஆராய்வதில்லை.

எங்குற்றேம் என்ன செயல் எங்கு செலல் என்றறிவோன்
கங்குற் கடல்கடந்தோன் காண்.

வாழ்வை அஞ்ஞான இருள் சூழ்ந்திருக்கிறது. கூண்டுக்கிளி போல் ஜீவக்கிளி உலகக்கூண்டில், மயக்கச் சிறையில் அகப்பட்டு வழிதெரியாமல் தத்தளிக்கிறது. இந்த உடம்பு ஒரு கூண்டு; அதைச்சுற்றி சம்சாரம் ஒரு பந்தம்; அதைச்சுற்றி முக்குணப் போராட்டங்கள் சுருள்கத்திபோல் வீசிப் போர்புரிகின்றன; அதைச்சுற்றி ஊர்நிலை உலகநிலை காலநிலைகளெல்லாம் இரத்தப் புயல் வீசுகின்றன; மனப்போர், இனப்போர், நாட்டுப்போர், உலகப்போர் இவற்றில் ஜீவன் சிக்கிச் சுழல்கிறது; இந்த நிலை யில் "நாம் உலகிற்கு ஏன் வந்தோம்? நாம் யார்? நமது ஸத்கதி என்ன?" என்று எத்தனைபேர் ஆராயமுடியும்?. உலகத்துயர் பொறுக்கமுடியாதபோது 'ஹே ராமா, ஹே க்ருஷ்ணா, ஆபத்பாந் தவா, அநாத ரக்ஷகா' என்று அலறுகிறோம், பெருமூச்சு விடு கிறோம்; அது நமக்கு ஒரு ஆறுதல் தருகிறது. ஆனால் ராமனை யும் கிருஷ்ணனையும் நினைக்கும்போதே மனம் ரேஷன் கடைக்கு ஓடுகிறது. உப்புப்புளி மிளகாய் விவகாரம் குறுக்கிடுகிறது. பூஜை செய்ய மணியாட்டும்போதே மனம் ஸினிமாவுக்கும் கார்னிவாலுக் கும் போய்விடுகிறது. அல்லது யார்மேலாவது கோபதாபம் கொண்டு பாய்கிறது. இந்தமாதிரித் தொல்லை—மனத்தொல்லை

நமக்குமட்டுமில்லை. அந்தக்காலம் அர்ஜுனனுக்கும் இருந்தது, அர்ஜுனனுக்கு உள்ளே கார்ப்பண்யதோஷத்தால் மனப்போர் நடக்கிறது. வெளியே குருநிலத்தில் துரியோதனப்போர் நடக்கிறது. இரண்டு போர்களிலும் அலைந்தலைந்து அர்ஜுனன் கேட்கிறான்: 'கண்ணா, மனம் சஞ்சலக் காடாயிருக்கிறதே, அதை அடக்குவது மகா கடினமாயிருக்கிறதே; அதை அடைக்கியாள வழிசொல்ல உன்னைவிட யார் சமர்த்தர்?'

"ஸஞ்சலம் ஹிமன: க்ருஷ்ண, ப்ரமாதி பலவத்ருடம்,
தஸ்யாஹம் நிக்ரஹம் மன்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்॥

காற்றைப் பிடித்தடக்கினாலும் கருத்தைப் பிடித்துக்கட்டிவைக்க முடியவில்லையே என்கிறான் விஜயன். கண்ணனும் அதை ஒப்புக்கொண்டு வழிகாட்டுகிறான்: பாரதவீரனே!

அசம்ஸயம் மஹா பாஹோ மனோ துர்நிக்ரஹம் சலம்,
அப்யாஸேன துகௌந்தேய வைராக்யேணச க்ருஹ்யதே॥

"மனம் சஞ்சலக் குரங்குதான்; அடக்கமுடியாததுதான்; ஆனால் அப்யாசத்தாலும் வைராக்யத்தாலும் அதை வசப்படுத்திவிடலாம்" என்ன அப்யாஸம் செய்யவேண்டும்? என்ன வைராக்யம் நமக்கு வேண்டும்? என்பதைக் கண்ணன் தெளிவாகச் சொல்லுகிறான்:

சுற்றும்பேய் நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியே
பற்றற்று நிற்கப் பயில்.
வந்ததையும் போனதையும் வாதனைப்பட் டெண்ணாதே
சிந்தையலை யாதிருக்கச் செய்.

இதுதான் நாம் செய்யவேண்டிய அப்யாசமாகும்.

யத்ர உபரமதே சித்தம் நிருத்தம் யோக சேவையா,
யத்ரசை வாத்மனாத்மானம் பச்யன் ஆத்மனி துஷ்யதி॥

"மனம் எங்கெங்கே அலைகிறதோ, எதெதில்பாய்ந்து பற்றுகிறதோ, அததிலிருந்து மெல்லத்திருப்பி உள்ளே கொண்டுவந்து தன் வசப்படுத்தவேண்டும். மனம் பரவசமாவதே துக்கம்; மனம் ஆத்ம வசம் ஆவதே சுகம்.

நினைத்து நினைத்து நினைப்பற்று நெஞ்சே
நினைப்பற்றி நீயாய் இரு.

"ஞானவிசாரத்தாலும் ஆத்மவிசாரத்தாலும் உள்ளே தன்னை ஆராய்ந்து, சத்து இன்னது அசத்து இன்னது என்று தேர்ந்து, அசத்தை ஒதுக்கித்தள்ளி ஸத்வஸ்துவை கிரகித்தலே, பக்தி சாதனம், ஞானசாதனம்." இந்த சாதனம் மிகவும் அரியது.

மனுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஸ்சித் யததி ஸித்தயே
யததாம் அபி ஸித்தானாம் கஸ்சின்மாம் வேத்தி தத்வத:॥

"இந்தக் கலிகாலத்தில் வெள்மாயங்கள் புலனகளை இழுததுச்செல்லும்போது மனதை அடக்குவது மிக்க கடினம. ஏதோ ஆயிரத்தில் ஒருவருக்கு மனம் உள்ளே திரும்பி ஆத்மசித்திபெற எழுச்சி உண்டாகிறது. அப்படி முயன்றவர்களில ஏதோ சிலரே வெற்றியடைகிறார்கள" எனகிறான கணணன. மனிதஜனமம எடுதத தன் பயன் இனி இந்தப் பிறவிததொல்லையே இல்லாமல உயவது தான். ஒரு பையன கல்லூரியில் படிககிறான்; அவனது நோககம

என்ன? இந்தவருஷம் இண்டர்மேடியேட் ஜூனியர், அடுத்தவருஷம் இண்டர் ஸீனியர், அடுத்தது பி, ஏ. எம். ஏ. என்று மேன்மேலும் படித்தோங்கி முடிவில் கல்லூரிப் படிப்பையே தாண்டி, படித்த பலனை அனுபவிக்கவேண்டியதுதானே. படித்தபலன் ஒரு நல்ல வேலையில் அமர்ந்து அதனால் அறம்பொருள் இன்பம் வீடு ஆகிய புருஷார்த்தங்களைப் பெறுவதே படிப்பின் நோக்கம். அப்படியில்லாமல் படித்தவகுப்பிற்கே திரும்பித்திரும்பி வந்துகொண்டிருப்பது எவ்வளவு தொல்லை. அதே மாதிரி மனிதன் இந்த துக்க சம்சாரச் சுழலிலேயே சுற்றிக்கொண்டிருப்பது தொல்லையாகும். மனிதன் இந்தத் தொல்லையைத் தானே தன் வினையால் தேடிக் கொள்ளுகிறான். மச்சகந்திக்கு மலர்மணம் பிடிப்பதில்லை. துர்வாசனையில் உழலும் மனத்திற்கு நல்லவாசனை உகப்பதில்லை. ஆண்டவன் ஆன்மாக்களுக்கெல்லாம் நல்லகதி காட்டுகிறான். அவன் யாரிடமும் பாரபட்சம் காட்டவில்லை.

ஸமோஹம் ஸர்வ பூதேஷு நமே த்வேஷ்யோஸ்தி நப்ரிய:
யே பஜந்தி து மாம் பக்த்யா மயிதே தேஷுசாப்யஹம்

"நான் எல்லா உயிர்களுக்கும் சமமாயிருக்கிறேன், எனக்கு இவரிடம் வெறுப்பு அவரிடம் விருப்பு என்பதேயில்லை. ஆனால் என்னையே எவன் அனன்யபக்தி செய்கிறானோ அவன் என்னில் நான் அவனில். காந்தத்தைச் சார்ந்த இரும்பு காந்தமே யாகிறது. தீயில் வேகும் இரும்பு தீவண்ணம் ஆகிறது. அதுபோல் தெய்வபக்தியிலேயே ஊறிய ஆத்மா திவ்யப்ரகாசம் அடைகிறது. பார்த்தால் எச்சாதியானாலும் எம்மதமானாலும் பக்தர் நற்கதி பெறுவர். துராசாரிகளானாலும் என்னையேபஜிப்பவர்கள் அதிசீக்கிரம் புனிதராகி சாதுக்களாவார்கள்" என்கிறான் கண்ணன். கீதை காமத்தில் வேரூன்றி, பக்தியாகக் கிளைத்து ஞானக்கனி பழுத்து ஆத்மரசம் பொழிகிறது. உலகமெல்லாம் கர்மசாலை; ஞானமே அதன் முடிவு. ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞானே பரிஸமாப்யதே ஞானிகளுக்குள்ளும் எவர் என்னையே பஜிக்கிறாரோ, எவர் எல்லாம் வாஸுதேவமயம் என்றுணர்ந்து சம சித்தத்துடன் அன்பு செய்கிறாரோ அவரே நல்ல மகாத்மாக்கள். அத்தகைய மகாத்மா உலகில்கிடைப்பது அருமை; வாஸுதேவஸ் இதஸ் ஸர்வம் ஸமகாத்மா ஸுதுர்லப: என்கிறான் கண்ணன். ஆதலால் கீதையின் முடிவான வாசகம் அனன்ய பக்தி. இந்த உலகம் நிலையற்றது, துன்பக் காடானது; இங்கே இன்பம் வேண்டுமானால், நலம்பெற வாழ வேண்டுமானால் இறைவனைச் சரண்புகுந்து வாழ்வை அவனுக்கே நிவேதனமாக்கவேண்டும். அநித்யம் அஸுகம் லோகம் இமம் ப்ராப்ய பஜஸ்வமாம்.

எனது எனது என்னல் இடராகும், என்றும்
அவன் அது என்ன அருள்.

கடவுளன்பிற்குச் சாதிமதபேதமில்லை. யார் யார் எதெதைச் சிரத்தையுடன் உபாசிக்கிறார்களோ அந்தந்த விதத்தில் அவரவர்களுக்கு அருளுகின்றேன் என்கிறான் கண்ணன். யத்பாவம் தத்பவதி என்பது வேதாந்த வாக்கியம். பலமதத்தின் அன்பர் கடவுளைப் பலவடிவாக வழிபடுகிறார்கள். எல்லாருக்கும் உள்ளம்

ஒன்று, உள்ளப்பொருளும் ஒன்றே. அதற்கு ஒரு பாசுரம் சொல்லுகிறேன்:

யம் சைவ: ஸமுபாஸதே சிவஇதி
ப்ரஹ்மேதி வேதாந்தின:
பௌத்தா புத்த இதி ப்ரமாண படவ:
கர்மேதி நையா யின:
அர்ஹன் நித்யத ஜைனஸாஸனரதா
கர்மேதி மீமாம்ஸகா:
க்றைஸ்த்வா க்றிஸ்துரிதி க்ரியாம் பராரதா
அல்லேதி மாஹம்மதா
ஸோயம் ஸோ வததாது வாஞ்சிதபலம்
த்ரைலோக்ய நாதம் ஹரிஃ

இத்தகைய பதிஞானமில்லாமல், தன்னை அறியாமல், தலைவனை யறியாமல் கேவலம் வயிற்றையும் இந்திரியசுகங்களையுமே பெரிதாகக்கருதி வாழ்கிறவர்கள் மனித விலங்குகள் போல்வார்கள்.

ஆஹார நித்ரா பயமைது னஞ்ச
ஸாமான்ய ஏதத் பசுபிர் நராணாம்
தர்மோஹி தேஷாம் அதிகோ விசேஷ:
தர்மேன ஹீனப் பசுபி: ஸமானா:

மனிதனுக்கும்விலங்குக்கும் வித்யாஸம்என்ன ? விலங்கு சாமான்ய தர்மமாகிய ஊண் உறக்கம் ஊடல் கூடல் ஈனல் பேணல் இவற்றையே அறியும். மனிதன் விசேஷமான ஆத்மதர்மத்தை, ஸ்வதர்மத்தை, ஸன்மார்க்க சாதனத்தை அறிவான். அந்த தர்மாசாரமே வாழ்க்கையின் இன்பவேராகும். பிறப்பில் எல்லாரும் ஒன்றே. ஆனால் ஒழுக்கத்தால் உயர்வு கிடைக்கிறது. ஒழுக்கம் என்பதே ஆசாரம். ஆசாரத்திலிருந்து பிரம்ம ஐக்கியம் வரையில் நமது மகான்கள் ஒரு ஏணிப்படி கட்டியிருக்கிறார்கள். அதைச் சொல்லி என் பிரசங்கத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

ஆசார மூலா ஜாதிஃ ஸதாசார சாஸ்த்ர மூலகா:
வேத வாக்யம் சாஸ்த்ர மூலம் வேதஃ ஸாதக மூலக
க்ரியா மூலம் ஸாதகஸ்ச க்ரியாபி பல மூலிக:
பல மூலம் சுகம் சைவ சுகம் ஆனந்த மூலகம்.
ஆனந்தோ ஞான மூலம்ச ஞானம்வை ஞேய மூலகம்
தத்வ மூலம் ஞேய மாத்ரம் தத்வந்து ப்ரஹ்ம மூலகம்.
ப்ரம்ம ஞானம் ஸ்வைக்ய மூலம்ஐக்யம்ஸ்யாத் ஸர்வ மூலகம்.
ஐக்யம்ஹி பரமே ஸானம் பாவாதிதம் ஸுநிஸ்சிதம்
பாவாதீதம் இதம் ஸர்வம் ப்ரகாசோ பாவமாத்ரகம்.

இந்தமாதிரி தர்மமும், அத்யாத்ம ஞானமும் ஈஸ்வரபாவமும் ஈஸ்வரார்ப்பணமான: லோக சேவையும்; கீதாஸாரமாக விளங்குகிறது. எல்லாரும் ஸாதனம் செய்து பல்லாண்டு வாழுங்கள்!

ஸர்வே பவந்து சுகினஃ ஸர்வே பத்ராணி பச்யந்து.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி:

சுத்தானந்த பாரதி

அபூர்வ ராமாயணம்

5 க: ஸத்யவாக்ய:?

ஸ்ரீ ப்ர. ப. அண்ணங்கராசாரியர்

சென்ற இதழ் தொடர்ச்சி.

இராமபிரானுடைய ஸத்யவாதித்வப் பெருமையை இரண்டு வகையாக மூதலிக்க விரும்புகின்றோமிங்கு. இன்னின்ன சரிதைகளினால் இராமனுடைய ஸத்யவாதித்வம் விசதமாகத் தெரிகின்றதென்று நிரூபணஞ் செய்தல் முதல்வகை. இன்னின்ன கதைகளினால் இராமனுடைய ஸத்யவாதித்வத்திற்குக் குறைகாண்கிறதேயென்று க்ஷேபித்துச் சொல்வாருடைய ஆக்ஷேபவார்த்தைகளை யெடுத்துக்காட்டி அவற்றுக்குப் பரிஹார முணர்த்தும் முகத்தால் அந்த ஸத்யவாதித்வத்தை நிலைநாட்டுவது இரண்டாம் வகை.

முதல்வகையில் நிரூபணம் கேண்மின். இராமபிரானுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் நடைபெறப்போகின்றதென்பதை யுணர்ந்த கைகேயி மந்தரையினால் மனம்கலக்கப்பெற்றுக் கோபாவேசங்கொண்டு, சக்ரவர்த்தி பக்கலிலே இராமனுடைய வனவாஸத்தையும் பரதாபிஷேகத்தையும் பிரஸ்தாவித்தபோது, சக்ரவர்த்தி மூர்ச்சித்துக் கிடந்து பிறகு மூர்ச்சை தெளிந்து அக்கைகேயியை நோக்கிப் பல கூறுகின்றான்; [அயோத்தியாகாண்டம்—பன்னிரண்டாவது ஸர்க்கம்.] "அடீ கொடியவளே! இந்த வமிசத்தைக் கெடுக்கவந்த பாவியே! இராமனாவது நானாவது உனக்குச் செய்த தீங்கு ஏதேனுமுண்டோ? இராமன் பெற்ற தாய்க்குப்போலவே உனக்கும் பணிவிடை செய்துகொண்டிருக்கின்றானே! அன்னவன்மீது நீ கடியமனம் கொண்டனையே! இந்த துர்ப்புத்தி உனக்கு எங்ஙனம் உண்டாயிற்று? உன் தன்மையறியாது உன்னை இவ்வீட்டினுள் கொணர்ந்து சேர்த்துக் கொண்ட எனது புத்தியையன்றோ நிந்திக்கவேண்டும். பறவைகள் விலங்குகள் முதற்கொண்டு ஸகல பிராணிவர்க்கங்களும் புகழும்படி நற்குண நற்செய்கைகள் வாய்ந்த இராமனை எங்ஙனம் நான் வனம் போகவிடுவேன்? இராமனைவிட்டு ஒரு நொடிப் பொழுதாயினும் என்னுடலில் உயிர் தங்கியிருக்குமோ? அடி பாவீ! நீ கொண்ட கொள்கை என்னுயிரையே மாய்க்கவல்லதாகவன்றோ இருக்கிறது; இக் கொடிய கருத்தைக் கூசாது நீ என்னிடம் கூறினவளவே போதும்; இவ்வளவோடு இக்கருத்தை விட்டுத் தொலைப்பாயாக: உனக்கு நான் கணவனாக இருந்தாலும் உன் பாதங்களில் என் தலையை மடுத்துவணங்கி வேண்டிக்கொள்ளவும் கூச்சமற்றிருக்கின்றேன். கலக்கந் தீர்ந்து என்மேல் அருள்புரிவாயாக; என்றினியவார்த்தைகளைச் சொல்லிவரும்போது இராமனுடைய நற்குணங்களை நாலைந்து சுலோகங்களினால் கல்லும் உருகக் கூறுகின்றான் தயரதமன்னவன்; அவற்றுள் தலையான சுலோகம் இது;

"ஸத்யேந லோகாந் ஜயதி தீநாந் தாநேந ராகவ꞉,
குநந் சுர்நுஷயா தீரோ தநுஷா யுதி சாத்ரவாந்."

(இதன் பொருளாவது,) இராமன் ஸத்யவாக்கின் பெருமையினால் ஸகல லோகங்களையும் தானிட்ட வழக்காகக்கொண்டிருக்கிறான்; ஏழைகளைக் கொடையினால் கவர்கின்றான்; ஆசிரியர்களைப் பணிவிடையினால் கவர்கின்றான்; போர்க்களத்தில் வில்லினால் பகைவர்களைக் கவர்கின்றான்; என்பது. இவற்றுள் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்பது தலைமைபெற்ற விஷயம். இதற்கு அடுத்த சுலோகத்திலும் ஸத்யம் என்று தொடங்கி இராமனுடைய மெய்ம்மைப் பெருவார்த்தையின் மேன்மை புகழப்படுகின்றது. இங்ஙனே பலர் பலவிடங்களில் இராமபிரானது ஸத்யத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசியிருந்தாலும் மேலே குறித்த சுலோகத்தில் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்றிருப்பது விலையுயர்ந்த ரத்தனமாகக் குலாவப்படுகின்றது. பகவத்விஷயப் பேராசிரியரான நம்பிள்ளையினுடைய வைபவத்தில் 'ஸத்யேந லோகாந் ஜயதி' என்கிற இந்த ச்லோகத்தின் சார்பான சொற் பெருமை தலைசிறந்து விளங்குகின்றது. அதனைச் சிறிது விவரிப்போ மிங்கு.

பட்டருடைய ஸந்ததியில் தோன்றி மகாவித்வானாயிருந்த நடுவில்திருவீதிப்பிள்ளைபட்டரென்பவர் நம்பிள்ளை காலத்தில் திருவரங்கப் பெருநகரில் வாழ்ந்தவர். இவரும் ஓரிடத்திலே ஸ்வரூபக்ரந்தங்களைப் பிரவசனம் செய்துவந்தார். ஆனாலும் பெரும்பாலோர் நம்பிள்ளை கோஷ்டியிலேயே அந்வயித்து இவருடைய கோஷ்டியில் மிகச்சிலரே சேர்ந்திருந்தனர். அதனால் இவர்க்கு நம்பிள்ளையிடத்தில் பொறாமையுண்டாகியிருந்தது. இவர் ஒரு நாள் ராஜஸபைக்குச் சென்றிருந்தார். அவ்வரசன் மஹாவிவேகியுமாய், தன்னிடம் வருகிற பண்டிதர்களை யெல்லாம் ஸ்ரீராமாயணம் முதலிய நூல்களில் கேள்வி கேட்பவனுமாயிருந்தபடியால் இந்தப் பட்டரையும் ஸ்ரீராமாயணத்தில் ஒரு கேள்வி கேட்டான். அதாவது:

"ஸ்ரீமந்நாராயணமூர்த்தியே இராமபிரானாக வந்து திருவவதாரம் செய்திருந்தும் ஸ்ரீராமன் நாராயணத்வப்ரயுக்தமான பெருமையை அறவே மறைத்துக்கொண்டு மனுஷ்ய பாவனையையே பூர்த்தியாக ஏறிட்டுக்கொண்டு அஜ்ஞரைப் போலவும் அசக்தரைப் போலவுமிருந்தான் என்று தெரியவருகின்றது; ஸ்வாமிகளே! இப்படி நான் கிரகித்திருப்பது யுக்தமானதுதானே, பிசகல்லவே" என்று கைகூப்பிக்கொண்டு சொன்னான். அது கேட்ட பட்டர் "ஆமாம், நீங்கள் கிரகித்திருப்பது யுக்தமே; நாராணத்வப்ரயுக்தமான பரத்வத்தைக் கழற்றிவைத்துவிட்டு மநுஷ்யபாவனையில்தான் நடனம் செய்திருக்கிறார் ஸ்ரீராமமூர்த்தி; இதில் என்ன சந்தேகம்? இப்படிக்கு இசைந்தால்தான் ஸ்ரீராமாயண கதைகள் பொருந்தும்" என்று விடை கூறினர். இதைக் கேட்ட அரசன் "ஸ்வாமிகளே! அப்படியானால் இராமன் *மயா த்வம் ஸமநுஜ்ஞாதோ கச்ச லோகாந் அநுத்தமாந்* என்று சொல்லி ஜடாயுவுக்கு முத்தியளித்ததாகக் கதை காண்கிறதே, இது பொருந்துமாறு என்? அப்போது இராமன் தன்னுடைய மனைவியான பிராட்டி சென்றவிடம் அறியாமல் "மரமே! நீ பார்த்தாயா?

மயிலே! நீ கண்டாயா? குயிலே! நீ அறிவாயா?'' என்றிப்படி அஃறிணைப் பொருள்களையும் கேட்டுத் தளர்கின்ற நிலையாயிரா நின்றது; அந்நிலையில் ஜடாயுவை நோக்கி 'நான் உனக்குக் கட்டளையிடுகிறேன், மோக்ஷம் போவாயாக' என்று சொன்னார் பெருமாள் என்றால் இது பொருத்தமாக இல்லையே? ஸ்வாமிகள் இதனைப் பொருந்தவிட்டு என் மனம் த்ருப்தியடையும்படி சமாதானம் சொல்லமுடியுமோ?'' என்றான்.

கேள்வியோ வலிதாயிருந்தது. பட்டருக்கு ஸமாதானம் ஸ்புரிக்கவில்லை. கூரத்தாழ்வான் அருளிச்செய்த அதிமாநுஷ ஸ்தவத்தில் "ப்ருச்சாமி கிஞ்சந யதா கில ராகவத்வே" "அக்ஷுண்ண யோகபதம்'' என்று தொடங்கியுள்ள இரண்டு ச்லோகங்களிலும் இதே கேள்வியுள்ளது என்பதை நினைத்துக்கொண்டாரேயல்லது, கேள்விக்கு த்ருப்திகரமான ஸமாதானம் சொல்ல விரகறிந்திலர். இவருடைய அத்ருஷ்டவசத்தால் அப்போது அவ்வரசனுக்கு வேறொரு பணியில் மனவூக்கமேற்பட்டது; அன்றியும், நம்பிள்ளை திருவடிகளில் பழுக்கக் கேட்ட வொருபெரியார் யாத்ருச்சிகமாக அவ்வரச சபையில் தென்பட்டார். அவரைக் கண்டவுடனே பெருமகிழ்ச்சிகொண்டு பட்டர் அவரிடத்தில் அரசனுடைய கேள்வியை யெடுத்துரைத்து 'இவ்விஷயம் நம்பிள்ளை கோஷ்டியில் விசாரத்திற்கு வந்திருக்குமே; நம்பிள்ளை நிர்வஹிக்கும் விதம் யாது?' என்று செவியோடு செவியாகக் கேட்டார். கேட்டவுடனே அவர் "ஸத்யேந லோகாந் ஜயதி என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தைக் கொண்டு நம்பிள்ளை நிர்வஹிக்கக் கேட்டிருந்ததுண்டு'' என்று கூற, பட்டர் அதைத் தம் திருவுள்ளத்திலே கொண்டு 'இதுதான் பொருத்தமான ஸமாதானம்' என்று அறுதியிட்டுக்கொண்டார்.

வேறு பணியில் இருந்த அரசனும் அபிமுகனாகி 'ஸ்வாமிகளே! என் கேள்விக்கு ஸமாதான மொன்றும் ஸ்புரிக்கவில்லையோ?' என்றான்.

அதற்கு பட்டர், 'மஹாப்ரபோ! ஸ்புரிக்காமலென்ன? அப்போதே சொல்ல ஸஜ்ஜனாயிருந்தேன்; தாங்கள் அந்யபரராய் இருந்தபடியாலே நானும்சமயம் எதிர்பார்த்திருந்தேன்; இப்போது கேளுங்கள்' என்று பீடிகையிட்டுக்கொண்டு நம்பிள்ளை சிஷ்யரிடம் கேட்ட நிர்வாஹத்தைப் பன்னி யுரைத்தார்; அதாவது, 'இராகவன் ஸத்யவாக்கின் பெருமையினால் ஸகலலோகங்களையும் ஸ்வாதீனமாகவுடையவன்' என்று தசரத சக்ரவர்த்தி சொல்லியிருப்பதனால் அந்த ஸத்யவாக்கின் பெருமையே ஜடாயுவுக்கு முத்தியளித்ததாம். நாராயணத்வப்ரயுக்தமான பரத்வத்தினால் முத்தியளித்தபடியன்று'

பட்டர் அரசனுக்கு இதை விரிவாக உணர்த்த, அரசன் மேதாவியாகையாலே மிகவுகந்து, இங்ஙனேயல்லது வேறுவகையாக ஸமாதானம் சொல்லப் பொருந்தாதென்று துணிந்து உள்குழைந்து பட்டரை விசேஷமாக ஸன்மானித்துப் போகவிட்டான். பட்டர் ப்ராமாணிகராகையாலே அந்த ஸத்காரத்தைத் தம்முடைய க்ருஹத்திற்குக் கொண்டுபோக மனங்கொள்ளாமல், 'நம்பிள்ளையின் ஸ்ரீஸூக்திரத்நாகரத்தில் ஒரு சிறு திவலைக்குப் பெற்ற ஸத்காரமன்றோ விது' என்று உள்ளமுருகி அதை

நம்பிள்ளை திருவடிவாரத்திலே கொண்டு ஸமர்ப்பித்து 'தேவரீருடைய ஸ்ரீஸூக்திகளில் சிந்திப்போன ஒருசொல்லுக்குப்பெற்ற ஸத்காரமிது; இது காறும் அடியேன் அகன்றிருந்து அனர்த்தப்பட்டது போதும்; இனி நிழலுமடிதாறுமாக அங்கீகரித்து அடியேனை வாழ்வித்தருளவேணும்' என்று வேரற்ற மரம்போலே விழுந்துபிரார்த்தித்து அடிபணிந்து உய்ந்தார் என்பது வரலாறு.

இதனால், இராமபிரானுடைய ஸத்யவாக்கின் பெருமையை நம் முன்னோர்கள் நிரூபிக்கும் திறம் அறியலாகும். இனி இரண்டாவது வகையில் நிரூபணம் கேண்மின். ஸ்ரீராமனுடைய ஸத்யவாதித்வத்திற்கு ஸ்ரீராமாயண கதையைக் கொண்டே குறை சங்கித்து, அதற்குப் பரிஹார முணர்த்துகிறோம்.

இராமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வதாகச் சக்கரவர்த்தி நிச்சயித்து நியமனம் தந்து அதற்குப் பூர்வாங்கமாக ஆகவேண்டிய சடங்குகளும் முடிவுபெற்று அபிஷேகமாக வேண்டிய ஸமயத்தில் கைகேயியின் வாக்குக்குக் கட்டுப்பட்ட மன்னவன் இராமனுக்கு வனவாசத்தை நியமிக்கவேண்டிவந்த தென்கிற கதாசந்தர்ப்பம் யாவருமறிந்ததே. மகுடாபிஷேகம் கொண்டருள விருந்த இராமனுக்கு, முடிதவிர்ந்து சடைபுனைந்து மரவுரியுடுத்து நல்லுணவுகளை யொழித்துக் காய்கிழங்குகளைப் புசித்துக் கல்லும் முள்ளுமான காட்டு வழிகளிலே திரிந்து பதினான்கு வருஷகாலம் வனவாஸஞ் செய்ய நேர்ந்ததென்றால், உண்மையில் இது வருத்தமாக இருக்கக்கூடுமா? ஆனந்தமாக இருக்கக் கூடுமா? என்று நாம் ஆலோசிக்குமளவில், தலைவிதியென்று ஒப்புக்கொள்ளவேண்டியதாக நேர்ந்த இவ்விஷயத்தில் ஆனந்தம் எப்படியிருக்கக்கூடும்? உள்ளபடி வருத்தந்தானிருக்கும் என்றே பலரும் நினைக்கத்தக்கதும் சொல்லத்தக்கதுமாம். ஆனால், இது தவறான அபிப்பிராயமேயாகும். ராஜ்யாபிஷேகத்திற் காட்டிலும் வனவாஸத்தில் இராமபிரானுக்கு மிக்க மகிழ்ச்சியே யென்று அவன்றனது வாக்கினின்று நன்கு தெரிகின்றது. [அயோத்யா காண். 22-29.]

"மா ச லக்ஷ்மண ஸந்தாபம் கார்ஷீர் லக்ஷ்ம்யா விபர்யயே,
ராஜ்யம் வா வநவாஸோவா வநவாஸோ மஹோதய:"

என்பது இராமபிரான் சோதிவாய் திறந்தருளியவாசகம். இளையோனை நோக்கிக் கூறிய இவ்வார்த்தையில் "நமக்கு ராஜ்யமானாலென்ன? வனவாஸமானாலென்ன?" என்று முதலிற்சொல்லி, உடனே "வநவாஸோ மஹோதய:" என்று, வனவாஸந்தான் பேரின்பமென்று கூறின இராமபிரான் பொய்யாகக் கூறுமவனல்லனே; நெஞ்சிலுள்ளதை உள்ளபடி யுரைப்பவனன்றோ இராமன்.

இவ்விஷயத்தைக் கம்பர் கூறுமிடத்து வெகு ஆச்சரியமாகக் கூறுகின்றார்—"இராமன் திருமுகச் செவ்வினோக்கின்...அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றதம்மா." என்று. கலக்கிய மாமனத்தனளாய்க் கைகேசி வரம்வேண்ட மலக்கிய மாமனத்தனனாய் மன்னவனும் மறுத்தொழிய, குலக்குமரா! காடுறையப்போவென்று விடை கொடுத்தவளவிலே இராமபிரானுக்குண்டான மனமகிழ்ச்சி, இப்பொழுது எம்மனோரால் இயம்புதற் கெளிதோ?— அப்போது அத்திருமுகமண்டலத்தை நேராகச் சேவிக்கப்பெற்ற

வர்கள் பேசத் தக்கதேயல்லது அதனைக் கண்ணுற் காணாத நான் எனது புல்லிய சொல்லைக்கொண்டு அறிவிக்கப் பார்ப்பது பேதைமையன்றோ வென்று கையொழிந்து நின்ற கம்பர், மீண்டும் அதனைச் சொல்லுவதாகத் தொடங்கி "வனவாஸ நியமனம் பெறு தற்கு முன்னே இராமபிரானது திருமுகமண்டலம் தாமரையோ டொத்ததாகமாத்திரம் சொல்லலாம்படி யிருந்ததென்றும்; வன வாஸநியமனம்பெற்றபின்போவென்னில்; அப்போதலர்ந்த செந்தா மரைப்பூவின் செவ்வியிற் காட்டிலும் பன்மடங்கு மேம்பட்ட செவ்வியைப் பெற்றதென்றும் கூறி முடித்தனர்.

இங்ஙனே அதிசயமாகக் கூறுதற்குக் காரணம் *வநவாஸோ மஹோதய:* என்று இராமபிரானருளிய சொல்லேயாகும். நன்கு ஆராய்ந்துபார்க்குமிடத்து இது அஸத்யமாகச் சொன்னதே யல்லது ஸத்யமாகச் சொன்னதன்றென்றும், மகுடாபிஷேக மங்களம் தவறிப்போயிற்றே யென்கிற துக்கமேஇராமனது அடிவ யிற்றில்குடிகொண்டிருந்ததென்றும் கண்டறியும்படியாகவுள்ளது. எங்ஙனே யென்னில்; இராமன் பஞ்சவடியில் ஸீதையைப் பிரிந்த வருத்தத்தினால் புலம்புகையில், [ஆரண்யகாண், 67–25]

"ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸோ நஷ்டா ஸீதா ஹதோ த்விஜ:,
ஈத்ருசீயம் மமாலக்ஷ்மீ: நிர்தஹேதபி பாவகம்"

என்று சொல்லிப் புலம்பியது ஸ்பஷ்டமாகவுள்ளது. இதன் பொருள்யாதெனில்; "கிடைக்கவேண்டிய ராஜ்யம் அந்தோ! கிடைக்காமற் போயிற்று; ராஜ்யம் கிடைக்காமற்போனாலென்ன? நகரத்திலேயே ஒரு மூலையில் வஸிக்கப்பெற்றிருக்கலாமே; அதுவு மில்லாமல் காட்டில்வந்து திண்டாடவேண்டியதாயிற்றே; இப்படிப் பட்ட தன்றோ என் தரித்திரம்!" என்பதாம்.

இங்ஙனே புலம்புகின்றபடியை நோக்கினால் ராஜ்யமிழந்து வனவாஸம் பெற்றது பெருந்துயராகவே பெருமாளுடைய அடி வயிற்றில் உறைந்து கிடக்கிறதென்று தெரியவில்லையா? உண்மை இப்படியிருக்க 'வநவாஸோ மஹோதய:' என்று அப்போது சொன்ன வார்த்தை அஸத்யமென்றே கொள்ளவேண்டியதாகிற தன்றோ. இங்ஙனே பலர் சங்கிக்க இடமுள்ளது.

இனி இதற்குப் பரிஹாரம் கூறுவோம்; "ராஜ்யாத் ப்ரம்சோ வநே வாஸ:" என்று பரிதபித்துச் சொன்னவிது எந்த ஸமயத் தில்? எதனாலே? என்று நன்கு ஆலோசிக்கவேண்டும். பிராட்டி யைப் பிரிந்தும் பரமபாகவதோத்தமரான ஜடாயுமஹாராஜரையு மிழந்தும் பரிதாபம் பொறுக்கொணாதிருந்த ஸமயத்தில் வெளி வந்த வார்த்தையிது. வநவாஸக் கட்டளை கிடைத்தபோது "வநவாஸோ மஹோதய:' என்று சொன்னது என்ன திருவுள்ளத் தாலென்னில், கேண்மின்; ஜநகசக்ரவர்த்தி ஸீதாபிராட்டியைத் தாரைவார்த்துக் கொடுக்கும்போது "இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ" என்று சொல்லிக்கொடுத்தார்; ஸ்ரீராமபிரான் தான் செய்யக்கடவதான தருமத்திற்கு அவளைத் துணையாகக் கைப்பற்றினது இதனால் விளங்கிற்று. இராமன்தான் செய்யக் கடவதான தருமம் எதுவென்னில்; சரணாகத பரித்ராணமே யாகும். [இவ்விஷயம் 'க: தர்மஜ்ஞ:?' என்ற மூன்றும் வினாவின் விவரணத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளது.] பிராட்டியுடன்

காட்டுக் கெழுந்தருளினது சரணாகத ஸம்ரக்ஷணமாகிற பரமதர்மத்தை நிறைவேற்றுதற்குப் பாங்காகுமென்ற குதூஹலத்தாலேயாயிற்று. காகாஸுர பரித்ராணம் முதலிய தருணங்களில் பிராட்டி கூட விருந்தது ஸபலமாகப்பெற்றதை பெருமாள் நன்கறிந்தவர். அப்படிப்பட்ட பிராட்டியைப் பிரிந்த துக்கம் ஒன்று; பரமபாகவதர்களோடு கூடிவாழலாமென்கிற குதூஹலத்தோடே காடேறவந்தவர்க்கு மஹாபாகவதோத்தமரான ஜடாயுமஹாராஜரை இழந்த துக்கம் மற்றொன்று; இதுவே மிகப்பெரிய துயராம். இவ்விரண்டு துக்கங்களினாலும் திருவுள்ளம் உடைகுலைப்படவே காட்டுக்கு வந்தது விபலமாகவும் விபரீதபலமாகவுமாயிற்றே என்கிற துயரத்தினால் **ராஜ்யாத் ப்ரம்சோ** வநே வாஸ: என்கிற ச்லோகம் ஆவிர்ப்பவித்ததில் பிசகொன்றுமில்லை; இதனால் ‘வநவாஸோ மஹோதய:’ என்று முன்னம் சொன்னது பொய்யாக நினைக்க வொண்ணாததே.

ஒரு பெரியவர் திருவல்லிக்கேணி பார்த்தஸாரதியின் மஹோத்ஸவத்தை ஸேவிக்கப் பலவருஷங்களாகப் பாரித்து வெகு குதூஹலத்துடன் அவ்விடம் வந்து சேர்ந்தார்; வந்தவிடத்தில் ஒரு விதமான ஸௌகரியமும் கிடைக்காமல் வெய்யில் மழை முதலான கஷ்டங்களில் சிக்கித் தெருவில் திண்டாடிப் பெருமாள் ஸேவையும் ப்ராப்தமாகா தொழிந்தால் அப்போது அவரது வாயினின்று பரிதாபவார்த்தை எவ்விதமாக வெளிவரக்கூடுமென்று பாருங்கள்; ‘அந்தோ நாம் நம்மூரிலேயே ஸுகமாக வாழ்ந்திருக்கலாமே; ஏதுக்கு இப்படி வந்து வருந்துகிறோம்! இதுவும் ஒரு விதியா நமக்கு!’ என்றிப்படி பலவாறு சொல்லிப் புலம்ப நேர்கின்றது. இது எங்கும் ஸம்பாவிதமே, அஸம்பாவிதமன்று. அதனால் என்னகுறை? ஊரிலிருந்து புறப்பட்டு வரும்போது அவர்க்கிருந்த குதூஹலத்தில் குறைகூறமுடியுமோ? பொய்யான குதூஹலத்தினால் புறப்பட்டாரவர் என்று இதுகொண்டு சொல்லமுடியுமோ? எந்த விருப்பத்தினால் முதலில் குதூஹல முண்டாயிற்றோ அந்த விருப்பம் முட்டுப்பட்டால் முன்னிருந்த குதூஹலம் மாறுபடுமன்றோ. இது உலகமெங்குங் காணும் நீதியே யாம்.

இராமபிரானுடைய திருவாக்கில் ‘வநவாஸோ மஹோதய:’ என்ற வார்த்தை வெளிவந்தபோது வநவாஸ குதூஹலம் ஸத்யமாகவே யிருந்ததன்றி அதில் பொய்ம்மை சிறிதுமில்லை என்பது இவ்வளவால் நிரூபிக்கப்பட்டது. இங்ஙனே ஸ்ரீராமாயணத்தில் மற்றுஞ் சில சங்கைகளும தோன்றக்கூடியவையுள; அவற்றுக்கும் இவ்வழியானே பரிஹாரம் காணத்தக்கது. இனி ‘க: ந்ருடவ்ரத:?’ என்கிற ஆறுவது வினாவை விவரிக்கப்புகுவோம்.

[தொடரும்.]

ஜகன்மோகினி
தனிப் பிரதி அணா 4.
வருடச் சந்தா 3—0—0.

1

கண்மணிச் செல்வமும் பொன்மொழி நினைவும்

"உலகத்தைக் கண்டுவிட்டாற்போல் பேசுகிறாயே, நீயே சின்னஞ் சிறுவன் என்பதை மறந்துவிட்டாயா? போடா, அதிக ப்ரஸங்கித்தனமாய்ப் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. சுகுமாரா! நான் சொல்வதைக் கேளு. நீ முதலில் நல்ல பெண்ணாகப் பார்த்து விவாகத்தைச் செய்துகொண்டு பிறகு உன்னருமை சகோதரிகள் வத்ஸலாவுக்கும் குந்தலாவுக்கும் வரன் தேடலாம். வீட்டில ஒரு தக்க துணை இல்லாமல் நீ இவர்களை வளர்ப்பது சரியே இல்லை,

நீ ஆபீஸுக்குப் போய்வரும்வரையில் வீட்டில் நாதி யார் இருக்கிறார்கள்? நீயே யோசித்துப் பாரு. ஆகையால் இந்த வரனை விடாதே. யோசித்து நாளை பதில் சொல்லு" என்று ஒரு வயது முதிர்ந்த கிழவர் அழகே உருக்கொண்ட திடகாத்ரமான வாலிபனைப் பார்த்துக் கூறினர்.

இதைக்கேட்ட சுகுமார் சரியானபடி பதில் சொல்லாமல் ஏதோ யோசனையிலாழ்ந்துவிட்டான். அவனுடைய நினைவுச் சுழல் பல வருஷங்களுக்குப் பின்னேக்கி இழுத்துச்சென்றது.

"தம்பி, சுகுமார்! நான் நினைத்தது ஒன்று நடப்பதுஒன்ருக என்விதி செய்துவிட்டது. நீயே என் சர்வபூஷணம் என்றும் நீயே என் அன்புக்குப் பூரணபாத்திரமானவன்என்றும் எண்ணி வெகு வெகு மனக்கோட்டைகள் கட்டினேன். ஆனல்,உனக்கு 15 வயது கழித்து ஒரே சமயத்தில் என்னுடைய ஆசைக் கோட்டைகளை இடித்துப் படுசூரணமாக்கி என்னுயிரையும் குடித்து உன்னையும் பாழாக்கிவிட இந்த இரட்டைப் பெண்கள் பிறந்து சகல விதத்திலும் அழிவை உண்டாக்கிவிட்டன. எனினும், சுகுமார்! இந்த துரதிருஷ்டப் பிண்டங்களைக் கைவிடாதே. உன் தகப்பனர் முன்கோபி, துராங்காரி, வீட்டின் கடமையை அடியோடு மறந்தவர். இவைகள் நீ அறியாததல்ல. அவருடைய பாதுகாப்பில் இக்குழந்தைகள் இருக்குமாயின் குலப்பெருமை நசித்து நான்; உலகில் எடுத்த நற்பெயரும் பாழாகிவிடும். பொறுப்பற்ற மனிதரிடம் பெண் குழந்தைகளை விடாதே...

மக்களை வளர்ப்பதும்—அவர்களை உலகம் உகந்துபோற்றக் கூடியமுறையில்வளர்ப்பதும்—ஒரு தனிக்கலைக்கொப்பானதாகும். 'உபாத்தியாயர்நின்றுகொண்டு நீர் கழிந்தால் மாணவர்கள் ஓடிக்கொண்டே கழிவார்கள்' என்பது பழமொழி. பெற்றோர்களுடைய செய்கை ப்ரதிபிம்பமே மக்களுடையதாகும். மக்களை வளர்ப்பதில், பெண்மக்களை வளர்ப்பதுதான் மிகமிக கஷ்டமும் கடமையும் கூடியதாகும். உன் பிதாவைப்போல் தத்தாரியாயிருப்பவர்களின் வீட்டில் பெண்மக்கள் எப்படி இருக்கிறார்கள் என்கிறதை நான் பார்த்து பயந்து நடுங்கியதுண்டு. எனக்கு இத்தகைய கதி வராது என்று இறுமாந்தேன். என் இறுமாப்பின் மண்டையில் ஓங்கி ஓரடி போட்டதுபோல் என் வாழ்வையும் முடித்து உன்னையும் இம்ஸித்துப் பரீக்ஷைக்குள்ளாக்கும் விதி வந்துவிட்டது!......

சுகுமார், அழாதே! இனி அழுது உபயோகமில்லை. உன் இரண்டு கண்களும் உன்இரண்டு தங்கைகளும் என்று தீர்மானித்து கண்மணிகளைக் காப்பதுபோல் அவர்களைக் காப்பாற்றி உத்தமமான முறையில் கை தூக்கிவிட்டுவிடு. நீ சரியான சத்பாத்ரமாகப் பார்த்து விவாகத்தைச் செய்துகொண்டு வாழ்க்கையை நடத்து. வீட்டுப் பொறுப்பிற்கு முக்ய பாத்திரங்களாகிய பெண்கள் இல்லாவிட்டால் வீடு களையாக இருக்காது. என் சிறிய தாயார் வயதானவளாகையால் அவளை எத்தனை காலமும் நாம் எதிர்பார்க்க முடியாது.அவள் துணையில் வீட்டை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளு. சுகுமார்! தாயார் இல்லாத பரதேசிக்குழந்தை என்ற துக்கம் உன் தங்கைகளுக்குத் தோன்ருத முறையில் பாதுகாத்துவா...

இக்காலத்தில் நான் கண்ணால் பார்க்கிறேன். கடாமாடுகளைப்போல் பெண்களை வளர்த்துள்ள பெற்றோர்கள் அப்பெண்ணின் பெயர் மாசுபடாமலும், பிறர் ஏசிப்பேசிப்பரிகஸிக்காமலும் பாதுகாத்து வளர்க்கத்தவறிப்போய்க் கண்டபடி திரியவிடுவதும், ஊழியர்படை என்றும் ஏதேதோ பெயர்களைவைத்த படைகளில் ஆண்களுடன் சேர்த்துப்பழக விடுவதும், அதனால் பெண்களின் மனம்தளர்ந்து முறைதவறிப்போவதற்கு இடம் உண்டாவதும் இதைக்கண்டு ஊர் சிரிப்பதும் ப்ரத்யட்சமாக நான் பார்க்கிறேன. அம்மாதிரி முறையில் உன் தங்கைகளை விடாதே. நெருப்பும் காற்றும் சேர்ந்தால் தீப்பிடித்தெரிவது சகஜம். அதையே முக்யமாக உணர்ந்து நடத்தவேண்டும். இதனால் கல்வியை வேண்டாம் என்றோ, மற்ற அறிவுவளர்ச்சிக்கான சாதகத்தை நான் தூஷித்தோ சொல்லவில்லை. பெண்கள் பாடசாலையில் படித்துப் பெண்களுடன் பழகி, பெண் தர்மத்தைக் காப்பாற்றும் முறையில் உன் தங்கைகளைப் பழக்கு. கண்டவர்களுடன் ஊர்சுற்ற விடாதே. நீ கல்யாணத்தைச் செய்துகொண்டு உன் மனைவியின் பாதுகாப்பில் இவர்களை ஸம்ரக்ஷித்துக்கல்யாணத்தை காலாகாலத்தில் அவர்களுக்கும் செய்துவிடு. கல்யாணமில்லாத ஒண்டிக்கட்டை வாழ்க்கைவாழவிடாதே. கடிபுடியிலேயே பழக்கு. செல்லங்கொடுக்கும் முறையில் பயபக்தியற்று பிறர் சிரிக்கும்படி நடக்க இடங்கொடுக்காதே. செல்லம் கொடுப்பது என்றால் உண்டியிலும் உடையிலும் ஆபரணங்களிலும் காட்டவேண்டுமே யன்றி மற்ற விதத்தில் அல்ல. 10 மணிக்குப் போகவேண்டிய பள்ளிக்கூடத்திற்கு சில பெண்கள் ஏதோ ப்ரமாதமாய் வேலை இருப்பதாகப் புளுகிவிட்டு 8 மணிக்கே போய்விடுவதும் 4 மணிக்குத் திரும்பவேண்டியதுபோக 6...7...மணிக்குத்திரும்புவதும் ஏதோ பெரிய வேலையைத் தான் சாதித்ததாகப் புளுகி பெற்றோர்களையே ஏமாற்றுவதும் அதை உண்மை என்று பெற்றோர் எண்ணிப் பேசாதிருப்பதும் உண்மையில் அத்தகைய பெண்கள் வீணை முறைதவறி ஒழுங்கீன ப்ரவர்த்தகத்தில் காலத்தைக் கழித்துவிட்டு வரும் ரகஸியத்தைப் பிறர்பார்த்துச் சிரித்து வெறுக்கிறார்கள்! இதை நான் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறேன். ஆகையால் அகாலத்தில் பிறந்து என்னுயிரையும் குடித்துவிட்டுஅல்லல் படப்போகும் இப்பிண்டங்களை நீ அஸ்வாரஸ்யமாய் வளர்த்து என் ஆன்மா நசித்துநாசமடையும்படிச் செய்துவிடாதே. சுகுமார்! உன்னை நான் வேண்டுவது இதுதான்''

என்று தன் தாயார் இறப்பதற்கு முன்பு பலதரங்கள் கூறிக் கண்ணீர்விட்டதும் தாயாருக்குத் தான் அப்படியே செய்வதாக வாக்குக்கொடுத்துச் சாந்தியடையச்செய்ததும் பிறகு தாயார் ஒரு மாதத்திற்குள்ளேயே உயிர் துறந்துவிட்டதும் தன் தாயார் வார்த்தைகளின்படி அவளிட்ட ஆணையை மீறாமல் நடப்பதும் "கல்யாணம் செய்துகொண்டு உன் மனைவியின் பாதுகாப்பில் உன் தங்கைகளை ரக்ஷித்துவா'' என்று கூறியவார்த்தைகளின் ஆழமான ஒலியும், ஒன்றன்பின் ஒன்றாக இப்போதுதான் நடப்பது போல் இவன் மனத்திரையில் விசித்திரமாகச் சுழன்று கண்களில் நீர் பெருகச்செய்துவிட்டன.

மெல்ல அதைத் துடைத்துக்கொண்டு பெருமூச்சு விடுகையில் முதலில் பேசிய கிழவர் இவன் உணர்ச்சியின் காரணத்தை ஒருவாறு அறிந்து, "சுகுமார்! உன் தாயார் இருந்து இந்தக் காரியத்தைச் செய்யவில்லையே என்று நீ வருந்துகிருய். உம்! இனி, அதைஎண்ணி என்னப்பா உபயோகம்? நீ தான் இனி உன் செல்வச் சகோதரிகளுக்குத் தாயும் தந்தையும் சகலமும் ஆவாய். நீ இத்தனை நாளைக்கே விவாகம்செய்துகொண்டிருக்கவேண்டும். இனியும் செய்துகொள்ளாவிடின் மிகவும் பிசகு. இந்த மாய உலகத்தை நீ அறியவில்லை. ஜாம்புவான் போன்று வயதாகிய நான் அறிவேன்; நீயும் இப்படி இருந்தால், உன் பெயருக்கும் ஹானி வந்துவிடும். ஆகையால் உன்னையும் நீ காத்துக்கொண்டு உன் தங்கைகளையும் சிறந்த முறையில் காப்பாற்று...

சுகுமார்! "இப்போது நான் கொண்டுவந்துள்ள இடம் இருக்கிறதே சாமான்யமானதல்ல. சிறந்த அறிவாளிகள் நிறைந்த குடும்பம். பெரிய சம்ஸாரிகள்; பரம்பரையாக நல்ல உத்தம வம்சத்தில் வ்ருத்தியான குடும்பம். பெண்ணோ வெகு புத்திசாலி. நன்ருகப் படிக்கவும் பாடவும் குடும்பத்து வேலைகளைப் பொறுப்பாகச் செய்யவும் திறமையுடையவள். அழகோ சொல்லவேண்டாம். வெகு லக்ஷணமாயிருக்கிருள். பெயரும் அவளுடைய சகல அம்சங்களுக்கும் ஏற்றுப்போல "சுகுணு" என்று அமைந்திருக்கிறது. ஜாதகமும் பொருந்தியிருப்பதால் நீ வீணுக யோசனை செய்யாதே; சுகுமார் ஒப்புக்கொள்ளு" என்று அன்புடன் கிழவர் சொல்லும்போது டாங்...டாங்...என்று மணி 5 அடித்தது.

அதே சமயம் இவனுடைய சகோதரிகளான வத்ஸலா, குந்தலா இருவரும் ஒரே கும்மாளத்துடன் "அண்ணு! அண்ணு! இன்று பாட்டுப்போட்டி நடத்தினர்கள். அதில் நான் முதல் பரிசு வாங்கினேன். இதோ பாரண்ணு பரிசு புத்தகமும் டப்பியும்" என்று வத்ஸலா காட்டி அண்ணனின் தோளைப் பிடித்துக்கொண்டு குதித்து மகிழ்ந்தாள்.

"அண்ணு! நான் ஓட்டப் பந்தயத்தில் முதல் பரிசு வாங்கினேன். இதோ, எனக்குப் பரிசுகள் பாரு" என்று கொடுத்து குந்தலா மகிழ்ந்தாள். இதைப் பார்த்த சுகுமாரனின் உள்ளம் பூரித்தது. தங்கைகளைத் தட்டிக்கொடுத்து, "பலே! கண்மணிகளே! மிக சந்தோஷம்...என்று கூறுவதற்குள், கிழவர் அச்சிறுமிகளின் தோளில் தட்டிக்கொடுத்து, "குழந்தைகளே! அண்ணுவுக்குக் கல்யாணமாகப்போகிறது. நல்ல மன்னியாக உங்களுக்கு வரப்போகிருள். அண்ணுவை கல்யாணம் செய்துகொள்ளும்படியாகச் சொல்லுங்கள்" என்ருர்.

முன்னிலும் அதிகரித்த சந்தோஷத்துடன் "நிஜமாகவா தாதா? எப்போ தாதா கல்யாணம்? எங்கே இருக்கிருள் எங்கள் மன்னி? நாங்கள் பார்க்கவேண்டுமே! அண்ணு! அண்ணு! உடனே கல்யாணம் பண்ணிக்கோ அண்ணு!...எங்களுக்கு நிரம்ப ஆசையாயிருக்கிறது" என்று குதித்தார்கள்.

சுகு:—நீங்கள் கைகால்களை சுத்தி செய்துகொண்டு ஆகாரம் சாப்பிட்டுவிட்டு வாருங்கள். பிறகு பேசலாம்—என்று அனுப்பிப் பின், "தாதா! என்னைப் பெத்த பிதாவைப்போல் நீங்கள் இந்த

விஷயத்தில் ச்ரத்தை எடுத்துக்கொண்டு இத்தனை அக்கரையாகப் பாடுபடுவதால் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், முதலில் நான் அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டுவதுடன் அவளுடன் பேசவும் வேண்டும்; அதற்கு ஏற்பாடு செய்தால் இன்றே போய்ப் பார்க்கலாம்.'' என்று முடிவாகக் கூறினான். கிழவரும் விடை பெற்றுச் சென்றார் எனினும் சுகுமாரனின் மனம் பலவிதமான எண்ணங்களாகிய அலைகளில் தத்தளித்தது.

2

தேனும் பாலும் திகட்டா அன்பும்

கிழவர் மிகவும் சந்தோஷத்துடன் பெண்ணின் வீட்டிற்குச் சென்று "கோபால்! இதோ! சுகுமாரனை அழைத்துவந்தேன். அவனைப்பற்றிச் சகலமும் நான் சொல்லி இருப்பதால் வேறு எதுவும் சொல்லவேண்டாம்...சுகுமார்! இப்படி வந்து உட்காரப்பா! சுகுணா! இங்குவாம்மா; நமஸ்காரம் பண்ணு'' என்றார். சுகுணாவும் வெகு வணக்கத்துடன் வந்து நமஸ்காரம் செய்து மரியாதையாய் நின்றாள்.

உண்மையில் சுகுணாவின் ரூபலாவண்யமும் கம்பீரமான தோற்றமும் சுகுமாரின் உள்ளத்தை வசீகரித்தன எனினும் தான் மணந்துகொண்டால் தன் சகோதரிகளுக்கு ஏதாவது தொந்தரவாகிவிடுமோ? அதனால் அவர்கள் மனம் நொந்து கண்ணீர் வடிக்க நேருமோ? என்று எண்ணும்போது இளங்காளையின் மனத்தில் உண்டாக வேண்டிய குதூகலம் பறந்துபோய் ஒருவிதமான சோகமே உருவாகியது.

இருப்பினும் சுகுணாவை உற்றுப்பார்க்கும்போது தன் தாயாரின் நினைவும் கூடவே தோன்றித் தன்னை ஊக்குவதுபோல் ஒரு உணர்ச்சியும் உண்டாகியது.

இவனுடைய குழப்பத்தையும் தியங்கத்தையும் கண்ட கிழவர் சுகுமாரன் முதுகில் தட்டிக்கொடுத்து "சுகுமார்! நீ என்ன பேசவேண்டுமோ அதை தாராளமாகப் பேசு; நாங்கள் வெளியே போகிறோம்'' என்று காதோடு சொல்லிவிட்டு நகர்ந்ததும் சுகுமாரனே ஆச்சரியப்படும்படியாக சுகுணா ஒரு கடிதத்தை சுகுமாரனிடம் கொடுத்துவிட்டு முன்போலவே மரியாதையாக நின்றாள். அடங்காத வியப்புடனும் ஒருவிதமான புதிய உணர்ச்சியுடனும் சுகுணாவை ஒருமுறை பார்த்துவிட்டுக் கடிதத்தைப் படிக்கவாரம்பித்தான்.

"அடியாள் வணக்கத்துடன் நமஸ்கரித்து என் இதயபூர்வமாயும் ப்ரமாணமாயும் இதை எழுதுகிறேன். என்ன விருப்பினும் நான் இம்மாதிரி எழுதிக்கொடுப்பதை நீங்கள் அதிசயித்தோ, வெறுத்தோ நினைக்கலாம். இது அதீதமான செய்கை என்றும் எண்ணலாம். இருப்பினும் தாங்கள் என்னிடம் தனிமையில் பேசவிரும்புவதாக தாதா சொன்னார். அதனால் நான் யோசித்தேன். முன்பின் பார்த்தறியாத நாம் முதல்முதல் பேசுவது என்றால் அதுவும் சடுதியில் நடக்கக்

கூடியதாக எனக்குத் தோன்றவில்லை. ஏனெனில் பெண்களுக்குப் பெண்களே முதல்முதல் பார்த்த உடனே சடக்கென்று பேசிவிடுவது முடியாததாக இருக்கிறது. அதிலும் முக்யமான விஷயங்களைப் பேசுவதற்கு வெகுயோசனைகள் செய்யவேண்டியிருக்கிறது. நான் பள்ளியில் படித்தகாலத்தில் இதையே ஒரு வ்யாஸமாகவும் எழுதி பரிசும் பெற்றேன்.

ஆகையால் நான் தியங்கித்தியங்கிப் பேசமுடியாது தடைபட்டுப்போவதற்கோ, வெட்கத்தினால் வார்த்தைகள் வராமல் விஷயங்களை வெளியிடமுடியாமல்போய் காரியம் சிதறி விடுவதற்கோ இடமின்றி இம்மாதிரி செய்வதே நலம் என்று தோன்றியதால் இதைத் துணிந்து எழுதுகிறேன். தாங்கள்என்னிடம்தனித்துப் பேசவேண்டுமென்று சொல்லியனுப்பிய உடனேயே நான் தீர்க்கமாய் யோசனை செய்தேன். தாதாவின் மூலம் சகலமான விஷயங்களையும் அறிந்திருப்பதால் தாங்கள் என்னிடம் கேட்கக் கூடிய விஷயம் இதுவாகத்தான் இருக்குமென்று நானாகவே திட்டமிட்டுக்கொண்டு இதை எழுதுகிறேன்; அதாவது : உங்கள் இரு கண்மணிகளைப் போன்ற செல்வச் சகோதரிகளிடத்தில் நீங்கள் கொண்டுள்ள ப்ரேமைக்கு நான் எங்கே முட்டுக்கட்டை வைத்துவிடுவேனோ! உலகத்தில் பெரும்பாகத்தில் நடப்பதுபோல் இங்கேயும் எப்படி நடந்து விடுமோ என்று தாங்கள் யோசிப்பதாக நான் ஊகிக்கின்றேன். இதுவே சரியான யூகம் என்றது நிச்சயமானால் அம்முறையில் நான் என் உறுதியைத் தெரிவிக்கின்றேன்! தங்களுடைய நிழல் போல நான் இருப்பேன்; இது சத்தியம். இதற்கு மேல் வேறு கூறவேண்டுவதே இல்லை என்று நினைக்கிறேன். எந்த சமயத்திலும் எந்த விதத்திலும் நான் தங்களுடைய சகோதரிகளின் தாய்போலிருந்து காப்பாற்றுகிறேன். இதுவிஷயத்தில் இனி அவநம்பிக்கையேவேண்டாம். இதைத் தவிர வேறு ஏதாவது விஷயமாயின் கேட்கலாம். நான் உலகத்திலுள்ள ...அதிலும் தற்காலத்திலுள்ள ஜனத்துகைக்கு மட்டும் இலக்காகி ஸாரமற்ற வாழ்க்கைவாழும் சிலபெண்களைப்போல் நான் வாழ விரும்பவில்லை. உத்தம வழியில் பிறரால் போற்றிக் கொண்டாடப்படும் முறையில் வாழ விரும்புகிறேன். உங்களுக்குக் கூடப்பிறந்த பெண்களை என் வயிற்றில் பிறந்தவர்களைப்போல்,நான்பார்த்துக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதை இதயபூர்வமாய்த் தெரிவிக்கிறேன். இத்தனை வார்த்தைகளை நாம் நேரில் பேசும்போது சொல்லமுடியாது லஜ்ஜையில் தடைப்படும் என்பதற்காக இதை எழுதுகிறேன்.

முதல் முதல் இத்தனை துணிபுடன் எழுதியது குற்றமில்லையா என்று நினைக்கலாம். நான் தங்களுடையபொருள். எப்படியும் இந்தகாரியம் கைகூடும்படி பகவான் அருள்புரிய வேண்டிப்ரார்த்தனையுடன் இதை எழுதுகிறேன். குற்றமாயின் மன்னித்து என்னை அங்கீகரிக்கக்கோரும்,

தங்கள் அடிமை, சுகுண”

இதைப் படித்த சுகுமாரனின் வியப்பும் திகைப்பும் சொல்லி முடியாது கரைகடந்து பொங்கியது. கடிதத்தை ஜேபியில்வைத்துக்கொண்டு சுகுணவை ஒருமுறை பார்த்தான். கடிதத்தில் கண்டிருந்தபடி பேசுவதற்குச் சடக்கென்று வாய்வராமல் லஜ்ஜையினல் முகம் கவிழ்வதும் நிமிர்வதுமாக சில விஞடிகள் தியங்கினன். பிறகு, மெல்ல சமாளித்துக்கொண்டு..."குருடன் வேண்டுவது கண்களின் பார்வை. தரித்திரன் வேண்டுவது தனம். மலடிவேண்டுவது மக்கள் பேறு. நான் வேண்டுவது உத்தம மனேவி. என்னுள்ளம் விரும்பி எதிர்பார்க்கும் சகல ஆவலான கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிட்டது. இனி, கவலே இல்லே. சுகுண! நீ உத்தம மார்க்கத்தில் வாழ்க்கை நடத்த ஆவல் கொண்டதுபோலவே நானும் எதிர்பார்க்கிறேன். சென்ற வருஷம் ஒரு பெண்ணே என் உறவினர் ஒருவர் கொண்டுவந்தார். அந்தப் பெண் என் சகோதரிகளே நாத்தனர் என்று கூட பாராமல் மூத்தாள் மகள் என்ற பாவத்லேயே நினேத்துவிட்டதுபோல் வெடுக்கென்று பேசியதைக் கேட்டதும் நான் வாய் திறக்காமல் வந்துவிட்டேன். அதுமுதல் என் இதயதாபத்திற்கு ஏற்ற மனேவி கிடைத்தால் மணப்பது, இல்லேயேல் காலத்தை இப்படியேகழிப்பதுஎன்றுதுணிந்துவிட்டதனல்தான் நான் பேசவேண்டுமென்று கேட்டது. எனக்குப் பரமதிருப்தியாகிவிட்டது" என்று மனத்தைத் திறந்து காட்டிவிட்டான். இனி கேட்கவேண்டுமா?...

பெரியவர்கள் முதல் சகலருக்கும் சம்மதமாகிவிட்டது. ஆனல் குடும்பபாரத்தை நிர்வகித்துத் திறம்படத் தன் மகளால் நடத்த முடியுமா! தட்டிமைத்துனரும் கோள் சொல்ல நாத்தனரும் என்கிறது பழமொழியாயிற்றே! தாயில்லாத இரண்டு பெண்கள் கொஸுரு போலிருக்கிறதுகளே! இவளுக்கும் அதற்கும் பொருத்தம் ஒப்புக்கொள்ளுமா? வீணக பழியும் அபாண்டமும் வந்தால் என்ன செய்கிறது?...என்று சுகுணவின் அத்தைமட்டும் ப்ரமாதமாய் எதிர்த்துக்கூறினள்.

தன் மகளுக்குச் சரியான இடம் கிடைக்காததால் அவள் அலேயும் அலேச்சல் சொல்லமுடியாது. இத்தகைய நல்ல இடம் தனக்குத் தெரியாமல் போயிற்றேஎன்கிற ஏக்கமும் பொருமையுங் கொண்டு இதைத் தடுப்பதற்காகவே இப்படிச் சொல்லி இருப்பதாக மற்றவர்கள் எண்ணி இதற்கு ப்ரதானங்கொடுக்காமல் அடுத்த வாரமே கல்யாணத்தை நடத்திவிட்டார்கள். தன்னேச் சரியானபடி மரியாதை செய்யாமல் தன் வார்த்தையைக் கேளாமல் விவாகத்தை நடத்திவிட்ட கோபத்திற்காக அத்தையம்மாள் கல்யாணத்திற்கே வரவில்லே. "குடியில் பிறந்த பெண் கல்யாணத்திற்கு வராமல் ஒரு காரியத்தைச் செய்வார்களா? இது நல்லதா? குடிக்கு ஆகுமா? கல்யாணம் செய்துகொண்ட பெண் சுகமாக வாழ்க்கை நடத்தி க்ஷேமப்படவேண்டாமா? நீ அவசரப்பட்டு இப்படிச் செய்தது சற்றும் நன்ருயில்லே"...என்று நடுவில் வந்த உறவினர்கள் சுகுணவின் தாயாரையும் தகப்பனரையும் கலக்கிவிட்டார்கள். சந்தோஷமாயும் சுபமாயும் ஒரு காரியத்தைச் செய்தும் மன நிம்மதியற்ற நிலேயில் சுகுணவின் தாயாருக்கு சற்று பயம் எடுத்துக்கொண்டது.

கலங்காத திட உறுதி பெற்றுள்ள மனத்தைக்கூட கரைப் பார் கரைத்தால் சற்று கலங்கிவிடுகிறது என்றால் ஸ்திரபுத்தி யில்லாத ஸீதாவுக்குக் கேட்கவேண்டுமா? தன் மகள் க்ஷேமமாக இருப்பாளா? நாத்தனார்களால் தீம்புவராதிருக்குமா? என்று ஒரு பெரியகவலை புகுந்துவாட்டத்தொடங்கியது. ஆனால், சுகுணா வின் உள்ளம் பெருமிதமான இன்பத்தில் நிறைந்து தளும்பியது.

3

மந்திரி மதியாளின் மாசிலா வாழ்வு

தன்னருமைத் தங்கைகளும், ஒரு சமயல்காரி, ஒருவேலைக் காரி ஆகியவர்களுடன் ஏதோ விரிச்சென்ற முறையில் வாழ்நாள் கழித்துவந்தசுகுமாரனுக்கு இன்று சுகுணா புதியகுடும்பபாரத்தை ஏற்று உன்னத முறையில் மங்களகரமாய் இல்லரசு புரிந்து வீட்டில் புதிய சோபையையும், புதிய இன்பத்தையும் கொடுக்க ஆரம்பித்ததானது இதயத்தில் இதுபரியந்தம் செல்லரிப்பது போல் அரித்துவந்த ஏதோ ஒரு கவலை நீங்கி, தனித்தஇன்பம் உண்டாகியது. சுகுணாவின் அன்பில் அவன் செல்வச் சகோ தரிகள் ஐக்யமாகிவிட்டதைக்கண்டு பின்னும் தன் இதயத்தை அழுத்திவந்த மலைபோன்ற பெரும் பாரம் இறங்கிவிட்டதாக நிம்மதி உண்டாகியது.

இரட்டைப் பிறவிகளான வத்ஸலாவும் குந்தலாவும் சரியான படி வீட்டில்பெரியவர்களின்பாதுகாப்புஇன்றி தமையனின் அளப் பரிய அன்பின் அணைப்பில் அபாரமான செல்லமாக வளர்ந்து விட்டதால் சாதாரணமான முறையில் படிப்பது விளையாடுவது போன்றவைகள்தான் தெரியுமேயன்றி சிறந்த முறையில் சம்பிர தாய பழக்கவழக்கங்களுடன் நடக்கும் முறையே தெரியாது. சில நாளைக்குக் குளிக்காமல்கூட முகங்கழுவிக்கொண்டு வந்துவிடு வார்கள். எச்சில் என்பது அசலே தெரியாது. சதா நகத்தைக் கடிப்பது, பென்ஸிலைக் கடிப்பது, துணியின் நுனியைக் கடிப்பது, தலை மயிர் நுனியை வாயில்வைத்து இழுப்பது, பெரியாரைக் கண்டால் அடக்க ஒடுக்கமாய் மரியாதையாய் நமஸ்கரித்துப் பேசத் தெரியாது யார் வந்தாலும் எழுந்து மரியாதை செய்யாமல் காலை ஆட்டியும் நீட்டியும் வைத்துக்கொண்டு துடுக்காகப்பேசுவது, பூஜை என்பது அடியோடு தெரியாது...இம்முறையிலுள்ள பெணகளைப் பார்த்து"பாவம் தாயில்லாக் குழந்தைகள்!" என்கிற பச்சாத்தாபத்தில் தன் கணவர் அபாரமான செல்லங்கொடுத்து வளர்த்துவிட்டார். பெண்பிள்ளைகள் வளர்க்காது ஆண் பிள்ளைகள் வளர்க்கும் முறை இப்படித்தானிருக்கும்" என்று பரிதாபப்பட்டாள்.

பெண்களிருவரும் சுகுணாவிடத்தில் அளப்பரிய அன்புடன் சதா 'மன்னி! மன்னி!' என்று போட்டியிட்டுக் கூறி மகிழுவதைக் காண சுகுமாரனின் உள்ளம் பூரிக்கும். அதைவிட சுகுணாவின் இதயத்தில் ஒரு தனி இனப ஊற்றுச் சுரந்துததும்பும். அந்த இரண்டு குழந்தைகளைச் சேர்த்து அணைத்துக்கொள்ளும்போது அவள் அடையும் வாத்ஸல்ய இன்பத்தை அளவிட்டுச் சொல்ல

முடியாது. தன்னை மறந்து ஐக்யமாகிவிடுவாள். ப்ரதி தினமும் இரவில் சிறுமிகள் இருவரும்“மன்னி! நீஎன்பக்கந்தான் திரும்பிப் படுத்துக்கொண்டு என்னைக் கட்டிக்கொள்ளவேண்டும்'' என்று சண்டை போடுவார்கள்.

சுகுணா இருவரையும் சமாதானம் செய்து “கண்ணூ! நான் மத்தியில் படுத்துக்கொள்வேணும். நீங்களிருவரும் இருபுறமும் படுத்துக்கொண்டு என்னையே மூச்சுத்திணறும்படிக் கட்டிக்கொள் வீர்களாம்! என்ன சரிதானே!”...என்று தந்திரமாய் தளுக்காய்க் கூறுவாள். சிறுமிகள் இருவரும் போட்டியிட்டுக்கொண்டு சுகுணாவைத் திணறவடித்துவிடுவார்கள். இந்தச் செய்கையிலும் அவள் அபாரமான த்ருப்தியை அடைவதோடு ப்ரதிதினமும் அவர்களுக்குச் சிறியசிறிய கதைகளைச் சொல்லி நீதியையும் புராண இதிகாஸங்களில் பற்றுதலையும் போதிக்கத் துடங்கினாள். கதைசொல்பவர்களுக்கு ஒருவிதமான இன்பம் என்றால் கேட்பவர் களுக்கு அதைவிட அதிகமான இன்பமும் ஆர்வமும் உண்டாகி அதிலேயே தனிருசி கண்டு மகிழ்வார்கள். அம்முறையில் சிறுமி களின் மனத்தில் நன்றாகப்பதியும் வண்ணம் சிறியகதைகளின் மூலம் அவர்கள் தங்களிடம் உள்ள சிறியசிறிய குற்றங்களையும் குறைகளையும் தாமே உணர்ந்து தாமே திருந்தும்படியான முறை யில் தன்கடமையைச் செய்வதைக்கண்ட சுகுமாரன் இம்மாதிரிவழி யில் போதிக்க நமக்குத் தெரியாமல் போய்விட்டதே என்று வெட் கினான். “பெண்களின் சக்தியும் ஸாகஸமும் என்ன விருப்பினும் ஆண்களுக்கு வருமா! அதனால்தான் பெண்தெய்வங்களுக்கு பகவான்கள் முதல் ப்ரத்யேகமான தனியிடமும் தனிப்பெருமையும் அளித்திருக்கிறார்கள். நம்போல்வார்கள் பின்பற்றி நடப்பதற் காகத்தானே சகலவிதத்திலும் பகவான் வகுத்துக்காட்டியிருக் கிறார்'' என்று தனக்குள் தன் மனைவியின் அபாரமான சாமர்த் தியத்தைக் கண்டு வியந்தான்... இத்தகைய ஆழமான அன்பு மாறாமல் என்றென்றும் இப்படியே இருக்கவேண்டுமே... இதற்கு பங்கம் வராது பகவான் கிருபை செய்யவேண்டுமே...என்ற ஏக்க மும் ஊடே உண்டாகாமலில்லை.

தனிக்குடித்தனம் செய்யும் பெண்ணைப் பார்ப்பதற்காக அவ ளுடைய தாயார் வந்தாள். கும்மாளமும் குதூகலமும் பொங்க தன் நாத்தனாருக்கும் அவர்களுடைய சினேகிதைகளான இரண்டு சிறுமிகளுக்கும் சுகுணா கும்மியடிக்கக் கற்றுக்கொடுத்துத்தானும் கூட கும்மியடித்துப் பாடி மகிழும் காட்சியைப் பார்த்துக்கொண்டு வந்த ஸீதா ஸந்தோஷத்துடன் நின்றாள்.

பாரதியாரின் பெண்விடுதலைக்கும்மியை சுகுணா சொல்லிக் கொடுக்கிறாள். மற்றவர்கள் அதைப் பாடி கும்மியடிக்கிறார்கள். மன்னியின் தாயார் வந்திருப்பதைக்கண்ட சிறுமிகள் கும்மியடிப் பதை நிறுத்திவிட்டு “மன்னீ! மன்னீ! அம்மா வந்திருக்கிறார்கள் ...வாருங்கள் மாமீ! சவுக்யமா?'' என்று மிகுந்த மரியாதையுடன் கேட்டார்கள்.

தன் தாயாரின் வருகையினால் பரம சந்தோஷத்தையடைந்த சுகுணா...“வாம்மா...இன்னும் யார் வந்திருக்கிறார்கள்? அப்பா

வரவில்லையா? நீ வருவதாகக் கடிதமே போடவில்லையேம்மா?...உட்காரம்மா! இந்தப் பாட்டை முடித்துவிட்டு வருகிறேன்..."உம்!... வாருங்கள். கும்மியை மத்தியில் நிறுத்தினுல் நடுவில் வைத்துள்ள குத்துவிளக்குத் தாயாராகிய மகாலக்ஷ்மிக்குக் கோபம் வரும். விளக்குகள் எல்லாம் ஸ்ரீமகாலக்ஷ்மியின் அம்சம் என்று நான் கதைசொன்னதை மறந்துவிட்டீர்களா? உம்! பாடுங்கள்! எங்கம்மாவிடம் வெட்கமென்னம்மா? எங்கம்மா கோபிக்கவோ கேலிசெய்யவோ மாட்டாள்'' என்று கூறியவாறு தான் பாடினுள். பிறகு எல்லோரும் பாடிக் கும்மியடித்தார்கள்

இதற்குள் ஸீதா இங்கு கும்மியடிக்கும் அழகையோ ஆனந்தத்தையோ அனுபவிக்க இஷ்டமின்றி வீடுபூராவும் ஒரு தரம் தானே சுற்றிப் பார்த்துவிட்டுப் பின் தான் கொண்டுவந்திருந்த தாம்பூலம், பழவகைகள், ரவிக்கை, பக்ஷணம் முதலியவைகளை எடுத்துத் தட்டுகளில் வைத்தாள். இதற்குள் கும்மி முடிந்துவிட்டது. எல்லோரும் ஓடிவந்தார்கள். ஸீதா தன் மகளிடம் தாம்பூலத் தட்டைக் கொடுத்தாள். சுகுணு நமஸ்காரம் செய்துவிட்டு அதை வாங்கிக்கொண்டாள். அடுத்த க்ஷணமே தன்னுயிர்ச் சிறுமிகளைப் பார்த்தாள்.

தங்களுக்கு ஒன்றுமில்லையே என்கிற ஒரு சிறிய ஏக்கத்தின் சாயல் முகத்தில் படிந்து சுருங்கி ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு நின்றதை கவனித்ததும் சுகுணுவின் மனத்தில் சுருக்கென்று தைத்தது. தன் தாயாரைப் பார்த்து "என்னம்மா! இது எனக்குமட்டும் கொண்டுவந்திருக்கிருய். குழந்தைகளுக்கு வேண்டாமா?...கண்ணு! இதோ பாருங்கள். வெத்திலை பாக்கு மஞ்சள் எனக்கு; சாப்பாட்டுப் பண்டங்கள் உங்களுக்கு'' என்று தானே கூறி இரண்டுபேருக்கும் இரண்டுதட்டுகளைக் கொடுத்து த்ருப்திசெய்யப் பார்த்தாள்.

குந்தலா:—ஏன் மன்னி! இன்றைக்கு என்ன விசேஷம்? உனக்கு ஏதாவது கல்யாணமா! மாமி தாம்பூலமும் பக்ஷணங்களும் கொண்டுவந்திருக்கிறார்களே.

சுகுணு:—அட அசடே! கல்யாணமானுல்தான்வெத்திலைபாக்கு கொண்டுவருவார்கள் என்று நினைக்கிருயா? நான் உனக்கு அன்று கதை சொன்னேனே அதை மறந்துவிட்டாயா? பெரியவர்கள் ஊரிலிருந்து வந்தால் வெத்திலைபாக்கு இல்லாமல் வரவே கூடாது; வரவும்மாட்டார்கள். ஏன்! எத்தகையவர்களும் ஊருக்குப் போவது என்று கிளம்பினுல் முதலில் துணிமணிகள், படுக்கை, இவைகளை எடுத்து வைப்பதுபோல் வெத்திலைபாக்கு மஞ்சளும் எடுத்துவைத்துக்கொண்டுதான் கிளம்பவேண்டும். தாம்பூலமும் மஞ்சளும் சாட்சாத் லக்ஷ்மியல்லவா? அவளை நாம் சதா கூடவே வைத்துப் பூஜிப்பதாக அர்த்தம். அதனுல்தான் தாம்பூலம் இல்லாது எந்தக் காரியமும் செய்வதில்லை. ஊருக்குச்சென்ற எவரும் போகுமிடத்திலிருப்பவர்கள் எத்தகைய உறவினராக இருந்தாலும் சரி, ஒரு வெத்திலைபாக்கு இல்லாமல் சென்ருல் "மூதேவி வந்தமாதிரி'' என்று பெரியவர்கள் சொல்கிருர்கள்.

வத்ஸலை —ஏன் மன்னி! நேற்று எதிர்வீட்டு அம்புவின் மாமியார் வந்தாளே...ஒன்றுமே கொண்டுவரவில்லையே?...

சுகு:—அப்படி கேளும்மா கண்ணு! எந்த ஒரு நல்ல காரியத்தையும் எல்லோரும் தெரிந்துகொண்டு செய்துவிட்டால் பிறகு குறைகூறும் வார்த்தையே வராதல்லவா! சிலர் தெரியாமலேயே செய்யமாட்டார்கள். சிலர் தெரிந்தே வேண்டுமென்று செய்வதில்லை. சிலர் தெரிந்துநன்ருகத் தம்சக்திக்குத் தக்கபடி செய்து பெருமையடைகிருர்கள். பொன்வைத்த இடத்தில் புஷ்பம் வைப்பது என்பது பெரியவர்கள் எதற்குச் சொன்னுர்கள். உயர்வாகச் செய்வதற்குச் சக்தியில்லை எனினும் ஒரு மஞ்சள் கிழங்கும் தாம்பூலமும் கொடுத்தால்கூட போதும். சில ப்ரக்ருதிகள் இந்த சுபமான செய்கைக்கு மதிப்பே கொடுக்காமல் பெத்த பெண்ணுயினும் உடன்பிறந்த சகோதரியாயினும் கொண்ட மருமகளாயினும் தடிமரம்போல் வந்து இறங்குகிருர்கள். இத்தகைய சிறந்த நன் மார்க்கத்தைச் செய்வதால் தன் மக்களுக்கு மங்களகரமும் க்ஷேமமும் பெருகி வளர்வதை அறிந்தால்தானே! என் தாயார் அவளுடைய பெரியவர்கள் செய்ததைப் பார்த்துப் பழகியிருப்பதால் எனக்குக் கொண்டுவந்தாள். ஆனல், உங்களுக்குக்கூட கொண்டு வராமல் இம்மாதிரி செய்தது தப்பு. அதை என் தாயார்கூட உணரவில்லை. தாம்பூலத்தின் மகிமை வேறெதற்கு உண்டு? மனிதர்களை ஒன்றுசேர்த்துக் கூட்டுவதும் தாம்பூலம்; பிரிப்பதும் தாம்பூலம்...

துந்த:—அதென்ன மன்னி! புரியவில்லையே.

சுகுண:—ஏம்மா புரியவில்லை? வீடுகளில் வரும் கல்யாணங்களுக்கும் பண்டிகை பர்வம் முதலிய சுபகாரியங்களுக்கும் நாம் பிறரை அழைக்கிருேமே, எப்படி அழைக்கிருேம்?...எங்கள் வீட்டிற்குத் தாம்பூலத்திற்கு வாருங்கள், சாப்பிடவாருங்கள்...என்று அழைக்கிருேம். அவர்கள் வருகிருர்கள். அவர்களுக்கு மரியாதை செய்கிருேம். கல்யாணமோ விசேஷமோ முடிந்தவுடனே தாம்பூலத்தைக் கொடுத்துத் தானே அனுப்புகிருேம். அதனல்தான் விவாகத்தை நிச்சயிக்கும்போதுகூட தாம்பூலத்தை மாற்றிக் கொண்டு 'உன் மகனுக்கே என் மகளைக்கொடுக்கிறேன்; உன் மகளையே என்மகனுக்குச் செய்துக்கொள்கிறேன்' என்று வாக்கு தத்தம் தாம்பூலத்தை ப்ரதானமாகவைத்துச் செய்கிருர்கள். நாளைக்கு உங்களுக்குக் கல்யாணமாகும்போது பார்க்கலாமல்லவா!

வத்ஸ:—போ மன்னி! அது கிடக்கட்டும். வெத்லே வெத்தலே என்று சொல்கிருர்களே யன்றி அதற்குச் சரி[illegible] பெயர் எது மன்னி? வெத்தலையா? வெற்றிலையா?...வெற்றி இலை என்று நீ சொல்கிருயே அதுவா?...

சுகுண:—பார்த்தாயா? உங்கள் புத்தி எத்தனை விசாலமடைந்து விஷயங்களில் ருசியைக் கண்டுபிடிக்க ஆவல் தூண்டுகிறது! இப்படித்தான் இருக்கவேண்டும். வெத்திலைக்குச் சரியான பெயர் காரணப்பெயர் இரண்டும் இருக்கின்றன. சகல காரியங்களுக்கும் ஜெயத்தைக் குறிப்பிட்டுச் சந்தோஷத்தையும் மங்களகரத்தையும் காட்டும் முக்யப் பொருளாக விளங்குவதால் வெற்றி இலை என்று கூறுருேம். இன்னொரு பெயர் வேறு இலை. அதாவது எந்த ஒரு செடியையோ கொடியையோ நாம் பார்த்தாலும் பூவும் காயும் இல்லாது இலைமட்டும் இருப்பதே இல்லை. அந்த

விதிக்கு விலக்காக வெத்திலைக் கொடியில் இந்த இலையைத்தவிர வேறு எதுவுமே இல்லாதிருப்பதால் வெறும் இலை அல்லது வெற்றிலை என்ற பெயர் உண்டாகியது. எனினும், வெற்றி இலைதான் சரியான காரணத்துடன் கூடிய பெயராகும்.

ஸீதா:—ஏண்டி சுகுணு! இப்போது நாம் இருக்கும் இடம் சாதாரண வீடா? அல்லது ப்ரசங்கமேடையா? பள்ளிக் கூடமா? எது என்று எண்ணி இப்படி லெக்சர் செய்கிருய்? நான் வந்திருப்பதும் உனக்கு மறந்துவிட்டதா? இதென்ன ப்ரஸங்கம்!

சுகுணு:—ஏம்மா! நீ வந்திருப்பதனுல்தானே இந்த விஷயமே வெளியாயிற்று. சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் விஷயங் களை அறிந்து கொள்வதற்காகத்தான் காற்றுள்ளபோதே தூற்றிக் கோள் என்கிற பழமொழியும் உண்டாகியது. அதிலும் இத் தகைய சிறுமிகளுக்கு அவர்கள் ஆசையுடன் கேட்கும்போது சொன்னுல்தானேம்மா மனத்தில் பதியும். அதுவும்தவிரப் பள்ளிக் கூடங்களில்—அதிலும் இக்காலத்தில் சில பள்ளிக்கூடங்களில்—இத்தகைய சிறந்த விஷயங்களை யாரம்மா போதிக்கிருர்கள்? ஒரு நாளைய பாடங்களில் முக்கால்வாசி பாட்டும் கூத்தும், அந்தவிழா, இந்தவிழா, பிறந்தநாள், பெயரிட்டநாள், பேசியநாள், பார்த்த நாள், கட்டிடங்கட்டியநாள், திறப்புவிழா, மூடுவிழா, அதற்குப் பணம், இதற்குப்பரிசு என்கிற முறையிலே குழந்தைகளுக்கு போதனுமுறை நடக்கிறது! வீட்டிலாவது சாச்வதமான நல்ல விஷயங்களைக் குழந்தைகள் ஆசைப்படும்போது சொல்லவேண் டாமா? நான் அப்படித்தான் இவர்களுக்குச் சொல்லிவருகிறேன். இதில் என்ன தப்பு? நீ என் தாயார்தானே! மாமியாரில்லையே! மாமியாரானுல் மரியாதை சற்று அதிகமாய் தடபுடல் செய்ய வேணும். தாயார்தானே என்பதால் சொல்கிறேன்—என்று கூறியபடி பக்ஷணங்களை அங்குள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுத்துத் தானும் சாப்பிட்டாள்.

பிறகு தாயாருடன் க்ஷேமலாபங்களைப் பேசி மகிழ்ந்தவாறே வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு படுக்கச்சென்றுர்கள். சிறு மிகள் இருவரும் படித்துவிட்டு வழக்கம்போல் படுத்துக்கொள்ள சுகுணுவின் வரவுக்குக் காத்திருந்து அவளைக் கட்டிக்கொண்டு படுத்தார்கள்.

இதைப் பார்த்த ஸீதாவுக்கு கோபமும் பொருமையும் பீறிக் கொண்டுவந்தன. "ஏண்டி, சுகுணு!...என்று ஆரம்பிப்பதற்குள், தாயாரின் நோக்கத்தை யறிந்த சுகுணு "சரி சரி! நீ பேசாமல் படுத்துக்கொள். வீண்வார்த்தைகள் வேண்டாம்!...என்று ஒரு அதட்டுப்போட்டு அடக்கினுள்.

அதையும் கேட்காமல் ஸீதா "நன்றுயிருக்கிறது நியாயம்! இப்படித்தான் உன் கணவன் உனக்குத் திட்டமிட்டிருக்கிருரா?... என்று முடிப்பதற்குள் சுகுணுவுக்குக் கோபம் வந்துவிட்டது. என்னம்மா குழந்தைகள் எதிரில் அஸம்பாவிதமான பேச்சு! நான் பூடகமாய் சொன்னுல் தெரியாது. பேசாமலிரும்மா···வத்ஸலா! குந்தலா!..முட்டைக்கார முனிசாமியின் கதை நேற்றுபாதி சொன்னேன்; அதற்குள் தூங்கிவிட்டீர்கள். இன்று முழுதும் சொல்லட்டுமா!

கேளுங்கள்...ஒரு சிறந்தமனிதன் பக்திமான் என்றெல்லாம் சொன்னேன் பாருங்கள், அவனுக்கு யாத்திரைபோக வேண்டும் என்று ஆசையாயிருந்தது. அந்த மனிதனுக்கு வேறு திக்கு யாருமில்லை. அவனிடம் சில இரும்புக் கம்பிகள், இரும்பு சட்டங்கள் இருந்தன. இவற்றை வீட்டில் வைத்தால் திருடன் கொண்டுபோய்விடுவானே என்கிற பயத்தால் முனிசாமி என்கிற தனிகனிடம் இந்த சாமான்களை ஒப்படைத்துவிட்டு "நான் யாத்திரைசென்று திரும்பி வந்ததும் இதை வாங்கிக்கொள்கிறேன்" என்று கூறிச் சென்றானும்.

யாத்திரை செய்து திரும்பிவிட்டான். முனுசாமி வீட்டிற்குப் போய் தான் வைத்த பண்டங்களைக் கேட்டான். பேராசை பிடித்த முனுசாமி "நீங்கள் வைத்துச்சென்ற இரும்புகளை அப்படியே கரையான் அரித்துவிட்டது" என்று ஒரேயடியாய்ப் பொய் சொன்னான். "இரும்பைக்கூட கரையான் அரிக்குமா? சொல்கிற பொய்யும் பொருத்தமாக இல்லையே" என்று கூட அவன் புத்தியில் தோன்றவில்லை.

பார்த்தான் யாத்ரீகன்: பேசாமல் வீட்டிற்கு வந்துவிட்டான். முனுசாமியின் இரண்டுவயது குழந்தை வீதியில் தத்தித்தடுமாறி நடந்துவருவதைக் கண்டு யாத்ரீகன் அக்குழந்தையைத் தன் வீட்டில் பதுக்கிவிட்டான். முனுசாமி குழந்தையை ஊரெல்லாம் தேடியலைகிறான். இந்த வீட்டுக்குள்தான் குழந்தை போயிற்று என்று யாரோ சொன்னதும் ஓடிவந்து யாத்ரீகனைக் கேட்டான். யாத்ரீகன் சரியான புத்தி புகட்டுவதற்காக "ஆமாம்! குழந்தை வந்தது. அதை ஒரு பெரிய கொசு தூக்கிக்கொண்டு பறந்து சென்றுவிட்டது" என்றான்.

மிகுந்த கோபமுடைய முனிசாமி "என் ஐயா! ஏமாத்தி மோசம் செய்கிறாய்?...ஒரு சிறிய கொசுவாவது குழந்தையைத் தூக்கிச் செல்வதாவது? புத்தியில்லை உமக்கு?" என்று அதட்டினான். யாத்ரீகன் நிதானமாய் "எனக்கு புத்தியில்லை; வாஸ்தவந்தான்! இரும்புப் பொருள்களை கரையான் தின்றபோது கொசுமட்டும் குழந்தையைத் தூக்காதா?" என்று பலர் முன்பு அவமானப்படுத்தினான். பிறகு வெட்கித் தலைகுனிந்து தன் தவறுதலுக்கு மன்னிப்புக்கோரி பொருளைக் கொடுத்துவிட்டுக் குழந்தையைப் பெற்றுக்கொண்டு சந்தோஷமாய்ப் போனானும்...கண்ணா! கதையும்காட்டுக்குப் போச்சு. நானும் வீட்டிற்கு வந்தேன்!...தூங்கிவிட்டீர்களா?...என்றாள்.

அபாரமான குதூகலத்துடன்சிறுமிகள் கதையை ரஸித்துப் பின் 'மன்னீ! பிறரை ஏமாற்ற நினைத்தது எவ்வளவு பெரிய தப்பு பார்த்தாயா?...மோசமே செய்யக்கூடாது மன்னீ!" என்று தம் அபிப்ராயத்தையும் கூறிப் பின் தூங்கிவிட்டார்கள். சுகுணாவின் உள்ளம் எப்படி ஆனந்தத்தினால் நிரம்பியதோ அதேபோல் அவள் தாயாரின்உள்ளம் கோபத்தினாலும்பொறுமையினாலும் துள்ளியது.

4

போதனைக்குத் தகுந்த வேதனை

மறுநாள் வெள்ளிக்கிழமை. தானே எண்ணெய் தேய்த்து விடுவதாகக் கூறிய ஸீதம்மாள் அதையே சாக்காகக்கொண்டு சிறுமிகளை நன்றாகக்கண்டித்து "நீங்கள் புத்திதெரிந்த பெண்கள்; வேலைக்காரியிடம் படுப்பதற்கென்ன? இருவராக இருக்கையில் பயமென்ன?"...என்று ஏதோ தான் மனத்தில் நினைத்ததை எல்லாம் குழந்தைகளுக்குப் புரியாத விஷயங்களுடன் கதம்பமாக்கிக் கூறி மனத்தைப் புண்படுத்திவிட்டாள்.

ஸ்நானம் செய்த சிறுமிகள் பூஜைசெய்ய வந்து கலந்து கொள்ளாமல் அழுதுகொண்டிருப்பதைப் பார்த்த சுகுணவுக்குத் தான் சந்தேகித்தபடியே ஏதோ நடந்துவிட்டதாகப் புரிந்து விட்டது. சிறுமிகளுக்குத் தலையை ஐடை போட்டபடியே "என் அழுகிறீர்கள்? கண்ணா! சொல்லுங்கள்" என்று அன்பாகக் கேட்டாள். "இனி நாங்கள் உன் பக்கத்தில் படுக்கக்கூடாதாம் மன்னி! அந்த மாமி திட்டுகிருள்" என்று கூறும்போது அடக்க முடியாது துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. விக்கிவிக்கி அழுதுவிட்டார்கள்.

சிறுமிகளைச் சமாதானம்செய்து அவர்களுடைய எதிரிலேயே தன் தாயாரைக் கண்டித்துக் கோபித்துக்கொண்டு சிறுமிகளை பூஜைசெய்யச்செய்துஆகாரம் ஊட்டிஇடைவேளைக்கான ஆகாரத்தையும் கொடுத்துப் பள்ளிக்கூடம் அனுப்பினுள். உண்மையில் தன் தாயார் வந்ததைக் கண்டு உள்ளம் அபரிமிதமாகப் பூரிக்க வேண்டியதற்குப் பதில் அபாரமான கோபமே வந்தது. "ஏம்மா! உன் மகளை ஆசையாய்ப் பார்க்க வந்தாயா? அல்லது குடும்பத்தில் அமைதியைக் கலைக்கவந்தாயா? தாயற்றச் சிறுமிகளின் மனத்தை நோகவைத்துவிட்டால் நீ என்ன சந்தோஷத்தை வாரிக்கட்டிக்கொள்ளப்போகிருய்? இது என் கணவருக்குத் தெரிந்தால்அவர் மனதும் கலங்கித் தவிக்குமல்லவா? இதென்ன பிரிவினையம்மா?...

ஸீதா:—போதுமடீ! பெரிய நூற்றுப்பாட்டிபோல்பேசுகிருய்? எனக்கில்லாத உலகானுபவமும் குடும்பத்தின் அனுபவமும் நேற்றுக் காலையில் முளைத்த மொட்டான நீ கண்டுவிட்டாய்! சிறுசுகள் காலாகாலத்தில்......

"அம்மா! நான் உன்னை நமஸ்காரம் செய்து வேண்டிக்கொள்கிறேன். நீ சகஜமாக சந்தோஷத்துடன் இருப்பதானல் இரு. இல்லையேல் நீ இன்றே ஊருக்குப் போகலாம். எனக்கு யாரும் உபதேசம் செய்யவேண்டாம். ஏன்! உன்னுடன் பிறந்த தங்கை தன் மூத்த மனைவியின் மக்களை செக்கிலிட்டு ஆட்டாத குற்றமாய் நடத்துகிருளே...அதைக் கண்டு உலகம் ப்ரமாதமாகக் கொண்டாடுகிறதே! அப்படி என்னையும் பார்க்க நீ விரும்புகிருயா?...ஏன்? உன் தங்கைவரையில் போவானேன்? நீ கூடத்தான்! பெரிய அத்தை ஒரு பரதேசிக் குழந்தையை வைத்துவிட்டு செத்துப் போனுளே; அந்த ஒரு குழந்தையை எடுத்து வளர்க்க உன்னல் முடியாமல் அதைப் பாடாய்ப்படுத்தி விரட்டிவிட்டு அவளை அல்லல்படுத்தினயே! அப்படி நானும் என்னருமைக் கண்மணி

களைச் செய்ய எண்ணுகிருயா?... இதோ பாரம்மா... தாயும் மகளும் சண்டைபோடுவது கண்டு உலகம் சிரிக்கும். நான் என் கணவரின் நிழல். அவர் மனங்கோணுது அவர் முகோல்லாஸமாக வாழ்வதே என் லக்ஷ்யம். இனி அந்த குழந்தைகளிடம் நீ எதுவும் சொல்ல வும் வேண்டாம். என்னிடமும் சண்டைபோடவேண்டாம்! அன்பை வளர்க்கப் பாடுபடவேண்டுமேயன்றி அதை வெட்டி விடுவதுதான் மனிதர்கள் செய்யும் கடமையா? இப்படி கிராதகத் தனமாய் சில பெண்கள் நடப்பதனுல்தான் 'அடேயப்பா! பெண் களா! ராக்ஷஸிகள்' என்று சில மூடர்கள் அதையே வைத்துக் கொண்டு நல்ல பெண்களையும் தூற்றுகிருர்கள்.

ஏன்? பெண்களின் தெய்வமாகிய சாக்ஷாத்லோகமாதாவான ஸீதாபிராட்டி தனக்கு மகத்தான அபசாரத்தைச் செய்துவிட்ட காகாஸுரனையும் தன்னை இம்ஸித்த ராக்ஷஸிகளையும் காப்பாற்றித் தன் கருணைவெள்ளத்தைக் காட்டினுளே. அந்தஉத்தமலக்ஷணத் தை ஏன் நாம் கைகொள்ளக்கூடாது. நமக்கு எத்தகைய விரோத மும் செய்தறியாத பச்சைக் குழந்தைகள்மீது அனுவச்யமாய் ஏன் பகையை உண்டாக்கி விஷவிதையை விதைக்கிருய்? என்மேல் உனக்குக் கோபம் வந்தாலும் வரட்டும், அந்த தாயற்ற குழந்தை களுக்கு ஒருதாம்பூலம் வாங்கிவராமல் பக்ஷபாதமாய் எனக்குமட்டும் நீ கொண்டுவரும்போதே நான் உன்உள்ளத்தைநன்ருகத்தெரிந்து கொண்டுவிட்டேன். அதுபோலத்தான் சகலமும் நடந்துவிட்டது.

மக்கள் தவறுதலான வழியில் நடந்தால் தாயார் புத்தி மதிகள் கூறித் திருத்துவதுபோக; நல்லவழியில் நடப்பதையே நீ நாசமாக்க வந்தது சற்றும் நன்ருயில்லை! வீண்சண்டை வேண் டாமம்மா'' என்று படபடவெனக் கூறிவிட்டாள்.

உள்ளிருந்தபடியே இத்தனையும் கேட்டுக்கொண்டே உட்கார்ந் திருந்த சுகுமாரனின் இதயத்தில் ஆனந்தம் தேங்கியது. அவன் கண்களில் ஜன்னல் வழியாக ரோஜாச்செடி கொத்துக்கொத் தாக புஷ்பித்துக் குலுங்கக் காட்சியளித்ததைக் கண்டதும் 'அடாடா!, இத்தனை முள்ளுகள் நிறைந்த செடியில் எத்தனை மண மும்அழகும்ம்ருதுத்தன்மையும்சிவந்தவர்ணமும்கூடியபுஷ்பம் புஷ் பித்திருக்கிறது! சுகுணுவும் ரோஜாமலர்போல்கொடிய குணமுள்ள தாயின் வயிற்றில் தோன்றியிருக்கிருள். என் தாயார் செய்த மகா பாக்யந்தான் இத்தகைய மாணிக்கத்தை நான் அடைந்திருக் கிறேன்'' என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் பூரித்தான். ரோஜா மலரில் சுகுணுவின் அழகிய வதனம் அப்படியே தெரிவதுபோல் ப்ரகாசித்தது!

5

முள்ளுச் செடியில் ரோஜா மலர்

எத்தகைய சண்டையோ, மனஸ்தாபங்களோ இன்றி மேலும் 5,6-வருஷங்கள் உருண்டோடிவிட்டன. குந்தலாவையும் வத்ஸ லாவையும் யவ்வன தேவதை பரிபூர்ணமாய் ஸ்வீகரித்துவிட்ட தால் அவர்களுடைய ஸௌந்தர்ய சோபையின் ஜீவசக்தி காண் போர் கண்களைப் பரவசமுறச் செய்தது. அழகே உருக்கொண்

183168.

டதுபோன்று ப்ரகாசிப்பதுபோல் படிப்பிலுங்குறையாமல் படித்து S. S. L. C. பரிக்ஷையை முடித்துவிட்டு காலேஜ் படிப்புக்கும் சேர்ந்துவிட்டார்கள். சுகுணவின் அன்புக்கு நிகர் இந்த உலகத்தில் வேறெதுவும் இல்லை என்ற ஆழமான ப்ரேமையும் நம்பிக்கையும் இருவர் மனத்திலும் உண்டாகி வேரூன்றிவிட்டது. சுகுணவுக்கு சொர்ணப் பதுமைபோல் பிறந்துள்ள குழந்தையை அத்தைகள் கீழே விடுவதே கிடையாது. சதா...நான்...நீ... என்று போட்டியிட்டுத் தாமே சகலமும் செய்து இன்புறுவதில் அலாதி ப்ரேமை கொண்டார்கள்.

யுக்த வயது வந்துவிட்டதால் பலபேர்கள் இவர்களை மணப்பதற்கு வலைவீசி ஜாதகங்களை யனுப்பியும் நேராகப் பார்த்துப் பேசியும் சுகுமாரனிடம் ப்ரஸ்தாபித்தார்கள். சுகுமாரனுக்கு இப்போது இன்னும் பெரிய உத்யோகமும் சம்பள உயர்வும் ஏற்பட்டு நன்மதிப்புடன் ப்ரகாசிப்பதால் பல பெரிய மனிதர்கள் வந்து கேட்கத் தொடங்கினார்கள்.

சுகுணவின் தாயாரும் இந்த சந்தர்ப்பத்தைக் கைவிடாமல் சுகுணவுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அது வருமாறு:

"ஸௌபாக்யவதி சுகுணவுக்கு ஆசீர்வாதம். உபய க்ஷேமம். உன் குழந்தையின் பிறந்தநாளைக்கு நான் வந்திருக்கையில் நேரில் ப்ரஸ்தாபிக்க எண்ணினேன். ஆனால், சில வருஷங்களுக்குமுன்பு நீ விட்ட பெரிய சவுக்கடியின் நினைப்பில் பேசாமலிருந்துவிட்டேன். உன் தாயார் என்கிற சுதந்திரத்துடன் இதை எழுதுகிறேன். உன் நாத்தனார்களின் அழகும் பாட்டும் வசிகரமும் என் மனத்தைக் கவருகிறது. ஆதியில் நான் செய்த தப்பிதத்தை உணர்ந்து வருந்துகிறேன். உன்னுடைய அன்பு வளர்ப்பினாலும் அறிவின் வளர்ப்பினாலும் அவர்கள் இத்தனை புத்திசாலிகளாயிருப்ப தாயும் ஒவ்வொரு பெண்ணும் அறிவுப்பாலூட்டி மக்களை வளர்த்தால் உலகம் எத்தனை க்ஷேமத்தையடையும் என்றும் உன் தகப்பனார் பூரித்துப்போய் உன்னைக் கொண்டாடிச் சொல்கிறார். ஏதோ திருக்குறளாமே....அதில்,

> *" தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
> *மன்னுயிர்க் கெல்லா மினிது"*

இந்தப் பாட்டைக் கூறி, தான் மகளைப் பெற்ற பெருமையை அடைந்திருப்பதாகவும் சொல்கிறார். ஏதோ உன்னால் அபாரமான இன்பத்தையடையும் எனக்கு நீ பின்னும் ஒரு உபகாரம் செய்து மகிழவைக்கவேண்டும். உன் பிறந்தகமும் சுகமாக வாழ்வு நடத்த நீ உதவி புரிய கடமைப்பட்டிருக்கிறாயல்லவா? அந்த முறையில் உன் நாத்தனாரில் ஒருத்தியை உன் தம்பிக்குக் கொடுத்து மணம்முடித்தால் பரம சந்தோஷமாயிருக்கும். நீயும் மருமகப்பிள்ளையும் மனம் வைத்தால் நடக்கும். இதை மாபபிள்ளையுடன் கலந்து யோசித்து உடனே பதில் எழுது. உன் வார்த்தைக்கு உன் நாத்தனார்கள் குறுக்கு சொல்லமாட்டார்கள், ஆகையால் உடனே பதில் எழுது நான் வருகிறேன். உன் அன்புள்ள தாயார்

ஸ்ரீ தம்யாள்

இதைப் படித்ததும் எதனாலோ கடகடவென்று சிரித்தாள் சுகுணா. இந்த சிரிப்பின் ஒலியைக் கேட்டுத் திரும்பிப்பார்த்த சுகுமாரன்: "என்ன சுகுணா! ஏதோ ஹாஸ்யக் கட்டுரையோ விகடவெடியோ படித்துவிட்டுச் சிரிப்பதுபோல் சிரிக்கிறாயே. கடிதத்தில் அத்தனை ஹாஸ்யமாக யார் என்ன எழுதியிருக்கிறார்கள்?" என்றான்.

சுகுணா மறுபடியும் சிரித்துக்கொண்டே "சரிதான் இக்காலத்தில் கட்டுரைகளுக்கோ, சிறுகதைகளுக்கோ, விகடங்களுக்கோ குறைவே இல்லாது குப்பை குப்பையாகத்தான் வருகின்றனவே. அதை வெளியிடுவதற்கான பத்ரிகைகளும் தினம் பிறப்பதும் இறப்பதுமாக தம் ஜென்ம வினையை முடிக்கின்ற வேடிக்கையையும் பார்க்கிறோம். கட்டுரைகளும் மற்ற எதுவும் தாராளமாக இருக்கின்றனவேயன்றி அதில் அனுபவித்து மகிழும் அம்சமும் கருத்தும் ஹாஸ்யமும்தான் குதிரைக்கொம்பாக விருக்கிறது. 'இதற்கு ஹாஸ்யம் என்று பெயரா?'...என்று நினைத்துத்தான் சிரிக்கவேண்டும். அப்படிப்பட்ட பயங்கரங்கள் எதுவுமில்லை. எங்கம்மா சமத்தாய் எழுதியிருக்கிறாள்! இதோ படியுங்கள்." என்று கடிதத்தைக் கொடுத்தாள்.

சுகுமாரன் கடிதத்தைப்படித்துவிட்டு "அடாடாடா! உன் நாத்தனாருக்கே நீயே நாத்தனாராகப் போகிறாயா? பலே! மெத்த பொருத்தமான சம்மந்தமல்லவா? சுகுணா! பதில் உடனே எழுதிவிடு" என்று அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டே கூறினான். "இதோ எழுதிக்கொண்டுவருகிறேன்" என்று கூறிவிட்டு எழுத உட்கார்ந்தாள்.

பத்து நிமிடத்தில் கடிதத்தை எழுதிமுடித்துக் கணவனிடம் கொடுத்துவிட்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் சிரித்தபடியே நின்றாள். சுகுமாரன் கடிதத்தைப் படிக்க வாரம்பித்தான்:

"அன்புள்ள அம்மாவுக்கு நமஸ்காரம். உபயக்ஷேமம். உன் கடிதத்தைக் கண்டு நான் ஒரே வியப்புக்கடலில் திளைத்தேன். வளவள வென்று நான் கடிதத்தை வளர்த்தப் போவதில்லை. ஒரே வார்த்தை. தன்வீட்டு விளக்கானாலும்கூட முத்தமிட்டால் சுடாமலிருக்காது. தனது குலதெய்வமாக சர்ப்பத்தை எண்ணியவர்கள் அதைத் துணிந்து தீண்ட நடுங்குவார்கள். அதன் விஷம் அதைவிட்டுப் போகாது. அதுபோல் நீ என் தாயாக இருக்கலாம்; சலுகை காட்டிக் கேட்கலாம். ஆதியில் நீ குழந்தைகள் மனத்தைப் புண்படுத்தி பேதிக்கச் செய்ததை இதற்குள் நீ மறந்துவிட்டாய். ஆனால், என் குழந்தைகள் மறக்கவில்லை. அத்தகைய உனக்கு நாட்டுப் பெண்ணாக வருவதற்கு எந்தப் பெண்ணும் சம்மதிக்கமாட்டாள் என்பதை இனியாவது உணரவேண்டும். அதோடு நான் பெத்தபெண்ணாக விருப்பினும்கூட என் தம்பியின் பவிஷை நான் உடன் பிறந்தநாள் முதல்பார்த்துக்கொண்டிருக்கையில் அவனுக்குத் துணிந்து கொடுக்கமாட்டேன். அவனுடைய நிலைமைக்கு நானாகவிருந்தால் அனாவசியமாய் ஒருபெண்ணின் வாழ்வைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்க ஒருபோதும் சம்

மதிக்கமாட்டேன். விவாகத்தைச் செய்துவிட்டால் திருந்தி விடுவானே! என்கிற அளவும் மீறிவிட்டவனுக்கு நீ ஆசைப் படுவது சற்றும் சரியில்லை. அறிவிலும் ஆற்றலிலும் மற்ற சகல அம்சங்களிலும் வெகு சிறப்பாக வளர்ந்துள்ள என் குழந்தைகளை நான் கொடுக்கக் கனவிலும் இசையமாட்டேன். இனி கல்யாணம் என்கிற விஷயத்தில் தயவு செய்து நீ தலை யிடாதே. நான் இப்படி எழுதுவதற்கு நீ கோபிக்கலாம். அதற்காக நான் என்ன செய்யமுடியும்? என் செல்விகளுக் குத் தகுந்த கணவரைக் கடவுள் படைத்திருப்பார். அதை அவரே காட்டியுங் கொடுப்பார். என் கணவரின் மாசற்ற உயர்ந்த குணமுடைய மனத்திற்குப் பகவான் ஒரு குறைவும் செய்யமாட்டார். அந்த நம்பிக்கை எனக்கு உண்டு. அப் பாவுக்கு எனது நமஸ்காரத்தைத் தெரிவி'' இங்ஙனம்,

சுகுண''

என்று எழுதியிருந்ததைப் படித்து வியப்புக்கடலாடி ஞன். மறுபடியும் அவன் கண்முன் ரோஜாச்செடியின் முள்ளி னின்று இத்தகைய குணவதியை பகவான் எப்படித்தான் சருஷ் டித்துத் தனக்களித்தான் என்ற ஆச்சரியம் அபாரமாகப் பொங் கியது. தன்னைமீறி அன்புடன் சுகுணாவின் முதுகில் தட்டிக் கொடுத்துத் தன் ஆர்வத்தைத் தெரிவித்தான்...''சுகுண! இந்த கடிதம் உன் தாயாரின் மனத்தைப் புண்படுத்துமல்லவா?... என்று முடிப்பதற்குள்...''வாஸ்தவம்! என் தாயாரின் அசட்டு ஆசையின் அலங்கோலம் என்னருமைக் கண்மணியின் வாழ்க்கை யையே பாழ்படுத்திவிடும் என்று அறியாமல் எழுதிய குற்றத்தை இப்போது உணரட்டும். இனி இம்மாதிரி அசட்டுத் தனமாக எழுதமாட்டாளல்லவா!...சரி, இதைத் தபாலுக்கு அனுப்பிவிட்டு நேற்று உங்கள் சிநேகிதர் சொன்ன இடத் திற்குப் போய்ப் பார்க்கக் கிளம்புங்கள். சகல விவரமும் விசாரித் துக்கொண்டுவாருங்கள். முதலில் பெண்ணும் பிள்ளையும் பார்த்து சம்மதப்பட்டால் மேல்கொண்டு நடக்கவேண்டியதைப் பேசலாம். முக்யமாகப் பிள்ளையாண்டான் நம் வத்ஸலாவுக்குப் பிடிக்கும்படி லக்ஷணமாய், கம்பீரமாயிருக்கிருை என்பதைப்பார்த்துக்கொண்டு மேலே ப்ரஸ்தாபம் செய்யுங்கள்'' என்று கூறியனுப்பினுள்.

வத்ஸலா சிரித்துக்கொண்டே மன்னிக்கு டிபன் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, ''மன்னி! மன்னி! இதோ டிபனுக்கு முன்பு இதைப் பாரு'' என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அதுவும் தன் தாயாரின் கையெழுத்தாகவே இருப்பதைக்கண்டு சிரித்துக்கொண்டே படித்தாள்:

''கண்ணூ! நீ கட்டாயம் மன்னியின் தம்பியைத்தான் விவாகம் செய்துகொள்வேன் என்று பிடிவாதம்செய். நான் உன்னைக் கண்மணிபோல் வைத்துக் காப்பாற்றுகிறேன். திட்டமாட்டேன். நீயே இந்த வீட்டின் சர்வாதிகாரியாய் வாழ்க்கை நடத்தலாம். உயர்ந்த நகைகள் புடவைகள் முதலியன வாங்குகிறேன். உன் மன்னியே உனக்கு நாத்தனு ராகிவிடுவதை ப் பெருமையாக நினைக்கலாம். உன் கணவ னின் ஒப்பற்ற குணமும் நல்லமாதிரியும் எழுதி முடியாது. வெகு ரஸிகன். உனக்குப் பாட்டும் நாட்டியமும் கற்றுக்

கொடுக்க நான் இப்போதே ஏற்பாடு செய்திருக்கிறேன். நீ உல்லாஸமாய் தினம் சினிமா பார்க்கலாம். ஏன், ஸினிமாவில் நடிக்கக்கூட நீ ஆசைப்பட்டால் உன் கணவன் செய்துவிடுவான். சினிமாக்காரர்கள் அவனுக்கு உயிர் நண்பர்கள். க்ளப்புக்குப் போகலாம். பந்தாட்டங்கள் ஆடலாம்......

இதற்குமேல் சுகுணுவால் படிக்கமுடியாது ஒருபுறம் ஆத்திரமும் ஒருபுறம் ஏளனச் சிரிப்பும் உண்டாகியது. வத்ஸலாவை உற்றுப் பார்த்தாள். வத்ஸலா பதிலேபேசாமல் மன்னியையே பார்த்துக் கொண்டு நின்றாள். ஒரு வேளை மன்னிக்குத் தன் தாயார், தம்பி என்கிற ப்ரேமையினால் என்ன சொல்வாளோ! என்கிற எண்ணமும் இருந்தது.

இந்தத் தியக்கத்தின் காரணத்தை யறிந்த சுகுணு வத்ஸலாவை இழுத்து அணைத்து முத்தமிட்டுப் பின்..."கண்ணா! வருத்தப்படாதே.எத்தனையோஅசட்டுத்தனக் காரியங்களில் இதுவும் ஒன்று.உனக்குத்தக்கசரியான இடத்தை பகவான்தேடித்தருவான்.உன் அண்ணாஇப்போதுவரன்பார்ப்பதற்குத்தான்போயிருக்கிறார். பஸ்டு க்ளாஸ் பையனும்! ராஜாமாதிரி இருக்கிறானும்!... என்று பேசும்போது, வத்ஸலா ஒரே குதூகலத்துடன் ஓடி விட்டாள். சுகுணுவின் உள்ளத்தில் தன் தாயாருடைய அசட்டுத்தனமும் மூடபுத்தியும்கொண்டுவத்ஸலாவுக்குஎழுதியுள்ள கடிதத்தின்வாசகங்கள்வெறுப்பையும் ஆத்திரத்தையும்தூண்டிவிட்டன.

6

கடவுளின் சோதனை—கடுமையான ப்ரதிக்ஞை

சென்றது தெரியாமல் மேலும் இரண்டு மூன்று வருஷங்கள் ஓடி மறைந்துவிட்டன. ஒரே சமயத்தில் சில நிமிஷங்கள் வித்யாஸமாகப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகளானாலும் அந்த நிமிஷ பேதங்களால் பலபல மாறுதல்களை பகவான் உண்டாக்கி ஜாதக பலாபலன்களையும் மாற்றிவிடும் விசித்திரங்களைக் கண்ட சுகுணுவும் சுகுமாரும் வியப்புக்கடலாடினார்கள். வெகு சுலபமாக வத்ஸலாவுக்குக் கணவன் கிடைத்து விவாகமும் ஆய்விட்டது. குந்தலாவுக்கும் உடனே செய்துவிடவேண்டும் என்று ப்ரயத்தனப் பட்டும் நடக்கவில்லை. ஆனால், "குந்தலாவுக்குக் கல்யாணமே வேண்டாம். இனி கணவனே தேடப்போவதில்லை" என்கிற... ஒரு அதீதமான எண்ணம் வத்ஸலாவின் வாழ்க்கையின் சிரமிவால் சுகுமாரன் மனத்தில் தீவிரமாகப் பதிந்துவிட்டது, காரணம், ரோஜா புஷ்பத்தைவிட மெல்லிய சரீரமுடைய வத்ஸலாவை புஷ்பத்தைப் போலவே வெகு மேன்மையாக வைத்துப் பாதுகாத்து வந்தும் விதி என்பதை எவராலும் மாற்றமுடியாதல்லவா! அம்முறைக் கேற்ப வத்ஸலா எப்படி இரட்டைப் பிறவியாகப் பிறந்தாளோ! அதுபோல் அவளுக்கு விவாகமாகிய மறுவருஷமே இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்துவிட்டது கண்டு நடுங்கினார்கள் சுகுணுவும் சுகுமாரும். ஒரு புனர்ஜென்மம் எடுத்தது போல வத்ஸலா பிழைத்ததே துர்லபமாகிவிட்டது.

உலகத்திலேயே கண்டிராத குணவதியான சுகுண தன் குழந்தைகளைவிட மேலான அன்பும் அக்கரையும் கொண்டு வத்ஸலாவின் குழந்தைகளைத் தானே வளர்ப்பதோடு வத்ஸலா வையும் கவனித்து உடம்பு நன்ருகத் தேறி பழைய நிலைமையை அடையும்படிக்குச் செய்தாள். சுகுமாரனுக்கோ தன் தாயார் இரட்டைக் குழந்தையைப் பெற்றதும் இறந்துவிட்டதுபோல் தன் தங்கையும் எங்கே இறந்துவிடுவாளோ என்கிற பயம் பூர்ண மாகப் பிடித்துக்கொண்டது. அவள் உடம்பு சரியான நிலைமைக்கு வந்த பிறகே சற்று நிம்மதியாகியது.

வத்ஸலாவை அவள் புக்ககத்தில் கண்மணிபோன்று பாது காத்து அருமையாகத்தான் வளர்க்கிருர்கள். தெய்வச் செய லுக்கு யார் என்ன செய்யமுடியும்? அடுத்த ஒரு வருஷத்தில் மறுபடியும் சோதனைக்காளாகி இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தபோது இனி வத்ஸலா பிழைக்கமாட்டாள். இதோடு அவளுடைய வாழ்வே பாழாகிவிடும் என்கிற நிலைமை உண்டாகி விட்டது. பெரும் நோயாளியாய்ப் படுக்கையுடன் விழுந்துவிட் டாள். இந்த பரிதாபத்தைக் கண்ட சுகுமாரனின் உள்ளம் உடைந்துவிட்ட வேகத்தில், "ஒரு சகோதரிக்கு விவாகம் செய்து வாரிக்கொண்டது போதும்! மற்ருெருத்திக்குவிவாகமே இல்லா மல் சந்தோஷமாய் ஆரோக்யமாய் சுதந்திரப் பறவைபோல் வாழட் டும். இந்தமாதிரி இன்னல்களுக்கு அவள் இலக்காகிவாடவேண் டாம்'' என்ற எண்ணம் ஊர்ஜிதமாகிவிட்டதால் அதுமுதல் குந்தலாவை மேன்மேலும் படிக்கவைத்துச் சிறந்த உத்யோகம் செய்யும் முறையில் வ்ருத்திக்குக் கொண்டுவந்துவிட்டான்.

ஆனல், கடவுளின் மாயச் செய்கைகளையும் மனிதர்களின் மனோதத்வ உணர்ச்சிகளையும் ஒருவராலும் அறிந்துகொள்ள முடி வதே இல்லை. அந்த பரம ஆச்சரியத்தை அறியும்சக்தி இருந்து விட்டால் அவர்கள் சர்வக்ஞராகி விடுகிருர்கள். வத்ஸலாவின் தேகாரோக்யத்திற்காக அவளை அழைத்துக்கொண்டு சுகுமார் மாதக்கணக்கில் லீவு வாங்கிக்கொண்டு அவளுடனேயே பாடு பட்டுவந்தான். இம்முறையில் மேலும் சில வருஷங்கள் சென்றன. வத்ஸலா தன் குழந்தைகளுக்குத் தாயாய் எலும்புக்கூடுபோன்ற நிலைமையில் நோயாளியாகிவிட்டாள். அழகு குன்றி 'நோயாளி' என்ற பட்டத்தைக் கூருமலேயே அவளைப் பார்க்கும்போதே தெரிந்துகொள்ளும்படியாகிவிட்ட பரிதாபத்தை சுகுமார் பார்க்கச் சகியாமல் உருகினன்.

இரண்டு தங்கைகளையும் இரண்டு கண்களாகப் பார்த்து இன்புற்றுவந்த சுகுமாரனுக்கு ஒருத்தியின் ஆரோக்யம் குன்றி கேவலம் உருக்குலைந்துவிட்டதால் கணவனுடைய மதிப்பிற்கும் அவள் பாத்திரமாகாது போய்விட்ட விசனத்தினல் அவன் குன்றிவிட்டான். அண்ணனின் அளப்பரிய அன்பினல் வத் ஸலா சற்று தென்பாக இருக்கிருளேயன்றி உள்ளுக்குள் வேலை செய்யும் கவலை சொல்லிமுடியாது.

குந்தலாவோ எல். டி. பாஸ் செய்துவிட்டு ஒரு பெரிய பெண் களது உயர்தரப் பள்ளிக்கூட உபாத்தியாயினியா யிருக்கிருள். எனினும், அவள் மனத்தில் உத்ஸாகம் என்பதே குறைந்துபோய்

சதா கவலையும் ஏக்கமும் சூடிகொண்டுள்ள நிலைமையில் அவளும் நாளுக்குநாள் பலவீனப்பட்டு மிகவும் மெலிய வாரம்பித்தாள்.

சுகுணமட்டும் அவ்வப்போது தன் கணவனிடம்-"குந்தலாவுக்குக் கல்யாணத்தைச் செய்துவிட்டால் எத்தனையோ நிம்மதியாக இருக்கும். ஒருத்திக்கு உடம்பு இப்படியாகிவிட்டதால் மற்றொருத்தியை ஏன் நீங்கள் இம்மாதிரி வைக்கவேண்டும்?" என்று சொல்லியும் சுகுமாரன் மட்டும் அதற்குச் சம்மதப்படவே இல்லை."போதும்! போதும்! சுகுணா! வத்ஸலாவைப் பாழாக்கிவிட்டதுபோதும்! நாலு குழந்தைகளும்நாரும்நரம்புமாகிவிட்ட அவள் வாழ்க்கையும் என்னிதயத்தில் ஆணியறைந்ததுபோல் வேதனை செய்கிறது. என் மனப்புண்ணை மீண்டும் கிளறிவிடுவதுபோல் இவளுக்கும் விவாகத்தைச் செய்து நான் கவலைப்படப்போவதில்லை. அவள் நிம்மதியாய் சந்தோஷமாய் வாழ்ந்தால் போதும். என்றுதான் நான் நினைக்கிறேன்" என்று பிடிவாதமாகக் கூறிவிட்டான். அதற்குமேல் முரட்டுத்தனமாகச் சொல்வதற்குப் பயந்த சுகுணா பணிவுடன் போய்விடுவாள்.

இப்படியே வெகு நாட்கள் கழிந்தன. குந்தலாவுக்கு மட்டும் உள்ளூர தனக்கு விவாகமாகவேண்டும்; கணவனுடன் இன்பமாய் இல்வாழ்க்கை நடத்தி மகிழவேண்டும் என்கிற ஆசை இருக்கிறது. எனினும், அதை அவள் வெளியிடவேஇல்லை. கவலைப்படுவதாகவும் காட்டிக்கொள்ளாமல் எப்போதும் போலவே நடந்துவருகிறாள். எனினும், மனக்கவலையினால் உடல் மெலிந்து பொலிவு குன்றிப்போவதை அவளால் எப்படி மறைக்கமுடியும்? ஆனால், தன் மனத்திலுள்ள விருப்பத்தை வெளியிடவும் மாட்டாது தனக்குள்ளேயே அடக்கிவந்தாள். அதன் பயனாக இன்னும் சரீரம் மெலிவடைந்தது.

7

வாடிய ரோஜா மலர்ந்தது!

இரவு 10 மணி இருக்கும். வீதியில் தடபுடலான பாண்டு வாத்யத்துடன் ஒரு பெரிய ஊர்வலம் வந்தது. அதை எல்லோரும் வந்து பார்த்தார்கள். அப்போது குந்தலா யாருக்கோ கடிதமெழுதிக்கொண்டிருந்தாள். ஊர்வலம்பார்க்கும் ஆசையில் அதை அப்படியேவிட்டுவிட்டு மாடி வராண்டாவில் நின்று பார்த்தாள்.

தற்கால நாகரீகப்படி லஜ்ஜை என்பதையே மறந்து அன்றுதான் விவாகமாகிய தம்பதிகள் தடபுடலாகப் பேசிக்கொண்டு போவதையும் அவர்கள் முகத்தில கொந்தளிக்கும் அன்பு, புதிய மகிழ்ச்சி வெள்ளத்தின் துடி துடிப்பு, தனித்த ஒரு ஜீவகளை நிரம்பித்ததும்பும் வசீகரம் முதலியவைகளைப்பார்த்து குந்தலா பெருமூச்சு விடுவதை சுகுணா நன்றாகக் கவனித்தாள். குந்தலாவின் நிழல்போலிருந்தவாறே வெகு சாமர்த்தியமாய் சுகுணா அவளுடைய மனோபிலாஷையை கவனித்துவருகிறாள். அம்முறையில் இப்போது இதைப் பார்த்ததும் சுகுணாவும் ஒரு பெருமூச்சுவிட்டவாறு தன் கணவனை அழைத்துவந்து காட்டுவதற்காக உள்ளே சென்றாள்...

வழியிலுள்ள குந்தலாவின் ரூமில் விளக்கெரிவதும் கடிதம் பாதி எழுதியது அப்படியே வைத்திருப்பதும் கண்டு இதைப் பார்க்கவும் ஆவல் தூண்டுகிறது...பிறரது கடிதங்களைப் பார்ப்பது குற்றமாயிற்றே...என்றும் தோன்றுகிறது. எனினும், நல்ல யுக்த வயதுவந்து மனோரதம் ஈடேறாமல் தவிக்கும்குந்தலாவிடம் விகல்பமான சந்தேகம் எதுவுமே இல்லை என்றாலும் இக்கடிதம் யாருக்கு என்ன எழுதுகிறாள் என்பதையறிய மனம்தூண்டியதால் அதைப் பார்த்தாள். அது வருமாறு:

"அன்புள்ள விசாலிக்கு, உபயகுசலம்.

நீ வெளியூர்மாற்றலாகிச்சென்று சந்தோஷமாயிருப்பதை உன் கடிதத்தினால் கண்டு மிகமிக மகிழ்வடைந்தேன். நீ பாக்யசாலி. கடவுள் உனக்கு சகல ஸௌபாக்யங்களையும் கொடுக்கவேண்டுகிறேன். தவிர, நீ கடிதத்தில் எழுதியிருந்த இரண்டு விஷயங்களையும் நான் பலமாகக் கண்டிக்கிறேன். என் அண்ணனும் மன்னியும் வேண்டுமென்று எனக்கு விவாகம் செய்யாதிருப்பதாக நீ கனவிலும் நினைக்காதே. என் அண்ணாவும் மன்னியும் இக்கலிகாலத்தில் பிறக்கத் தகாத மாணிக்கங்களாவர்கள். அவர்களே என் தாய் தந்தை, குரு, தெய்வம் சகலமும் என்று நான் என்னிதய பூர்வமாக நம்பி இருக்கிறேன். என் சகோதரியின் நிலையைக் கண்டு பரிதாபப்பட்டு மனம் உடைந்து என் அண்ணா எனக்கு விவாகம் செய்ய விரும்பவில்லை என்பதை நான் பலமுறை உன்னிடம் சொல்லி இருக்கிறதை நீ மறந்துவிட்டாய். என் அண்ணாவைவிட ஆயிரம்பங்கு அதிகரித்த வாத்ஸல்யத்தையும் அன்பையும் என் மன்னி எங்களிடம் வைத்திருப்பதை அளவிட்டே கூறமுடியாது. அவள் சதா அண்ணனிடம் இதுவிஷயமாகச் சொல்லிக்கொண்டுதான் வருவதையும் நான் அறிவேன். நீ எழுதியபடி நவநாகரீகத்தின் பூச்சல் எனக்கு வேண்டாம். நான் யாரையும் கண்ணெடுத்தும் இது வரையில் பார்த்ததும் இல்லை. இனி, பார்க்கப்போவதுமில்லை. இந்த செய்கை கேவல அநாகரீகமானது, அடாதது, பெண்களின் தர்மத்தை அழிக்கக்கூடியது என்பதே என் துணிபு.

நீ என்ன துறவியா? என்று அசட்டுத் தனமாகக் கேட்கிறாய். துறவியாகப் பெண்கள் வாழ முடியும். அது ஒரு ப்ரமாதமல்ல. ஆனால், துறவியாக வாழ நான் விரும்பவில்லை. என் அண்ணாவும் மன்னியும் சேர்ந்து விவாகத்தைச் செய்தாலன்றி நீ எழுதியபடி அஸங்கியமான முறையில் நான் இந்த ஜென்மத்தில் ப்ரவேசிக்கமாட்டேன். இது சத்தியம்! உன் அத்தானை நீ இங்கு வரச்சொன்னால் நானே அவமானபடுத்தி அனுப்புவேன். நீ இதைப்பற்றிப் பிறகு வருந்தி உபயோகமில்லை. விசாலி! இனிநீ எனக்குஇம்மாதிரி தத்துபித்தென்று கடிதமெழுதாமலிருந்தால் நான்சந்தோஷப்படுவேன். உனது

என்றதோடு கடிதம் நிறுத்தப்பட்டிருந்தது. இதைப்படித்ததும் சுகுணாவின் உள்ளத்தில் உண்டாகிய எண்ணங்கள் சொல்லிமுடியாது. எங்கே குந்தலா வந்துவிடுவாளோ என்று சடக்கென வெளியே வந்துவிட்டாள். சுகுமாரனைக் கூப்பிடவந்த இடத்தில்

கடிதத்தைப் பார்க்க நேர்ந்ததில் குந்தலாவின் அந்தரங்கத்தை நன்ருகத் தெரிந்துக்கொண்டதோடு அவளுடைய கம்பீரமானதும் பழமை கலந்த புதிய நோக்கத்தையும் கண்ணுடிபோல் காட்டிய கடிதத்திஞல் தெரிந்துகொண்டதில் மிகமிகப் பெருமை அடைந்தாள்.

இதற்குள் ஊர்வலம் நகர்ந்துவிட்டதால் குந்தலா வந்துவிட்டாள். அதற்குமேல் ஒன்றும் சொல்ல சந்தர்ப்பப்படாததால் சுகுணு மவுனம் சாதிக்கவேண்டியதாகிவிட்டது.

சுகுமாரனுடன் படித்த ஒருவன் டாக்டராக இருக்கிருன். அவன் வெகு தூரதேசத்தில் ராணுவ டாக்டராகச் சென்று தாய் நாடு திரும்பிவந்தவன். தன்பழயசினேகிதர்களை எல்லாம் பார்க்க வந்தான். அம்முறையில் சுகுமாரன் எதிர்பாராதவிதம் கேப்டன் துநாதன் சுகுமாரனைக் கூப்பிட்டவாறு வந்தான் சுகுமாரனே முதலில் அடையாளம் தெரியாமல் விழித்தான். பிறகு தெரிந்து கொண்டுப்ரமாதமாய்க் குசலப்ரச்னம்செய்து பேசவாரம்பித்தனர்.

சுகுமாரன்வெகு சந்தோஷத்துடன் அவனைத் தன் மனைவிக்கு அறிமுகம் செய்துவைத்தான்.

சுகு:—நான் பெருமையடிக்கவில்லை. என்மனைவியைப்போன்ற மாணிக்கம் இனி உலகிலேயே இல்லை எனலாம். உனக்கு எத்தனை குழந்தைகள்? நீ எங்கிருக்கிருய்? உன்மனைவி சதா வ்யாதியாயிருப்பதாக எப்போதோ சொல்லியது நினைவுவருகிறது. இப்போது எப்படி இருக்கிருள்?—என்று அடுக்கடுக்காய் கேட்டான்.

துநா:—உனக்குக் கல்யாணமாவதற்கு முன்பே நாம் பிரிந்து விட்டதால் ஒன்றுமே தெரியவில்லை...ஆமாம்!...வத்ஸலாவும் குந்தலாவும் எங்கே? அவர்களுக்கு எத்தனை குழந்தைகள்? உனக்கு எத்தனை குழந்தைகள்? முதல் செல்வம் குழந்தைகள் தானேப்பா! பிறகல்லவா ஐச்வர்யத்தைப்பற்றி விசாரணை.

சுகு:—எனக்கு இரண்டு பிள்ளைகள்; வத்ஸலாவும் குந்தலாவும் எல்லோரும் சவுக்யந்தான். ஆனல்...

துநா:—என்னடா...ஆனல் என்று இழுக்கிருய்?...

சுகு:—ஒன்றுமில்லை; வத்ஸலாவுக்குத்தான் விவாகம் செய்து வைத்தேன். இரட்டைக் குழந்தைகளாகவே இரண்டு ப்ரஸவமாகியது. அதோடு இன்னும் சில கோளாறுகளும் சேர்ந்து அவளை நோயாளியாக்கிவிட்டது. அந்தகவலையினுல் குந்தலாவுக்கு விவாகமே செய்யாமல் விட்டுவிட்டேன். அவளாவது சந்தோஷமாய் நன்ருயிருக்கட்டும். எனக்குக் கவலையும் கண்ணீரும் இல்லாது சந்தோஷமாக அவளையாவது பார்க்கலாமென்று தோன்றி விட்டதால் அவளுக்கு சரியான படிப்பு கொடுத்துவிட்டேன். இப்போது உபாத்தியாயினியாயிருக்கிருள். இரண்டு வாரமாயிற்று. உடம்பு சரியில்லாததால் ஒரு மாதம் லீவு எடுத்துக் கொண்டு படுத்திருக்கிருள். சதா நீ தூக்கிக்கொண்டு திரிந்த குழந்தைகளே இப்போது உனக்கு அடையாளம் தெரியாமலிருக்கிருர்கள். வாயேன்—என்று அவனை உள்ளே அழைத்துச் சென்ருன்.

அவன் ஆதியில் பார்த்த பிம்பங்கள் எங்கே! இப்போது பார்க்கும் ஸ்வரூபங்களெங்கே! மலைக்கும் நடுவுக்குமல்லவா வித்யாஸமாகிவிட்டது! "வத்ஸலா!...குந்தலா ..இவன் யாரு தெரி

கிறதா? என்முன் சுகு. இருவரும் முதலில் விழித்தார்கள்...குரு மாமா மாதிரியிருக்கிறதே...இத்தனை கிழவராய் வழுக்குத் தலை விழுந்திருக்கிற...என்பதற்குள், குரு பெரிதாகச்சிரித்துவிட்டு... "குந்தலா!...வத்ஸலா!... அதே குருமாமாதான்...நீ சிறுமியாயிருக்கையில் குரு குரு குரு என்று காதில் கிச்சு கிச்சு செய்து கத்துவாயே; அதுமறந்துவிட்டதா! என்னைச்சொல்கிருயே...நானுவது வெளி நாட்டில் சண்டையில் சேவைசெய்து தலை பொட்டையாகிவிட்டது. நீங்களேன் இப்படி கிழவிமாதிரி ஆகிவிட்டீர்கள்"... என்று கூறியபடி தான் டாக்டர் என்றே ஹோதாவில் இருவரையும் வெகு நன்ருகப் பரீக்ஷித்துப்பார்த்தான்.

வத்ஸலாவுக்கு என்ன மருந்துகள் கொடுத்திருக்கிறது என்கிற விவரங்களை அறிந்துகொண்டான். மறுபடி இருவரும் தனி விடுதிக்கு வந்தார்கள். சுகுமாரன் மிகவும் பரபரப்புடன் "ஏண்டா குரு!...என் வத்ஸலாவுக்கு உயிர்ப்பயமில்லையே? அதை முதலில் சொல்லு" என்று பதறப்பதறக் கேட்டான்.

குரு :—பயித்தியக்காரன்! வத்ஸலாவுக்கு உயிர்ப் பயமில்லையா என்று கேட்கும் நீ குந்தலாவைப் பரிகொடுத்துவிடுவாய் போலிருக்கிறதே!

சுகு :—என்ன! என்ன! குந்தலாவைப் பரிகொடுத்துவிடுவேனு! ஐயையோ! என்னடா இது! என் தலை சுத்துகிறதே!...

குரு :—நீ செய்துள்ள தீர்மானம் உனக்கே சோதனையாக முடிந்துவிடுமோ என்று பயப்படுகிறேன். குந்தலாவுக்கு எத்தகைய வ்யாதியுமே இல்லை. அவளைப் பார்த்தால் மனோவ்யாதியினுல் மெலிந்துபோகிருள்என்பதுநன்ருகப்புலப்படுகிறது. இத்தனைக்கும் காரணம் அவளுக்கு நீ விவாகம் செய்யாதிருக்கும் முட்டாள்தனத்தைதான் கூறவேண்டும். எங்கள் வைத்ய சாஸ்திரத்திலாகட்டும், தேகதத்துவ மனோதத்துவ சாஸ்திரத்திலாகட்டும்அந்தந்த காலங்களில் மக்கள் எப்படி எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இல்லாவிட்டால்மனோவ்யாதியினுல் உடல்மெலிந்து பலவீனப்பட்டுவிடுவதால் அந்த நிலைமையில் எந்த வ்யாதியும் வந்து தானே சடக்கென்று பிடித்துக்கொள்ளும். தெரியுமா! சிலருக்கு இதயநோய்வரும்; சிலருக்குக் கண்பார்வை குன்றும்; சிலருக்கு ரத்தம் சுண்டி காசநோயில் வைக்கும்; சிலருக்கு பயித்தியம் பிடிக்கும்; சிலருக்கு க்ஷயம்வரும்...இப்படி பலபல வ்யாதிகளுக்கு இடங்கொடுத்துவிடும். அவள் கண்ணைப் பார்க்கும் போதே நான் தெரிந்துகொண்டேனே.

சுகுமார்! இடிந்துபோய்விடாதே! உனக்கொரு உதாரணம் சொல்கிறேன் கேளு. செடியிலுள்ள சிறிய காயரும்பு நன்ருகப் புஷ்பிக்கவேண்டிய தருணத்தில் அதற்கு நிறைய ஜலமும் எருவும் இட்டுப் பாதுகாத்தால் அதன் சோபையுடன புஷ்பித்து மதுவைச் சொரியும்; மொட்டு காயாக இருக்கும்போதே தண்ணீர் வார்த்து எருவிட்டுச் செய்யாவிடில் மொக்கு கருகிவிடுவதை நீ பார்க்கவில்லையா! பயித்தியக்காரா! வத்ஸலாவை நீ இங்கு வைத்திருப்பதுகூடமிகவும் தவறு. ஒவ்வொருவருடைய விதியை ஒவ்வொரு விதமாக பகவான் அமைக்கிருன். அதற்குத் தக்கபடி சகலமும் நடக்கிறது. எனது பேஷண்டு ஒருத்திக்கு 'குழந்தையே பிறக்கக்கூடாது; பிறந்தால் செத்துவிடுவாய்' என்று பல

டாக்டர்கள் கூறி பயமுறுத்தினார்களாம். விதியை வெல்ல ஒருவராலும் முடியாது என்பதை அந்த கேஸில் நிரூபித்துக் காட்டிவிட்டேன். அதே பேஷண்டுக்கு இப்போது நான்கு குழந்தைகள் பிறந்திருக்கிறது. இன்பமாக வாழ்க்கை நடத்துகிறாள். அந்த வகையில் சேர்ந்தவள்தான் வத்ஸலா வென்று நினைக்கிறேன். நான் இன்னும் ஒரு வாரத்திற்கு இவளுக்கு ஒரு மருந்தை ஊசி குத்துகிறேன். அது எனக்கு பதில்சொல்லிவிடும். நீ இத்தனை தெரிந்தவனாயிருந்து இவளை ஏன் இங்கேயே வைத்துக்கொண்டிருக்கிறாய். கணவன் மனம் கோணாதிருக்க நீ வழிசெய்யவேண்டாமா! இதோ பாரு; ஏதோ நடந்தது நடந்துவிட்டது. இதைப் பற்றிக் கவலைப்படாதே. ஒருத்தியின் உடல் மெலிவைக்கண்டு

மத்தொருத்தியை நீ இப்படி வைத்தது பிசகு. அவளுடைய அப்பிராயத்தைக் கேட்கவேண்டாமா? அவளுக்கு மணந்து கொள்வதில் மிகவும் விருப்பமிருக்கிறதை நான் அறிகிறேன்— என்று மிகவும் அனுபவத்துடன் கூறினன்.

இவைகளைக் கேட்கக்கேட்க சுகுமாரன் தான் ஒன்று நினைத்துச் செய்த காரியத்தைக் கடவுள் ஒன்ருக மாற்றி விட்டாரே! என்ன ஆச்சரியம்!...என்று உவகைபூத்து வியப்புக் கடலாடித் தன் தவறுதலுக்கு வருத்தமும் அடைந்தான்.

சுகுமாரனின் மனம் சடக்கென்று மாறிய விசித்திரத்தைக் கண்டு சுகுண ஆச்சரியமடைந்தாள். "நான் போய் மருந்துகளுடன் வருகிறேன்" என்று கூறிவிட்டு குருநாதன் சென்ருன்.

இங்கிலேயில் பத்திரிகையில் பார்த்த ஒரு அதிர்ச்சியான விஷயத்தைப் படித்து தம்பதிகள் தீக்குளித்ததுபோலாயினர். ஏற்கனெவே சுகுணவின் தாயாருக்கு சுகுணமீது அசாத்யகோபம். தன் மகனுக்குப் பெண் கொடுக்கத் தன் வயிற்றில் பிறந்த மகளே தனக்குச் சத்ருவாகிவிட்டாளே என்ற ப்ரமாதமான கோபத் தினல் பெண்ணைப் பார்க்கக்கூட வராமல் விட்டுவிட்டாள். தன் மகனுடைய கொடுமையும் காலாடித்தனமும் எப்படியோ பெத்த தாயாருக்குக்கூடத் தெரியாமல் போய்விடுகிறது...சில சோதாக் களின் சகவாஸத்தினல் ஏதோ கீழ்த்தரமான விஷயத்தால் விபத்தில் மாட்டிக்கொண்டு தண்டனையடைந்து சிறைக்குச் சென்றுவிட்ட செய்தியைக்கேட்டு சுகுணவும் சுகுமாரனும் தீயை மிதித்தவர்கள்போல் துள்ளித் தவித்தார்கள். தன் வத்ஸலா வின் நிலேமை இப்போதுள்ள நோயாளித்தனமே மிகவும் நல்ல தாயிற்று. அந்தப் படுபாவிக்குக் கொடுத்திருந்தால் இந்த அவ மானம் தாளாது தற்கொலையல்லவா புரிந்துகொண்டிருப்பாள். நாமும் தலே தூக்கமுடியாமல் வெட்கிச்சாகவேண்டியிருக்கும். பக வான்தான் சகல அம்சத்திலும் காப்பாற்றினர்...என்று தம்பதி களும் மனப்பூர்வமாக எண்ணிக் கடவுளே வணங்கினர்கள். இத் தகைய அவகேடு நடந்தும் ஸீதம்மாள் தன் மகள்மீதுகொண்ட கோபம் அடங்கவில்லே. ஆனல், சுகுண அதைக்கண்டு சளைக் கவோ சோர்ந்துபயந்துவிடவோ இல்லே. தானே கோபம்தணிந்து வரட்டும் என்றேதைரியலக்ஷ்மியாயிருந்தாள். இந்தவிஷயத்திற்குத் தாங்கள் சம்மந்தப்பட்டவர்களாகவே காட்டிக்கொள்ளவில்லே.

வாசல் வராண்டாவில் சேரில் உட்கார்ந்திருந்த சுகுமாரனின் கண்களில் எதிரில் புஷ்பித்துள்ள ரோஜாச் செடியிலிருந்து ரோஜா மலர்கள் சில விழுந்ததும், ஆழமான எண்ணங்களும் ஆராய்ச்சி களும் தானே ஒன்றன்பின் ஒன்று தோன்றி லயிக்கச்செய்தன. அதேசமயம் சுகுண அங்கு வந்து கணவனைக் கூர்ந்து கவனித்து அறிந்தாள்.

"ரோஜா மலரே உங்களுக்கு குருவாக நின்று உபதேசம் செய் கிறதுபோல் தோன்றுகிறதே!......ஸ்வாமீ! இதோ பாருங்கள். உங்கள் இரு சகோதரிகளேயும் நீங்கள் புஷ்பமாக பாவிக்கிறீர்கள். ஒரு புஷ்பம் வாடிவிட்டதால் மற்ருெரு புஷ்பம் அப்படியே வாடாது உதிராது செடியிலேயே இருப்பதுபோலிருக்கட்டும் என்று நினைத்தீர்கள். தத்துவம் அது அல்ல. செடியிலுள்ள

ரோஜாவைப் பறித்து பகவானுக்குச் சமர்ப்பித்துத் தலையில் சூட்டிக்கொண்டபின்னர் வாடுவதால் அதன் மணத்தையும் குணத்தையும் அழகையும் பலனையும் நாம் அடைந்து உபயோகித்து திருப்தியடைகிறோம். நீங்கள் பறிக்காமலேயே செடியில் வைத்திருந்த புஷ்பம் வெய்யிலால் வாடி ஒருவித ப்ரயோஜனமும் இன்றி உதிர்ந்து அகாலமரணமாகியவர்களுடைய ஜாபிதாவில் சேர்ந்துவிடுகிறது. செடிவைத்ததன் பலனை நாமும் அடையவில்லை. புஷ்பம் எதற்காகப் புஷ்பிக்கின்றதோ அந்த பலனை அதுவும் அடையவில்லை......என்று சொல்லும் பரம ரஸிகமான வார்த்தையைக் கேட்ட சுகுமாரனை சந்தோஷத்தில் அப்படியே ஒரு குலுக்கு குலுக்கிவிட்டது. சுகுணாவின் இரண்டு கைகளையும் அப்படியே சேர்த்துப் பிடித்துக் கண்களில் ஒத்திக்கொண்டான். தேகமே பூரித்தது. "சுகுணா! நானே பாக்யசாலி. மூடியிருந்த என் கண்களை நீ பலவிதத்திலும் திறந்துவிட்டாய். நீ இதுவரையில் சொல்லிய புத்திமதிகளை நான் ஏற்று அன்றே செய்திருந்தால் எத்தனை நன்மையாக முடிந்திருக்கும்; ஏனோ என் மண்டையில் ஏறவில்லையே!"

என்று கூறும்போது சுகுணா இடைமறித்து..."ஸ்வாமீ! உங்களது மனத்தில் நன்ருக உடனே பதிந்து நீங்கள் எண்ணத்தை மாற்றிக்கொள்வதற்காகத்தான் நான் இன்னொரு காரியங்கூட செய்துவிட்டேன். அது குற்றமாகாது. குற்றமாயினும் மன்னிக்க வேண்டும். நேற்று நான் கோயிலுக்குப் போயிருக்கையில் எங்கள் ஊரில் ஆதியில் என்னுடன் விளையாடிய சினேகிதை இப்போது வயதாகி கிழவியாகிவிட்டவளைக் கோயிலில் கண்டு எப்படியோ இருவரும் பரஸ்பரம் புரிந்துகொண்டு மணிக்கணக்கில் 'பிரிந்தவர் கூடினல் பேசவும் கூடுமோ?' என்று பேசினேம்.

அவளுடைய கணவரும் கூட இருந்தார். அவர் என்னுடைய வாழ்க்கை வரலாற்றைக் கேட்டவுடனே "சுகுமாரனின் மனைவியா? ...வத்ஸலா, குந்தலாவின் மன்னியா?" என்று உங்கள் சினேகிதர் குருநாதர் என்பவர் கேட்டதும் நான் சமயத்தை உபயோகப்படுத்திக்கொண்டு நம் குடும்பவிஷயம் பூராவும் சொல்லிவிட்டு அவரை ஒன்றும் தெரியாததுபோல் வந்து டாக்டர் என்கிற முறையில் உபதேசம் செய்து உங்கள் மனத்தை மாற்றும்படி வேண்டிக்கொண்டேன். அதன்படி நடந்தபிறகுதான் இந்த ரோஜாமலரின் உபமானம் உங்கள் மனத்தில் ஏறியது. உங்கள் சினேகிதர் என் சினேகிதையின் கணவராகிவிட்டார். ஏதோ! குந்தலாவின் மனவ்யாதி இனி நீங்கிவிடும்" என்றதைக் கேட்ட சுகுமாரனின் உள்ளம் பின்னும் அபாரமான களிப்பையடைய, அவன் சுகுணாவைத் தட்டிக்கொடுத்து அன்பே வடிவாய்ப் பார்த்தான்.

மருந்து வாங்கிக்கொண்டுவந்த குரு அவன் குடும்ப சகிதம் வந்து சேர்ந்தான். "ஏண்டா பழி!...நீங்கள் சரியானபடி நாடகம் நடித்துவிட்டீர்களே! பேஷ்! நான்கூட நினைத்தேன்; வந்ததும் வராததுமாய் வெகுநாள் அனுபவப்பட்டவன்போல் வ்யாதிகளின் கூறுகளைக் கொட்டியளந்துவிட்டாயே. நீ மகாமேதை, கெட்டிக்காரன்...என்றெல்லாம் எனக்குள் எண்ணினேன்.

குரு:—ஏன்! இப்போது நான் அசடோ! போடா மக்கு!...

குருவின் மனைவி லக்ஷ்மி இடைமறித்து "சரிதான். மக்குகிக்கு என்று சம்மந்தியைப் பேசி ஏசிவிடாதீர்கள். சுகுணாவின் மகளுக் கொப்பான குந்தலாவை நமது ராஜனுக்கு விவாகம் செய்துவிடுவதென்று நாங்கள் தீர்மானித்துவிட்டோம். அதிகவார்த்தையை விடாதீர்கள்" என்றாள். இனி கேட்கவேண்டுமா!

குருவின் வைத்யத்தினால் வத்ஸலாவும் பூர்ணகுணமாகிப் புக்ககம் சென்றாள். பழைய ஸௌந்தர்யமும் வசீகரமும் எப்படியோ வந்து குடிபுகுந்துவிட்டது.

உபாத்தியாயினித் தொழிலைவிட்டுவிட்டுகுந்தலா வக்கிலாகிய தன் கணவனுக்குத் தானே காரியதரிசியாக ஆய்விட்ட பெருமை இரு குடும்பத்தினரையும் பூரிக்கச்செய்தது. சுகுணாவுக்கும் சுகுமாருக்கும் இதைவிட நித்யகல்யாண மங்கள வைபவ சுகம் வேறென்ன இருக்கிறது! மங்களம்! சுபம்!

வை. மு. கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்

ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்

ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி
பாதாஞ்சலி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை

இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜயபேரிகை

ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்

ரூ. 1-2
படகோட்டி
அபராதி

ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்
மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை

பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இளைய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி

அணா. 8
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்

அணா. 6.
உளுத்த இதயம்

வை. மு. ஸ்ரீ. நவீனங்கள்

1. உதய சூரியன் 1-4.
2. மதமா, மனமா? 1-4.
3. அவசரமூர்த்தியின் அபூர்வடயரி 1-8
4. ராணி சீலாவதி 1-[illegible]

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
காந்தி கீர்த்தனம்
கிளேஸ் பதிப்பு. ரூ.3-8.

ப்ர.ப.அண்ணங்கராசாரியர்
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்
உரையுடன் ரூ. 1.

1

"உலகத்தை எல்லாம் ஒரு தட்டிலும் தன் மகனிடம் உள்ள வாத்ஸல்யத்தை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தால் தன் மகனிடமுள்ள வாத்ஸல்யந்தான் துளசி தளத்தைப்போல் சிறந்து நிற்கும். அத்தகைய பரிசுத்தமான இதயத்தைப் படைத்தவள் பாக்யலக்ஷ்மி. அவளைப் பார்க்கும்போதே என் மனது மிகவும் ஆனந்தத்தினுல் மகிழ்கிறது. பெயருக்குத்

தக்கபடி லக்ஷ்மி களை சொட்டுகிறது. இன்று காலையில் நான் ஏதோ மனதில் நினைத்துக்கொண்டே எழுந்துவந்தேன். என் மனோரதத்தை பகவான் பூர்த்திசெய்து வைப்பதுபோல் பாக்யலக்ஷ்மியம்மாள் குங்குமம், மஞ்சள், கற்கண்டு, தாம்பூலம் முதலியவைகளைக் கொண்டுவந்து கொடுத்து, "என் கணவர் திருப்பதிக்குச் சென்றுவந்தார். ஸ்ரீ வேங்கடமுடையான் ப்ரஸாதமும் அலர்மேல்மங்கைத்தாயார் ப்ரஸாதமும் கொண்டுவந்தேன். இந்தாருங்கள்" என்று கொடுத்தபோது என்னுள்ளம் பூரித்த பூரிப்பை அளவிடவே முடியாது. அந்தம்மாளை நமஸ்கரித்து ப்ரஸாதத்தைப் பெற்றுக்கொண்டேன். "இதோ பாரு காமு! நீயும் அந்தம்மாளையே வேலைக்கு வைத்துக்கொள்ளேன். வெகு சுத்தமாகச் செய்வார்கள். கைராசிக்காரி" என்று ராஜலக்ஷ்மியம்மாள் தன் சிநேகிதைக்குச் சொன்னாள்.

இதைக்கேட்ட காமு, "என்ன ஆச்சரியம் ராஜம்! நான் வந்த காரியத்தை பகவான் எப்படி உன் மனத்தில் முன் கூட்டித் தெரிவித்தார்? என் மகள் ப்ரஸவத்திற்கு வரப் போகிறாள். அவளுக்கு நான்கு குழந்தைகளாயிற்று. என் வீட்டு ஸம்ஸாரந்தான் உனக்குத் தெரியுமே. இரண்டு மாதத்திற்கு சமயல்காரர் கிடைக்கவேண்டும். அக்கரையாயும் செட்டும் சீருமாகவும் வேலை செய்கிற ஆள்கள் கிடைத்தால் தேவலை. உனக்குத்தான் தெரியுமே என்று கேட்கவந்தேன். பாக்யலக்ஷ்மிஎப்போதுவருவாள்?" என்றாள்.

ராஜம்:—மத்யானம் பத்துதேய்க்க வருவாள். வேலைக்காரியிடம் பத்துகளைப்போட எனக்கு மனது பிடிக்கிறதில்லை. கண்ட இடத்திலும் போட்டுக்கொண்டு தேய்க்கிறார்கள். எச்சில் தீட்டு, எத்தகைய வ்யவஸ்தையும் இல்லை. தன் வாயில் குதப்பும் புகையிலை எச்சிலையும் பக்கத்திலேயே துப்பிக்கொண்டு தேய்ப்பதைப் பார்த்தால் எனக்கு வாந்திக்கே வருகிறது. ஆசாரம் ஒருபுறம் இருக்கட்டும்; சுகாதாரத்திற்கு இச் செய்கை எத்தகைய கெடுதல் தெரியுமா? யார் யார் எச்சில் துப்பி காய்ந்துகிடக்கிறதோ அந்த இடத்தில் ரோட்டில் வைத்து காகரவென்று பாத்திரத்தை இழுப்பதில் துர் வ்யாதிகள் தாராளமாக ஒட்டிக்கொள்வதோடு பாத்திரம் மூன்றே நாளில் பாழாகி ஓட்டையாகி விடுகிறது. வேலைக்காரிகளில் சிலரோ மகா வாயாடிகள். எத்தனை கொடுத்தாலும் த்ருப்தி என்பதை அவர்கள் ஜென்மத்திலேயே கண்டறியாத பேராசைப் பிண்டங்களாக இருக்கிறார்கள். இந்த அனுபவங்களை எல்லாம் பார்த்துத் தலை பொட்டையாகி விட்டது. அதன் பிறகுதான் நான் பாக்யலக்ஷ்மியை அமர்த்திக்கொண்டேன். அவள் மகா பரிசுத்தவதி. அதோடு சிறந்த பக்திக்கும்பொறுமைக்கும்அவளையே உதாரணமாகக்கூறலாம்.

அத்தகைய சாந்தியும் சந்தோஷமும் சதா நிறைந்த மனத்துடன் கூடிய த்ருப்தியும் உடையவள். கைராசிக்காரி.

ஒரு சிலரைப்போல் எத்தனை கொடுத்தாலும் த்ருப்தி என்பதே இல்லாமல் கழுகுக் கண்ணுல் பார்க்கும் கெட்ட வழக்கமே அவளிடத்தில் இல்லை. தெரிந்தும் தெரியாமலும் சிலர் சாமான்களையும் செய்த தின்பண்டங்களையும் பதுக்கிக் கொண்டு போகிருர்கள் பாரு. அத்தகைய அல்பபுத்தி சொப்பனத்திலும் இல்லை. அவள் ஏழையாக இருக்கிருளே யன்றி அவள் உள்ளம் ஏழையே இல்லை. மிகுந்த செல்வம் படைத்தவர்களிடமாவது ஏதாவது புரசலும் பூசலும் ஊசலாடும். இவளிடம் அத்தகைய சிறு விஷயங்கள் அணுவும் இல்லை. சதா அமைதியே குடிகொண்டிருப்பதைக் காணும் போது உண்மையில் நான் பூரிக்கிறேன். அவளுடைய உள்ளம் அமைதியின் அஸ்திவாரமோ......சாந்தியின் ஆலயமோ! என்று எனக்குத் தோன்றுகிறது. என்னடா! நான் அவளை இப்படி தோத்திரம் செய்கிறேனே என்று நீ எண்ணலாம். நல்லவர்களிடம் நாம் பழகும்போது அவர்களுடைய சகவாஸத்திஞல் பல நல்ல விஷயங்கள் நமக்குப் பழக்கமாகிறது. அவர்களால் வீட்டுவேலையும் நடக்கிறது. மனத்திற்கு ஆனந்தமான சில விஷயமும் தெரிந்து நம் அறிவு விசாலமாகிறது. இது என் அனுபவம். நான் இன்றே பாக்யலக்ஷ்மியை உனக்கு ஏற்பாடு செய்கிறேன்.

இன்னொரு விஷயம் காமூ! அவளுக்கு ஒரே ஒரு பிள்ளை. அவனும் மகா புத்திசாலி. வறுமையின் கொடுமையால் அவன் வாரச்சாப்பாடு சாப்பிடுகிருன். வாரச்சாப்பாடு போடும் வீட்டினர் ஒருவரை வெளியூருக்கு மாற்றிவிட்டார்கள் பாவம்! அந்த புனித கைங்கர்யத்தை நீ எடுத்துக்கொள்ளு. நீ சம்பளமே கொடுக்கவேண்டாம். உன் வீட்டில் பத்து தேய்த்து சகல வேலையும் செய்துவிடுவாள். நீ இதை மட்டும் ஏற்றுக் கொள்கிருயா?'' என்ருள்.

காமு அதற்கு இசைந்து "சரி ராஜம்! நாளைமுதல் வரச் சொல்லு. நாம் மலைமலையாக செய்யும் பாவத்தில் இந்த ஒரு கடுகளவாவது புண்ணியம் இருக்கட்டும்.'' என்று சொல்கையில், பாக்யலக்ஷ்மியின் மகன் நாராயணன் வெகு வணக்கமாக வந்து. "மாமீ! க்ராமத்திலிருந்து வந்த சிநேகிதர் கீரைத்தண்டு கொண்டுவந்தார். அம்மா இதைக் கொடுக்கச் சொன்னுள்.'' என்று கூறிக் கொடுத்தான்.

ராஜம் வெகு உத்ஸாகத்துடன் அதை வாங்கிக்கொண்டு "காமூ! இந்தப் பிள்ளைதான் பாக்யலக்ஷ்மியின் மகன் நாராயணன். வெகு புத்திசாலி. மிகவும் யோக்யமான பையன்... அப்பா! உனக்குச் சாப்பாடுபோடும் இடத்தில் யாரோ ஒருவர் மாற்றலாகி வெளியூருக்குப் போவதால் ஒரு வீடு குறைந்து

விடுகிறதே என்று பாக்யலக்ஷ்மி வருத்தப்பட்டாள். அந்த இடத்திற்குப் பதில் இதோ இத்தம்மாள் அதை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். ஆகையால் கவலைப்படாதே. அம்மா விடம் இதைத் தெரிவித்து அவளை நான் உடனே வரும்படிச் சொன்னதாகச் சொல்லு....

இதோ பாரு நாராயணு! உன் தாயாரைப்போன்ற நல்ல மனுஷி வேறு யாருமேஇல்லை. உன்னிடத்தில் அவள் உயிரையே வைத்து எப்படித்தான் பாடுபடுகிறுள் என்பது எனக்குத் தெரியுமே யன்றி உனக்குத் தெரியாது. தன்னுயிரைக் கொடுத்தாவது உன்னைக் காப்பாற்றி நல்ல வழியில் உன்னை வ்ருத்திக்குக்கொண்டுவந்து உன்னைச் சிறந்த ஸ்தானத்தில் கண்டு களிக்க அந்தம்மாளின் ஆசை பெரும் சூராவளிபோல் சுழற்றி அடிக்கிறது. அந்தம்மாளின் மனத்துடிப்பை யறிந்து நீ நன்ருகப் படித்து பாஸ்செய்துவிட்டால் நாங்கள் எப்படியாவது சிபார்சு செய்து உனக்குச் சிறந்த வேலையைத் தேடிக் கொடுத்துவிடுவோம். உன் தாயாரிடம் நாங்கள் கொண்டுள்ள விச்வாஸத்திற்காக நாங்கள் அவளுக்குச் செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். நீ அவள் மனங்கோணுமல் அன்பாய் என்றென்றும் அவள் மனங்களிக்கும் முறையில் நடந்து கொள்ளவேண்டும். இதுதானப்பா நாங்கள் உனக்குச் சொல்லும் புத்திமதிகளாகும். எதற்காக இப்படிச் சொல்கிறேன் என்ருல், இக்காலத்தில் அனேகம் பிள்ளைகள் இந்த உண்மையை உணராது பெற்ருேர்களைக் கேவலப்படுத்தித் தானும் கெட்டுத் தத்தாரியாய்த் திரிந்து வம்சத்தையே நாசம்செய்து விடுவதை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கும்போது பயமாயிருக்கிறது....

என்று முடிப்பதற்குள் காமு "ராஜம்! நீ சொல்வது முற்றிலும் உண்மை. என் தம்பியின் பிள்ளை இருக்கு பாரு, வீட்டுக்கும் அடங்காமல் படிப்பும் ஏருமல் வீணுன சோதாவாழ்க்கை வாழ்ந்து கடனுளியாகிப் பெற்ருேரும் மற்ருேரும் தலைகுனிந்து கண்ணீர் விடும்படியான முறையில் திரிகிறது. பார்க்கச் சகிக்கவில்லை. வயிற்றைப் பற்றி எரிகிறது. என்ன செய்து என்ன பலன்?" என்ருள்.

நாராய:—மாமீ! முதல் வகுப்பில் படித்தபாடமாகிய அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்...தாய்ச் சொல் துறந்தால் வாசகமில்லை......என்ற மந்திர வாக்யங்கள் என் இளம் மனத்தில் ஆணிபோல் பதிந்திருக்கின்றன. என் வாழ்நாள் பூராவும் என் தாயை நான் தெய்வமாக வணங்குவேனேயன்றி எனக்கு மற்ற தெய்வங்கூட வேண்டாம் மாமி. என் தாயின் அன்பின்போஷணையினுல்வளரும்பயிராகிய நான் அப்பயிரால் தாயின் வயிறு குளிரச்செய்ய நான் மறக்க மாட்டேன். என் தாயாரின் பழக்கவழக்கங்களும் உங்கள் போன்ற

மகாலக்ஷ்மிகளின் பழக்கவழக்கங்களும் எனக்கு நல்ல பாடங்களைக் கற்பிக்கின்றன தாயே!—என்று வினயமாயும் வார்த்தையில் வசீகரமும் அழகும் அன்பும் ததும்ப சாமர்த்தியமாய், சாதுர்யமாய்க் கூறுவதைக் கேட்டு ராஜமும் காமுவும் ப்ரமித்துவிட்டார்கள்.

ராஜ:—நாராயணா! நீ மகா சமர்த்தன் என்பதை உன் வார்த்தைகளே எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும் சகவாஸ தோஷத்தின் விபரீதக் காற்று உன்மீது அடிக்காதிருக்கவேண்டுமே என்று பயந்து சொன்னேன். கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையுமல்லவா? என் கணவர்கூட வெகு தெளிந்த புத்தியுடைய மேதாவிதான். ஆனால், யாரேனும் சினேகிதர்கள் உபதேசம் செய்துவிட்டால் உடனே அதைக் குரங்குப் பிடியாகப் பிடித்துக்கொண்டு குடும்பத்தை ஆட்டுகிறார். மனத்தைத் தளரவிடும் பலவீனத்தைப் போன்ற கேவலமானது எதுவுமில்லை. ஆகையால் உன் தாயாருக்கு அடங்கி பக்தியாய் அன்பாய்நடந்துகொள்ளு—என்று புத்திமதிகள் கூறியதை வணக்கமாகக் கேட்டுக்கொண்டு விடை பெற்றுச் சென்றான். அவன் கண்முன் தன் தாயின் அமைதியான முகமே காணப்பட்டு உள்ளத்தில் பெரும் இன்பத்தை அளித்தது.

2

மேலும் சில வருஷங்களாயின. அன்று வெள்ளிக்கிழமை; பாக்யலக்ஷ்மி மாலை விளக்கேற்றி வைத்துப் பின் ஸ்வாமி பூஜைசெய்து லக்ஷ்மி தோத்திரம் படித்து ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருக்கையில், நாராயணன் வெகு ஆர்வத்துடனும் அடங்காத மனமகிழ்ச்சியுடனும் வந்து தாயின் இரு பாதங்களிலும் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்துப் பின் "அம்மா! எனக்கு வேலை கிடைத்துவிட்டது. மாதம் 150 ரூபாய் சம்பளம் போட்டுக்கொடுத்துவிட்டார்கள். அம்மா சகலமும் உன்னுடைய ஆசிர்வாதம்தான். அம்மா! எனக்கு இப்போதுள்ள சந்தோஷத்தில் பேசவே தெரியவில்லை. நீ என்பொருட்டாகப் பட்ட ச்ரமத்திற்கு பகவான் பலனைக் கொடுத்துவிட்டார்" என்று கூறி சிறு குழந்தையைப்போல் தாயாரின் கைகளை எடுத்துக் கண்களில் ஒத்திக்கொண்டு முகத்தோடு முகம் பதித்து இன்புற்றான்.

பெத்த தாயின் தனிச் சிறப்பும் சக்தியும் வாய்ந்த அன்பின் ஆழத்திற்குக் கடலின் ஆழங்கூட நிகராகாது. அத்தனை வலிவும் ஆழமும் கொண்டதல்லவா? ஆனந்தபாஷ்பம் பொங்க "என்னப்பனே! நாராயணா! தீர்க்காயுஷ்மான் பவ! உன்னுடைய சந்தோஷத்தைக்கண்டு வாய்விட்டு அளவளாவிப் பேசி மகிழும் பாக்யம் உன் பிதாவுக்கு இல்லையே என்று என்னுள்

ளம் தவிக்கிறது. அவர் காலில் விழுந்து நமஸ்கரித்து விஷயத்தைச் சொல்லப்பா!" என்றாள்.

நாராயணனின் பிதா மகா சாது. பரம யோக்யர். பெரிய கண்யம் வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவர். மத்தியில் ஏற்பட்ட நோயின் பலனாய் வாய் இழுத்துக்கொண்டு பேச்சுத் தடைப்பட்டுவிட்டது பாவம்! இந்த அவமானம் தாளாது அவர் உருகிவிட்டார். பாக்யலக்ஷ்மியின் அன்பினாலும் ஆதரவினாலுமே அவர் உயிர் வாழ்ந்துவருகிறார் என்றால் மிகையாகாது. பிறர் கண்களில் படாமல் ஊமையைப்போல் க்ராமத்தில் தனிமையில் வாழ அவர் விரும்பியும் பாக்யம் அதற்குச் சம்மதியாமல் அவர் தன்னையும் நாராயணனையும் விட்டுப் பிரியாமல் இங்கேயே இருக்கும்படி வற்புறுத்தி வேண்டிக் கொண்டு நிறுத்திவைத்தாள். தண்டசோத்து தடிராமனாக உட்கார்ந்து சாப்பிட மனமின்றி ஒரு சோடா பாக்டரியில் உள்ளுக்குள்ளே உட்கார்ந்தபடிசெய்யும் வேலையில் அமர்ந்தார். மாதம் 20 ரூபாய் சம்பளம் வருகிறது. அந்த சிறு தொகையில் பட்டண வாஸத்தில் வாடகைகொடுப்பதா? மூன்று ஆத்மாக்கள் பசிக்காமல் சாப்பிடுவதா! துணிமணிகளை வாங்கிக்கொள்வதா? தமக்குள்ள ஒரே ஒரு செல்வனாகிய நாராயணனுக்கு வேண்டிய வசதிகள் செய்வதா?

பாக்யலக்ஷ்மி மகா கெட்டிக்காரி. சகல அம்சத்திலும் பொறுமையுடன் சகித்துக்கொண்டு சிரித்த முகத்துடன் இருக்கும் பெரியசக்தி அவளிடம் இருப்பதனால்தான் அவளைப் பல பெரியமனிதர்கள்வீட்டுப்பெண்மணிகள் நம்பி வேலைக்கு வைத்துக்கொண்டு உதவிசெய்துவருகிறார்கள். தன் சாமர்த்தியத்தினாலேயே தானும் வேலை செய்து சம்பாதித்து மகனைப் படிக்கவைத்து முன்னுக்குக்கொண்டுவந்து இன்று அவன் 150 ரூபாய் சம்பளத்தில் எடுத்தஎடுப்பில் ப்ரகாசிக்கும்படியாய் அமைந்தது.

நாராயணன் தாயாரின் எல்லை காணாத சந்தோஷத்தைக் கண்டு மிகவும் உள்ளுக்குள் பூரித்துப்போய்த் தாயார் சொல்லியபடி தகப்பனாரிடம் சொன்னான். வாய் நன்றாகப் பேசவாவில்லையேயன்றி படிக்கவோ எழுதவோ அவருக்கு எத்தகைய குறைவும் இல்லை. ஆத்ம ரக்ஷணத்திற்கான ஒரு புத்தகத்தை அவர் படித்துக்கொண்டிருந்தார்.

மகனைப் பார்த்ததும் "வாப்பா! குழந்தாய்! போனகாரியம் என்னவாயிற்று?" என்கிற விஷயங்களை அரைகுறை வார்த்தையினாலும் சமிக்ஞையினாலும் கேட்பதற்குள் அவன் பிதாவை நமஸ்கரித்துச் சந்தோஷச் செய்தியைக் கூறினான். உள்ளுக்குள்ளே பொங்கிவரும் வாத்ஸல்யத்தின் வேகத்தை அப்படியே கொட்டியளந்துகுதூகலிக்க சக்தியற்றதனால் கண்ணீர் மடமட வென்று வழிந்துவிட்டது. அப்படியே மகனைச்

சேர்த்து அணைத்து உச்சிமுகந்து ஆசீர்வதித்து வாழ்த்திய தோடு, தான் அப்போது படித்துக்கொண்டிருக்கும் புத்தகத் தில் தான் அப்போது படிக்கும் கட்டத்தைக் காட்டிப் படிக் கும்படி சமிக்ஞை செய்தார். உடனே நாராயணன் அதைப் பார்த்தான்.

"ஏ மனிதா! உன்னை உலகம் நன்கு மதிக்கவேண்டு மானுல் முதலில் நாம் என்கிற அகங்காரம் சாகவேண்டும். உன்னையே நீ மறந்து உன்னைச் சுற்றி உள்ள பரந்த உல கத்தை நீ நன்ருகப் பார்க்கவேண்டும். சர்வவ்யாபியாய் ஸர்வ ரக்ஷணசக்தனுய் உள்ள ஜகத்பிதாவின் ஸன்னிதானத்தில் உன்னைப்போன்ற உயர்ந்த மனிதன்தான் பேறு பெற்று வாழ் வான் என்று நீ உன் உயர்ந்த பிறவியைமட்டும் கண்டு எண்ணி விடாதே. ஸர்வ உலகத்தையும் ஸமநோக்கினுல் கண்டுபேரின் பத்துடன் ரக்ஷிக்கும் பகவானுக்கு உயர்ந்த மனிதன்முதல் ஈ எறும்பு ஈராயுள்ள சகல ஜீவஜந்துக்களும் ஒன்ருகவே தோன்றும். ஆறறிவு படைத்து உயர்ந்த மனித ஜன்மம் எடுத்துள்ள ஒரே மமதையினுல் மனிதன் மனிதத்தன்மையை அடியோடுமறந்துமிருகத்திலும்கேவலமாகிவிடுகிருன்! மிருகங் களோ தமக்கு இப்பிறவியில்தான் ஆறறிவு இல்லையே; மறுபிறவி யிலாவது ஆறறிவு கிடைக்குமா? என்று ஏங்குகின்றனவாம்.

அதனுலேயே பகவான் மிருகங்களையும் மனிதர்களையும் சமமாகவே ரக்ஷித்து அரிய பெரிய செயல்களை நம்போல் வார்கள் கண்டுகடைபிடித்து முக்தி பெறுவதற்காகவே செய்து காட்டியிருக்கிருன். காக்காஸுரன் ஜடாயு முதலிய பக்ஷிகள், விபீஷணர் முதலிய அரக்கர், சபரிபோன்ற வேடுவச்சி, கீழ்ச் சாதி என்று குறைகூறும் இனத்தைச் சார்ந்த திருப்பாணாழ் வார், நம்பாடுவான், அத்புதமான சந்தனத்தைக் கொடுத்த கூனி, ஆனை, வானரம், அணில்பிள்ளை, முதலிய பலபல வித மான ஆத்மாக்களை ரக்ஷித்து அபயங்கொடுத்துள்ள பரம ரகஸ்யத்தை முதலில் மனிதன் அறிந்துகொள்ளவேண்டும். எத்தகைய மனிதனும் தனக்கு உயர்ந்த நிலை வந்த காலத்தில் உத்தமலக்ஷணங்களினின்றும்ஒருபடிவழுவிவிடுகிருன். பணமும் பட்டமும் பதவியும் தலைக்கேறும் வேகத்தி. தன் கடமையும், தர்மமும், பக்தியும் தலையைவிட்டுக் கீழே இறங்கிவிடுகின்றன. இதன் பலன் மனிதனை மகா பாவியாக்கிப் படுகுழியில் தள்ளி விடுவதை பணத்திமிரில் அறிவதில்லை.

ஸ்வர்க்கத்தில் இன்பததுடன் இருப்பவர்கள்கூட அந்த புண்யம் எத்தனை நாளைக்கு இருக்கிறதோ அத்தனைவரைக் குந்தான் ஸ்வர்ககவாஸம். புண்யம் முடிந்துவிட்ட உடனே தடாரென்று பூலோகத்தில் தள்ளிவிடுகிருர்கள். இந்த மகா ஸூக்ஷ்மத்தை முதலில் நாம் அறிந்துகொள்ளவேண்டும். புண் யமே தேடாத பாவியாகவே காலத்தைக் கடத்திவிட்டால்

இந்த ஆத்மா என்றுதான் உயர்நிலை அடைவது. மனிதன் சரீர ரக்ஷணத்திற்காகவும் குடும்ப ரக்ஷணத்திற்காகவும் எத்தனை பாடுபட்டபோதிலும் ஒரு நாளைக்கு ஒரு மணி காலமாவது ஆத்ம ரக்ஷணத்திற்கான வழியில் நேரத்தைச்செலவு செய்துகொள்ளவேண்டும். எது செய்தாலும் செய்யாவிட்டாலும் மனித தர்மம், கடமை என்கிற இரண்டையும் வழுவாமல் அகங்கார மமகாரங்களைவிட்டு சதா ஆனந்தமும் மனத்தில் அமைதியும் குடிகொண்டு வாழ்க்கைநடத்தினால் அதுவே மற்ற காரியங்களைத் தானாகச் செய்துகொண்டுபோகும். இதற்கு உதாரணம்: சரியான முறையில் செப்பனிட்டு நன்றாகிய ரோட்டில் மாடுகளை வண்டியில் கட்டிவிட்டுவிட்டால் அது தன்போக்காகப் போய்ச் சேரவேண்டிய இடத்தில் சேர்ந்துவிடும். அதுபோல் மனத்தை முதலில் அகங்காரம் என்கிற கரடு முரடு முள்ளு கல்லு முதலியவைகள் இல்லாது செப்பனிட்டு அமைதியை அஸ்திவாரமாகப் போட்டு சாந்தி என்கிற சமநிலையாக்கிவிட்டு வாழ்க்கை - வண்டியைச் செலுத்தினால் அபாயமின்றித் தன் கடமையைச் செய்துகொண்டு லட்சிய பூர்த்தியை அடையும். செய்கை பூராவும் உத்தம மார்க்கத்திலேயே ப்ரகாசிக்கும். எதிரில் வரும் பயங்கர மோட்டார் முதலிய வேகமான வண்டிகளையும் கண்டு பயப்படாது தானே விலகி வழிவிட்டு பயங்கரவிபத்தை அப்புறப்படுத்திவிட்டுத் தான் செல்லும். இதுதான் முக்ய ரகஸியம். இந்த நன் மார்க்கத்தை யாவரும் நன்குணர்ந்துவிட்டால் இகத்திலும் சுகமடையலாம். பரத்திலும் க்ஷேமமடையலாம்.''

என்றதோடு ஒருஅத்யாயம் முடிவு வரையில் படித்த நாராயணனுடைய மனம் அவனை மீறிப் பூரித்தது. பிதாவின் கடமை புத்திபுகட்டிக் கல்வி போதிப்பதாகும். அதை அவர் இப்புத்தகத்தின் மூலம் செய்துகாட்டிவிட்டதாகவே அவன் உள்ளம் கட்டுமீறிக் களித்தது. உடனே மறுபடியும் பிதாவை வணங்கி ''அப்பா! நான் என்னால் கூடியவரையில் கடமையை விட்டு வழுவாது பக்தியுடன் நடக்கிறேன். கர்வத்திற்கும் அகங்காரத்திற்கும் இதயத்தில் இடமின்றி பாதுகாத்துக்கொள்கிறேன். என் முன்னறி தெய்வங்களாகிய உங்கள் உபதேசம் இருக்கையில் எனக்கென்ன குறைவு? அப்பா! நான் கோயிலுக்குச் சென்றுவருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றான். பிதாவின் முகத்தில் ஆனந்தமே குடிகொண்டது.

3

நாராயணன் கோயிலுக்குச் சென்று நமஸ்கரித்துப் பின் தனக்கு வாரச்சாப்பாடு போட்டு உதவும் வீடுகளுக்குச்சென்று அவர்களை வணங்கி, ''தாயே! நீங்கள் அன்புடன் அன்னம்

இட்டு உதவியதன் பலன் எனக்கு உத்யோகம் கிடைத்து விட்டது. எதை மறந்தாலும், தன்னைத் தான் மறந்தாலும் தனக்கு உதவி புரிந்தவர்களிடம் செய் நன்றி மறந்தவர்களுக்கு விமோசனமேகிடையாதுஎன்பதை திருவள்ளுவர் வெகு ஸார மாகக் கூறியிருப்பதை என் ஜென்மாவில் நான் என்றும் மறக்கமாட்டேன். என் தாயார் செய்த தவமே எனக்கு இப்பேறு கிடைத்தது'' என்று அவர்களுக்கும் நற்செய்தி கூறிவிட்டு வந்தான்.

உண்மையில் அவனுக்கு வாரச் சாப்பாடு போட்ட சிலர் நாராயணனுக்கு உத்யோகம் கிடைத்த உடனே தங்களை மறந்தேபோய்விடுவான், தலைக்கிறுக்குதான் அதிகமாகிவிடும் என்று எண்ணியிருந்தார்கள். இம்மாதிரி செய்வதைக்கண்டு அவ்வாறு எண்ணியவர்களே வியப்புற்றார்கள்.

அந்தக்காலத்தில் சில ஏழைப்பையன்கள் முனிஸிபாலிடி லாந்தரில் படித்துப் பெரிய உத்யோகஸ்தர்களாகிய தாகச் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இன்று நாராயணன் வாரச் சாப்பாடு சாப்பிட்டு இராச்சாப்பாட்டு வீட்டில் விளக்கிலேயே படித்துவிட்டு எடுத்த எடுப்பில் 150 ரூபாய் சம்பளம் வாங்கி விட்டானே!'' என்று தமக்குள் வியந்தார்கள்.

உத்யோகம் ஆன அன்று எப்படி தன் முன்னறி தெய்வங்களிடம் கூறி மகிழ்ந்தானோ அதேபோல் முதல்தரம் சம்பளம் வாங்கியதும் தன் முன்னறிதெய்வங்களிடம் கொடுத்து வணங்கிநமஸ்கரித்ததோடு "அப்பா! அம்மா! நான் உங்களைக் கெஞ்சி மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இனி நீங்கள் இரு வரும் வேலைக்கே போகக்கூடாது. இத்தனைகாலம் உங்கள் சரீரத்தைச் செருப்பாய் உழைத்து என்னைக் காப்பாத்தி யது போதும். கடவுள் இனி கண் திறந்து நமக்கொரு வழியைக் காட்டிவிட்டார். இனியும் கஷ்டப்பட நான் கண்டு சகிக்கமாட்டேன். ஸோடாபாக்டரி உத்யோகமும் பத்துத் தேய்த்துத்தேய்த்து கை தேய்ந்துபோன பரிதாபமும் போதும். என்ஆவலை மறுக்காமல் இன்றோடு அதற்கு முற்றுப் புள்ளி வைத்துவிடுங்கள்'' என்று கண்ணீர்பெருகக் கூறினான்.

தன் சம்பளத்தில் முதல்முதல் செலவு கோயிலில் பகவா னுக்குச் செய்துவிட்டு ஒரு ஏழைக்குடும்பத்திலுள்ள தம்பதி களுக்கும் இரண்டு குழந்தைகளுக்கும் உடைகள் வாங்கிக் கொடுத்து மகிழ்ந்த நல்ல நோக்கத்தைப் பார்த்து பெற்றோர் களே மகிழ்ந்தார்கள்.

மிகவும் நெருக்கடியான சிறிய சந்துவீட்டில் குடியிருந்து கஷ்டப்பட்டாலும் இந்த வீட்டைவிட்டு வேறு வீட்டிற்குக் குடிபோக பாக்யலக்ஷ்மியம்மாள் விரும்பவில்லை. படிப்பு முடிந்து 150 ரூபாய் சம்பளத்தை ஒரே மட்டாகக் கண்ணால்

பார்க்கும் பாக்யத்தை அளித்த வீட்டைவிட்டுப் போகக் கூடாது என்று உறுதியாய்த் தோன்றிவிட்டதால் அதே வீட்டில் மற்றொரு தனி அரையை வாடகைக்குச் சேர்த்து அமைத்துக்கொண்டு மிகவும் பரிபூரண சந்தோஷ வாழ்க்கையையே நடத்திவந்தாள்.

பாக்யத்திற்கு அவள் வேலைசெய்யும் வீடுகளில் கொடுத்த புடவைகளைத் தவிர தான் ஒரு நூலிழைகூட வாங்கியது கிடையாது. தன் மகன் சம்பாதித்து முதல்முதல் வாங்கிக் கொடுத்த சேலையே இவளுக்குப் பீதாம்பரத்திற்கும் மேலாகத் தோன்றியது. பாக்யம் முன்போல் சம்பளத்திற்கு வேலை செய்வதில்லை எனினும் தான் பழகிய வீடுகளுக்கு அடிக்கடி சென்று தன்னாலான உதவியைச் செய்யாமலிருப்பதேஇல்லை.

பாக்யலக்ஷ்மிக்குக் கூடப்பிறந்தவர்கள் யாரும் இல்லை என்றாலும் சுற்றுபட்ட மனிதர்கள் உறவினர்கள் ஏராளமாய் உண்டு. பாக்யலக்ஷ்மி என்றுமே ஏழைதான். அதிலும் அவள் கணவனுக்கு வாய்போய்விட்டபிறகு சுற்றத்தினர்களுக்கு இவளைக் கண்டாலே இளப்பம். சாதாரண வேலைக்காரியைப் போலுள்ள இவளைத் தமக்கு உறவு என்று சொல்லிக்கொள்ளவும் சிலர் வெட்கி தங்கள் வீட்டு விவாகம் முதலிய சுபாசுபங்களுக்குக்கூட இவளைக் கூப்பிடுவதையே விட்டுவிட்டார்கள்.

ஒரு சிலர் கடிதம் போடாமலேயே காரியங்கள் நடந்த பிறகு எப்போதாவது பார்க்க நேர்ந்தால் தாம் கடிதம் போட்டதாகவும் தபாலில் தவறிவிட்டதாகவும் தாமே ஒரு கற்பனைக் குண்டைவீசித் தப்பித்துக்கொள்ளப்பார்ப்பார்கள். ஒரு சிலர்மட்டும் கடிதம் போடுவதும் உண்டு. எப்போதாவது சிறு உதவி செய்வதும் உண்டு. ஆனால், பாக்யலக்ஷ்மி தன் நிலைமையறிந்து ஒரு உறவினர் வீட்டுக்கும் போகவேமாட்டாள். அவள் மகா ஏழையாயினும் அவளது உள்ளம் மிகச் சிறந்த நிறைந்த செல்வவந்தர்களுக்குமேல் பூரிப்பும் அறிவும் மிகுந்ததாகும்.

தான் ஏன் போகவேண்டும்? தன்னைப் பிறர் ஏன் பரிகஸித்துப்பேசவேண்டும்?...தன் கணவனைப்பற்றி ஏன் அவமரியாதையாய்ப்பேசவேண்டும்? அதுதாளாமல் தான் ஏன் சண்டை போட்டு மனஸ்தாபப்படவேண்டும்? நம்மோடிருக்கட்டும் நம் நிலைமை. பகவான் இருக்கிறான் ரக்ஷிப்பதற்கு; ஏழ்மை நிலைமையுடன் ஒருவரிடம் போகக்கூடாது...என்று ஒரே தீர்மானத்திலேயே உறுதியாக இருந்துவிட்டாள்.

இன்று பாக்யலக்ஷ்மியின் மகன் ஜில்லாவுக்கெல்லாம் முதலில் B. A. பாஸ்செய்த உடனேயே பெரிய உத்யோகமும் கிடைத்துவிட்டதை யறிந்தபிறகு இனி கேட்கவேண்டுமா!

அற்றகுளத்தி லறுநீர்ப் பறவைபோல் ஓடி விலகிநின்ற ப்ரக்ருதிகள் சிலர் இந்த விஷயத்தைக் கேட்டதும் வெகுவெகு

வியப்படைந்து தம்தம் பெண்ணைக் கொடுக்கப் போட்டியிடத் துணிவது சகஜந்தானே!

பாக்யலக்ஷ்மி கோயிலிலிருந்து புஷ்பம்முதலிய ப்ரஸாதங்களுடன் வந்து தன் கணவனுக்குக் கொடுத்துவிட்டுப் பேசிக்கொண்டிருக்கையில் வாசலில் பாக்யலக்ஷ்மியின் பேருக்குக் கடிதம் வந்திருப்பதை யறிவித்துத் தபால்காரன் கூப்பிட்டதைக் கேட்டுஉண்மையில் பாக்யலக்ஷ்மி வியந்து நோக்கினாள். இதுவரையில் அவளுக்குத் தனிப்பட்ட முறையில் கடிதமே வந்ததில்லை யாகையால் மிகுந்த வியப்புடன் அதை வாங்கிக்கொண்டு சிரித்தபடியே உள்ளே வந்தாள். "நாராயணா! நீயே படித்துக்காட்டு. நானும் அப்பாவும் கேட்டுவிடுகிறோம். நான் இப்போதே சொல்கிறேன். உன்னுடைய 150 ரூபாய் சம்பளத்திற்கும் ஜில்லா முதலில் பரீக்ஷை பாஸ்செய்த பெருமைக்கும் இக்கடிதம் என் பந்துக்களின் படையெடுப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். உம்!...படி பார்க்கலாம்" என்றாள். நாராயணன் படிக்க வாரம்பித்தான்

"அம்மணி நமஸ்காரம்! உபயக்ஷேமம். நான் யாரோ முன்பின் தெரியாத அன்னியன். அத்தகைய நான் திடீரென்று இக்கடிதம் எழுதுவதைக்கண்டு நீங்கள் வியப்புறலாம். அல்லது கோபிக்கலாம். வெறுக்கலாம். எனினும் நான் என் கடமையைச் செய்யும் முறையில் இதை எழுதுகிறேன். தங்களிடம் நான் நேரில் பழகியதில்லை! ஏன்? நேரில் பார்த்துப் பேசியதுகூட இல்லை. தாங்கள் வேலை செய்துவந்த இடத்தின் மூலம் தங்களுடைய சிறந்த குணத்தையும் ஒழுக்க சீலத்தையும் கேள்விப்பட்டுச் சந்தோஷமடைந்திருப்பதால் இதை எழுதுகிறேன். தங்கள் குமாரன் நாராயணனை எனக்கு நேருக்குநேர் தெரியாது. அவனும் மகாகுணவான், பொறுமையின் பொக்கிஷம் என்று எனக்குத் தெரியும். ஆதலால் இதை எழுதுகிறேன். மாசு மறுவற்ற முறையில் வாழ்வு செலுத்தும் உங்கள் குமாரர் ஆபீஸில் ஒரு உதவாக்கரை நபருடன் பழகுவதை அங்கு வேலையாயுள்ள என் பிதா அடிக்கடிக் கண்டு வருத்தப்பட்டு இதை எப்படி அவனிடம் சொல்வது என்ற பெரிய யோசனையிலிருக்கிறார். பெரியவர்களைவிட என் போன்ற சிறிய வாலிபர்களுக்குப் படபடப்பும் துடிதுடிப்பும் அதிகம். அதனால் நானே பெரியதனமாக இதை எழுதுகிறேன். மகா உத்தமராகிய உங்கள் குமாரர் பழகும் வேதகிரி என்கிற மனிதன் மகா கொடியவன். பரம நாஸ்திகன். துர்க்குணத்தில் எத்தனை விதங்கள் உண்டோ! அத்தனையும் ஒரு உருவாக வந்தப் பிண்டம் அவன். அவனால் நாசமடைந்த குடும்பங்கள் கணக்கிலடங்கா. கட்டிய மனைவியைத் தள்ளிவிட்டு தகாத ஒருத்தியை மணந்ததாகப் பொய்கூறி வீட்டுடன் வைத்து வாழ்க்கையை மிகவும் இழிவான முறையில்

நடத்துகிறான். இவனுக்கு வேண்டியது பணத்தைத்தவிர வேறு ஒன்றுமே இல்லை.

உங்கள் மகனிடம் அவன் இத்தனை தூரம் பழகுவதற்குக் காரணம் அவனுடைய வைப்பாட்டியின் மகளை உங்கள் மகனுக்கு மணத்தை முடித்துவிடுவதற்கும் அல்லது உங்கள் மகனைக்கொண்டு ஆபீஸ் பெரிய அதிகாரியைக் காக்கா பிடித்துத் தான் பின்னும் உயர்ந்த பதவிக்குச் செல்லவும் ஏதாவது ஒரு தகராறில்உங்கள் மகனையே மாட்டிவிட்டு அவருக்குத் தீம்புகள் உண்டாக்கிவிடுவதற்கும் அம்மனிதன் துணிந்திருப்பதால் நீங்கள் உங்கள் மகனிடம் சொல்லி இந்த துர்ச்சகவாஸத்தின்விபத்தைவிலக்கி முன்னெச்சரிக்கையாகக்காப்பாற்றுங்கள். உங்கள் நலனுக்காகவே இதை உங்களுக்கு எழுதுகிறேன். உங்கள் மகன் அவனுடைய புதல்வியைச் சந்திப்பது பெருந்தீமை விலைக்கு வாங்குவதாகும்! இங்ஙனம்,

உண்மை விளம்பி

பாவம்! இந்த பயங்கரமான கடிதத்தைப் படிக்கும் போதே நாராயணனின் சரீரம் பயத்தினால் நடுங்கியதோடு குரலும் கம்மித் தொண்டையை அடைத்துக் கண்ணீரை முட்டச்செய்தது. பாக்யலக்ஷ்மிக்கும் ஏதோ செய்து கலக்குகிறது. 'பெயரும் இல்லை. ஊருமில்லை. இதென்ன கடிதம்?' என்று ஒருபுறம் நெஞ்சு கொதிக்கிறது. நிரபராதியான நாராயணனுக்குக் கடிதத்திலுள்ள கடைசீ வரி அவனை அப்படியே அக்கினியில் தூக்கிப்போட்டதுபோல் எரித்தது. உடம்பு வெயர்வையினால் ஸ்நானம் செய்ததுபோலாகிவிட்ட பரிதாபத்தைக் கண்ட பாக்யலக்ஷ்மியைவிட அவள் கணவருக்குப் பாவம் துக்கம் பீறிக்கொண்டு வந்துவிட்டது. கண்களைத் துடைத்துக்கொண்டு மகனைச் சேர்த்துக்கட்டித் தழுவி விசனப்படாதிருக்கும்படி சமிக்ஞைகள் செய்து அவர் தன் வழக்கப்படி ஒரு சிறந்த புத்தகத்திலிருந்து ஒரு பக்கத்தை எடுத்துக் கொடுத்துப் படிக்கச்செய்தார். பிதாவின் ஆக்கினையின்படி படிக்க வாரம்பித்தான்:

"பகவானே ஒரு சூத்திரதாரி. அவனால் அமைக்கப்பட்ட உலகமே ஒரு நாடகமேடை. நாடகத்தின் காட்சிகளோ! பாத்திரங்களோ! சிந்தனைகளோ! ரஸங்களோ! அளவிட்டுச் சொல்லமுடியாது. மனிதர்களால் படைத்துள்ள நாடகத்திற்கே அளவிடமுடியாதபொதன்றால் ஸஹஸ்ரநாமதாரியான பகவான் வகுத்துள்ள விஷயங்களுக்கு ஆதியுமில்லை அந்தமும் இல்லை. கணக்கும் இல்லை வழக்குமில்லை. அத்தகைய பயங்கரமான ப்ரபஞ்ச நாடகத்தின் ஒவ்வொரு பாத்திரமாகத்தான் மக்கள் பிறக்கிறார்கள். தன்தன் பாத்திரத்தின் அளவு தனக்கே தெரிவதில்லை. தன்னைவிட மற்றவர்களுடையது சுலப

மாகவும் ருசிகரமாகவும் உயர்வாகவும்கூட சிலர் எண்ணுகிருர்கள். அம்மாதிரிஎண்ணமே சிலருடைய வாழ்வைச் சிதற வடித்துவிடுகிறது. தனக்கென்று பகவான் கொடுத்துள்ள அளவைத் தான் அனுபவித்து நடத்தியே ஆகவேண்டும். ஆகையால் பின்னடையக்கூடாது என்ற உறுதிதான்எத்தகையவர்களுக்கும் அவசியம் வேண்டும்.

வாழ்க்கைப்புயலில் உள்ள பயங்கரம் ஒன்றிரண்டல்ல. நாம் எதிர்பார்ப்பது சிறந்த வாழ்வும் சுகவாழ்வும்தான். ஆனல், பகவான் வகுத்துக்கொடுப்பது அவரவர்களின் கர்மானுஸாரத்திற்கேற்ப பயங்கரமான சோதனைவாழ்வுதான் கிடைக்கிறது. அந்தசோதனை என்கிற பரீக்ஷையில் தேறி கால வெள்ளத்தில் நீந்தி ஜெயிக்கிறவர்களுக்குத்தான் பகவான் சரியானபடி ரக்ஷணத்தைக்கொடுக்கிருன் உன்வாழ்க்கைச்சக்கரத்தை உன்னல்ஓட்டமுடியாது எத்தனையோ அக்கப்போர்கள் தடைசெய்யும். வழிமறிக்கும். பயங்காட்டி உறுமும். முதுகை அழுத்தும். காலையே பிடித்திழுக்கும். சக்கரத்தை வேறு மார்க்கத்தில் திருப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும். கானல் நீரைக் கண்டு ஓடும் மானைப்போல் வெறும் உருவெளித்தோற்றத்தில் பலபல இன்பங்களைக்காட்டி மனத்தை மயக்கவைத்து நாசமுறச்செய்யும். அவைகளுக்கு உன்னிதயத்தில் இடங் கொடுக்காதே. அவைகளைக் கண்டு மிரளாதே. சமுத்திரத்தில் ஸ்நானம் செய்வபன் கால்களை அழுத்தமாக ஊன்றிக் கொண்டு நின்ருல் பெரிய் அலைகளால் அவனை அசைக்க முடியாது போய்விடும். அலைகள் ப்ரம்மாண்டமாக வரும்போது நீந்தத்தெரிந்தவர்கள் கூடபக்குவமாக அலையுடன் கலந்து கூட எழும்பிவிட்டால் அலையை ஜெயித்துவிடலாம். இதுபோல் எத்தனையோ உபமானங்கள் கூறலாம்; ஆகையால் நீ எந்த சமயம் எத்தகைய பயங்கரமோ! விபத்தோ! வீண் அபவாதமாகிய மிரட்டல் பூசல் முதலியவைகளோ நேரும்போது உன்னுடைய உறுதியை விட்டுப் பிறழாமலும் உலகரக்ஷகனின் திருநாமத்தை மறக்காமலும் அந்த நாமமே நமக்குத் துணைபுரியும் சிறந்த பலமாகும் என்பதை உணர்ந்து நாமத்தை பஜித்து நாசத்தை ஜெயிக்கவேண்டும். திருநாமஸங்கீர்த்தனத்தினுல் த்ரௌபதியின்போபத்து நீங்கியது. அதே போல்நாமத்தினுல்ஒரு ஆனையின் மகத்தான துன்பம்விலகியது. நாமத்தினுல் பேறுபெற்ற கோடிக்கணக்கான பக்தர்களின் சரிதையைப்பார்க்கிருேம். ஆகையால்நீ எதற்கும்பயப்படாதே. உறுதியை இழக்காதே''

என்றதோடு அந்த அத்யாயம் முடிந்ததும் தகப்பனுரை அப்படியே காலைப்பிடித்துக்கொண்டு நமஸ்கரித்தான். ''அம்மா! அப்பா! அக்கடிதத்தில் மற்ற எதையும் நான் லக்ஷியம் செய்யவில்லை. கடைசீ வரிதான் என்னிதயத்தைப் புண்ணக்குகிறது.

நல்லவேளையாக இக்கடிதம் என்னெதிரிலேயே வந்து நானே படித்துவிட்டதால் உங்களுடைய கவலை சிறிது குறைந்தது. நீங்கள்மட்டும் படித்திருந்தால் என்னைப்பற்றி எத்தனை தூரம் வித்யாஸ எண்ணங்கள் உண்டாகி மனங்கலங்கியிருக்கும்!...பகவான் தான்காப்பாற்றுகிருர். எனக்கு ஹிதத்தைச் செய்த அந்த மனிதன்யாரோ அவனை திக்கு நோக்கி வணங்குகிறேன். வேதகிரியிடம் நான் அன்பாக நடப்பது உண்மைதான். அவன் அத்தகைய தூர்த்தன் என்று இதுவரையில் தெரியாது. இனி உஷாராக இருக்கிறேன். என்மீது கோபிக்காமல் மன்னித்துவிடுங்கள்'' என்று கூறி வருத்தப்பட்டான்.

அதே சமயம் ''வேதகிரி உங்களைக் கூப்பிடுகிருர்'' என்று ஒருவன் வந்து தெரிவித்ததைக் கேட்டதும் மூவரும் குழம்பித்திடுக்கிட்டார்கள். என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் நாராயணனின் நெஞ்சு துடித்தது.

பாக்கியலக்ஷ்மி தைரியத்துடன் நாராயணனை உள்ளே இருக்கச்செய்து தான் வீதிக்குச்சென்று எட்டிப்பார்த்தாள். ஒரு ப்ரம்மாண்டமான காரில் இரண்டு மூன்று ஆண்களும் இரண்டு மூன்று பெண்களும் உட்கார்ந்திருப்பதையும் அத்தனைபேரும் ஸிகரேட்டை ப்ரமாதமான ஸ்வாரஸ்யத்துடன் பிடித்துக்கொண்டு அசல் சோதாக்கள் என்பதைக் கண்களின் பார்வையினுல் காட்டியபடியே உட்கார்த்திருப்பதையும் உற்றுக் கவனித்துப்பார்த்தாள். அவளையப்படியே தீயில் தூக்கிப்போட்டது போன்ற பெரிய அதிர்ச்சியும் ஒரு விதமான வெறுப்பும் உண்டாயின. எங்கிருந்தோ ஒரு ஆத்திரமும் பீறிக்கொண்டுவந்தது. அப்படியே தம்பித்துப் பதுமைபோல் நின்றுவிட்டாள். அவளுடைய உள்ளத்தில் ஒரு பெரும் புசல்காற்று அடித்துச் சுழற்றியது.

4

வீதியில் காருடன் உட்கார்ந்துள்ள வேதகிரியின் கோஷ்டியார் நாராயணனின் வரவுக்காக எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் பாக்யம் வீதியில் வந்து எட்டிப்பார்த்துத் திடுக்கிட்டு நின்றதைக் கண்ட நாராயணனுக்கு விஷயம் இன்னதென்று புரியாமல் சற்றுத் திகைப்புற்று அம்மாவை ஜாடை காட்டி அழைத்தான்.

அதேசமயம் வீதியில் மேளதாளத்துடன் ஒருசுமங்கிலியின் பிணத்தைத் தூக்கிச்சென்ருர்கள். நிம்மதியின் சாசுவத நிலையை அடைந்துள்ள அந்தம்மாளின் முகத்தில் ஒரு தேஜஸ் பளிச்சென்று தெரிவதுபோல் மஞ்சளும் குங்குமமும் தலையில் ஒரு கட்டு புஷ்பமும் கழுத்தில் புஷ்பமாலையும் நல்ல மஞ்சள்

துணியின் மூடியுடன் செல்லும் அந்தப் பிணத்தைப் பார்த்த சில பெண்களின் உள்ளம் "அடாடா! என்ன பாக்யசாலி! சுமங்கலியாய் மகாலக்ஷ்மியைப்போல் போகிருளே! இப்படியல்லவா பெண்களுக்குக் கிடைக்கவேண்டும்! என்ன செல்வமிருந்தால் என்ன? மற்ற எந்த சுகமிருந்தால் என்ன? இம்மாதிரி கிடைப்பதுதான் சரியான பாக்யமாகும்! இப்படியே எங்களுக்கும் கொடுத்து எங்கள் குறையைத் தீர்த்துவிடு ஆண்டவனே!"...என்று வேண்டியது.

அந்தம்மாளின் கணவனும் மக்களும் கதறிச்செல்லும் கோரக்காட்சியின் பரிதாபமோ சொல்லமுடியாது. "அம்மா! அம்மா"...என்று கத்தும் தீனக்குரல் ஒவ்வொருவருடைய இதயத்தையும் கிளறிக் கண்ணீரைக் கக்கவைத்தது.

இத்தகைய பரிதாபகரமான காட்சியைக்கண்டு வண்டியிலுள்ள வேதகிரியும் அவன் கோஷ்டியினரும் கடகடவென்று பெரிதாகச் சிரித்த சிரிப்பொலி பிணப்பறையின் பேரொலியையும் மீறிக்கொண்டு வெளிக்கிளம்பியது. இதைக்கண்ட பாக்யத்தின் உள்ளமும் நாராயணனின் உள்ளமும் நடுங்கியது. "வீதியோடுபோகும் எந்தப்பிணத்தைப் பார்த்தாலும் உள்ளம் தானே உருகிவிடுவது மனித இயல்பான உணர்ச்சியாயிருக்க, இம்மாதிரிகருங்கல்உள்ளம்படைத்தவர்களைப்பார்த்ததேஇல்லை. இதென்ன இரும்பு உள்ளம் படைத்த கொடிய மனிதர்கள்! இவர்களைப் பற்றிக் கடிதத்தில் படித்து இன்னும் 5 நிமிஷங்கள் கூட ஆகவில்லை. இதற்குள் கண்ணாடியில் பொருளைப் பார்ப்பதுபோல் இந்த மனிதர்களின் துர்க்குணத்தையும் கிராதக உள்ளத்தையும் பகவான் நிதர்சனமாக எடுத்துக்காட்டிவிட்டாரே! என்ன ஆச்சரியம்?" என்று நாராயணனும் பாக்யமும் நினைத்து வியப்புற்றார்கள்.

அந்த நினைப்பை இன்னும் ஊர்ஜிதப்படுத்துவதுபோல் வண்டியிலுள்ளவர்கள், "அழுகையைப் பாரு! வெக்கமில்லாமே வீதியில் அழுவதாம்! தூத்தூ!..ஏன்? அந்தப்பிணத்துடன் இவங்களும் எரிஞ்சுபோவதுதானே! பிணத்துக்கு சிங்காரமாம்! தாரையாம் தம்பட்டையாம்! செத்த பிணத்தைத்தூக்கி சமுத்திரத்திலே போட்டுவிட்டு இதுக்காக செலவழிக்கிற பணத்தை ஆனந்தமான வழியில செலவு பண்ணுமல் இதென்ன தண்டச்செலவு...அந்த குட்டியெ பாத்தியா? அம்மா...அம்மான்னு பாட்டு பாட்ரா......குட்டி ஷோக்கா இல்லே!......டேய்! திம்மா! இந்த நபரை ஒரு கண்வெச்சுபாத்துக்கோ! என்ன?"...என்று விமர்சனமும் திட்டமும் வேறுபோட்டுப் பேசியது அருகிலுள்ள பாக்யத்தின் காதில் நன்ருகக்கேட்டு உடல் சிலிர்க்கச்செய்தது.

அதேசமயம் பெரிய குடைக்கமலா ஆரஞ்சு பழத்தை இரு கூடையுடன் எடுத்துக்கொண்டு ஒரு கிழவி இந்த

வீட்டிற்குள் வந்தாள். இந்த கிழவியைக் கண்ட வேதகிரி "ஏய்! கிழவி! இங்கே கொண்டுவா பழத்தை!" என்று ஒரு இறுமாப்புடன் அதட்டுபோட்டான். கிழவி கூடையுடன் காருக்கருகில் சென்று பழத்தை எடுத்துக்காட்டினாள்.

ஆளுக்கொரு பழமாக உரித்துத் தின்றுகொண்டே விலையைக்கூட கேட்காமல் அட்டகாஸம் செய்வதைக்கண்ட கிழவி "சாமி! டஜன் ஒன்னரை ரூபாயிங்க! ஒரு டஜன் திண்ணுப் புட்டீங்களே!" என்று முடிப்பதற்குள் கூடையுடன் பழத்தை எடுத்துக் காரில் கொட்டிக்கொண்டு கூடையை தூரவிட்டெறிந்துவிட்டு கிழவியைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தபடியே காரை வேகமாக விட்டுக்கொண்டு போய்விட்டார்கள்.

ஆனால், கிழவி சற்றும் சளைக்கவோ! விசனப்படவோ இல்லை. ஒரு பெரிய சிரிப்பு சிரித்துக்கொண்டே கூடையை எடுத்துப் போவதைக்கண்ட பாக்யத்தின் வியப்பும் இந்த மூடுமந்திர மர்மத்தின் செயலும் ஒன்றுமேபுரியாது திகைத்தாள். "ஏழைக் கிழவியின் வாயில் மண்ணைப் போட்டுவிட்டாளே! அவள் என்னமாய்க் கத்தி இரைந்து அழப்போகிறாளோ! சண்டைபோடப்போகிறாளோ! தெருவில் கூட்டம்கூடிவிடுமோ!" என்றெல்லாம் எதிர்பார்த்த நாராயணனுக்கும் பாக்யத்திற்கும் இந்த சம்பவம் ஒரு விடுகதையைப் போலவே தோன்றியது. சுமார் 100 பழத்திற்குக் குறையாமலிருந்ததை அப்படியே கொள்ளையடிப்பதுபோல் அடித்துவிட்டதை கிழவி எப்படி பேசாமல் சகித்தாள்"...என்று இவர்கள் ஒருவருக்கொருவர் பேசி வியந்தனர்.

கார் மாயமாய் 50 மைல் வேகத்தில் மறைந்தது!...பல தெருக்களைத் தாண்டுவதற்குள் சுமார் 50 பழத்திற்குமேல் காலியாகிவிட்டது. அந்தப் பழத்தில் பெரிதாய் இருந்த ஒரு பழத்தை எடுத்து வேதகிரி உரித்தான். அதில் பழமே இல்லாது அதற்குப் பதில் ஒரு கடிதம் இருப்பது கண்டு திடுக்கிட்டு கடிதத்தைப் பார்த்தான்:

"ஸ்ரீமான் வேதகிரியவர்களே! நீர் உலகத்திலுள்ள பலரையும் ஏமாற்றும் வீரராக இருக்கலாம்! ஆனால், இந்தத் துப்பறியும் வீரசிங்கம் ராஜாராம நாயுடுவை நீர் ஏமாற்ற முடியாது என்பது நினைவிருக்கட்டும். நீர் பாழும் வீட்டில் கைகால்களைக் கட்டிப்போட்டுவிட்டுவந்த அதே நாயுடுதான் அந்தப்பழக்கூடைக்காரக்கிழவியாய் வந்தாள்; ஜாக்ரதை! கொலைக்குற்றமும் கொள்ளைக்குற்றமும் உமது சமீபத்தில் தானிருக்கின்றன என்பது நினைவிருக்கட்டும்." என்றதைப் படித்ததும் காரின் வேகத்தைவிட வேகமாக இதயம் அடித்துக்கொண்டது!

83168

புத்தக விமர்சனம்.

திருப்பாவை—நாலாயிரப்படி.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும் வேதமனைத்துக்கும் வித்தாகுங் கோதை தமிழாகிய திருப்பாவைக்கு முன்னோர்களால் பல வியாக்கியானங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் பெரியவாச்சான் பிள்ளை யருளிச்செய்த மூவாயிரப்படியும், அழகியமணவாளப்பெருமாள்நாயனார் அருளிச்செய்த ஆறுயிரப்படியுமே ஸ்ரீவைஷ்ணவவுலகிற் பெரும்பாலும் காலக்ஷேபநூல்களாகப் பரவியுள்ளன. இவை தவிர, ஆயிரப்படி, ஈராயிரப்படி, நாலாயிரப்படி, ஐயாயிரப்படி என்னும் வியாக்கியானங்களுமுண்டு. ஆயிரப்படியும் ஐயாயிரப்படியும் அச்சேறப் பெறவில்லை. ஈராயிரப்படியும் நாலாயிரப்படியும் முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னமே சென்னை ஸ்ரீவைஷ்ணவக்ரந்தமுத்ராபக ஸபையாரால் தெலுங்குலிபியில் அச்சிடப்பட்டிருந்தன. அவற்றுள் நாலாயிரப்படி யென்னும் வியாக்கியானம் இப்போது திருவல்லிக்கேணி வேத வேதாந்தவர்த்தினீ சபையாரால் ஸபையின் எண்பதாமாண்டு மஹோத்ஸவ வெளியீடாக தமிழ்லிபியில் வெகு நேர்த்தியாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. இது திருநாராயணபுரம் ஆய் என்கிற ஜநந்யாசார்ய ஸ்வாமியருளிச் செய்தது.

இவ்வுரை மிக்க சுருக்கமும் மிக்க பெருக்கமுமின்றி அமைந்திருக்குமழகு அன்பர்கள் அநுபவித்தே யறியத்தக்கதாம். உரையில் மேற்கோளாக எடுத்தாளப்பட்டுள்ள திவ்யப் பிரபந்தப் பாசுரங்கட்கும் ஸ்ரீராமாயணம்முதலிய வடநூல்சுலோகங்களுக்கும் ஆகரமும் எடுத்துக் காட்டப்பட்டிருப்பது மிகவுதவியாகவுள்ளது. இதன் விலை ஒரு ரூபாய். கிடைக்குமிடம்: ஷை சபையின் காரியதரிசி ஸ்ரீ ஆசால் சேஷாசாரியர், அட்வொகேட், 2 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி. —ப்ர. அ.

திருப்பாவையும், கோதாஸ்துதியும்

இவ்வருடம் மார்கழி மாதத்தில் ஆஸ்திகர்களுக்கு குறைந்த விலையில் நிறைந்த செல்வமாக ஷை நூல் அளிக்கப்பட்டுள்ளது. ஷை இரு அரிய கிரந்தங்களை விரிவுமின்றி குறைவுமின்றி முகவுரை கருத்துரையுடன் இரு சிரோமணிகள் K. வரதாசாரியர், A. R. க்ருஷ்ணமாசாரியர் விளக்கியுள்ளனர். விலை, அணு நான்கே தான். கிடைக்குமிடம்: M. K. ஸ்ரீநிவாஸன், 16 பேயாழ்வார் கோவில் தெரு, திருவல்லிக்கேணி.

எம்பெருமானருடைய திவ்விய சரிதம்.

ஹிந்து தர்மத்திற்கும் விசேஷமாக, ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்திற்கும் புத்துயிரளித்த பிரான் ஸ்ரீ பாஷ்யகாரர் விஷயமாக சிறிய வடிவில் ஒரு நூதன அனுபவமாக அமைந்துள்ளது இந்நூல். எம்பெருமானைக்காட்டிலும் எம்பெருமானருக்கே ஏற்றம் என்று பலபடியாகக் காட்டுவதையே முதல் அம்சமாகக் கொண்ட இந்நூல், ஸ்வாமி ராமானுஜரின் ஜீவதசையில் நடந்த முக்கிய சம்பவங்களின் சுருக்கத்துடனும், காலக்குறிப்புடனும், அவரது திருநாமங்களின் குறிப்புடனும் வெளியாகியுள்ளது. இதன் ஆசிரியர் M. தேவ ராஜுலு நாயுடு கர்ண பரம்பரையாகக் கேட்ட சில விஷயங்களையும் ஸ்ரீ காஞ்சீ ப்ர. அண்ணங்கராசாரியரிடம் க்ரஹித்த பல விஷயங்களையும் ஸாரமாகக் குறித்துள்ளார். ஸ்ரீ ப்ர.அ.ஸ்வாமி முகவுரை அளித்து கௌரவித்திருக்கிறார். விலை அணு 6. கிடைக்குமிடம் 23 ஜெனரல் முத்தியா முதலி தெரு, சென்னை. 1. —வை. மு. ஸ்ரீ.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5
Managing Editor: V. M. SRINIVASAN, M. A. B. L.